Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 மார்கழி 30 புதன்கிழமை (14.01.2015) பக்கங்கள் 20 ஓசை – 106

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

## நீதிமன்ற வாயிலில் வாள் வெட்டு; மல்லாகத்தில் நேற்று விபரீதம்

மல்லாகம் நீதிமன்ற வாயிலில் நடைபெற்ற வாள்வெட்டுச்சம்பவத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

மல்லாகம் நீதிமன்றுக்கு வழக்கு விடயமாக வந்த இளைஞர்கள் இருவர் அதை முடித்துக் கொண்டு வீடு திரும்புவதற்காக நீதிமன்றத்துக்கு வெளியில் காத்திருந்த சமயம் இனந்தெரியாதோரின் வாள் வெட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று நண்பகல் இடம்பெற்றது. படுகாயமடைந்த இருவரும் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். சம்பவத்தில் சுதுமலை மானிப்பாயைச் சேர்ந்த மகாராசா துஷாந்தன் (வயது -20), ஸ்ரீகரன் ஸ்ரீசங்கர் (வயது -24) ஆகிய இருவருமே படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து தெல்லிப்பளைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைக்க ஏற்பாடு

### பெற்றோல் உட்பட 10 பொருட்களுக்கு

பெற்றோல் உள்ளிட்ட 10 அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைக்கும் வகையிலான இடைக்கால வரவு செலவுத்திட்டமொன்றை எதிர்வரும் 29ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

தனது கடமைகளைப் பொறுப்பேற்ற வேளையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

சர்வமத அனுஷ்டானங்களின் பின்னர் தமது கடமைகளை அவர் பொறுப்பேற்றார்.

இதன்போது, தமது அமைச்சின் எதிர்கால நடவடிக்கை குறித்து ஊடகவியலாளர்களுக்கு நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெளிவுபடுத்தினார்.

பொருளாதாரத்தின் உண்மையான நிலை என்னவென்பது குறித்து தெளிவூட்ட வேண்டியிருப்பதாகக் குறிப்பிட்ட அவர், 100 நாட்களுக்குள் 10 நுகர்வுப் பொருட்களின் விலைகள் குறைக்கப்படும் என பொதுமக்களுக்கு உறுதி வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

# நல்லிணக்கம் நிலவும் நாடாக இலங்கையை பார்க்க விரும்புகிறேன்

## பாப்பரசர் தெரிவிப்பு



மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் மத மற்றும் அரசியல் நல்லிணக்கம் உள்ள நாடாக இலங்கையை காண்பதே எனது அபிப்பிராயம் என்று பரிசுத்த பாப்பரசர் முதலாம் பிரான்ஸிஸ் திருத்தந்தை தெரிவித்துள்ளார்.

உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நேற்றுக் காலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் விசேட விமானம் மூலம் இலங்கையை வந்தடைந்த பாப்பரசர், கட்டுநாயக்க விமான நிலைய வளாகத்தில் இடம்பெற்ற வரவேற்பு நிகழ்வில் உரையாற்றிய போது இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை, பாப்பரசரின் விஜயம் இலங்கைக்கு பாக்கியம் என கருதினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

இலங்கை வந்த பரிசுத்த பாப்பரசரை கருதினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோர் வரவேற்றனர். இந்த வரவேற்பு நிகழ்வில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

மூன்று நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு பரிசுத்த பாப்பரசர் முதலாம் பிரான்ஸிஸ் திருத்தந்தை நேற்று இலங்கை மண்ணை வந்தடைந்தார்.

பாப்பரசர் முதலாம் பிரான்ஸிஸ் திருத்தந்தையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதியின் பாரியார், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்

(19) ஆம் பக்கம் பார்க்க

## வடமேல் மாகாணசபை அரசுக்கு பூரண ஆதரவு

### தயாசிறிஜயசேகர அறிவிப்பு

வடமேல் மாகாண சபையின் முதலமைச்சர் தயாசிறி ஜயசேகர உட்பட மேல் மாகாண சபையின் அமைச்சரவை மற்றும் முன்னாள் ஆளும் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வேலைத் திட்டத்திற்கு ஆதரவு வழங்க தீர்மானித்துள்ளனர்.

வடமேல் மாகாண சபையில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போது முதலமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி எடுக்கும் அனைத்து தீர்மானத்திற்கும் கீழ் செயற்படவும் அனைத்து ஆளுகைக்கும் ஆதரவு வழங்கவுள்ளதாக முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

## காணாமற் போனோரை மீட்க பாப்பரசரிடம் முறையிட முயற்சி

பாப்பரசர் இன்று மடுத்திருப்பதிக்கு விஜயம் செய்கையில், அவரைச் சந்தித்து, காணாமற் போயுள்ள தமது பிள்ளைகளைத தேடிக் கண்டு பிடிப்பதற்கு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்குமாறு கோருவதற்காக போரின் போதும் அதன் பின்னரும் காணாமற் போயுள்ளவர்களின் குடும்பத்தினர் வவுனியாவில் இருந்து மடுவுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

காணாமற் போயிருப்பவர்களைக் கண்டுபிடித்துத் தருமாறு எண்ணற்ற தடவைகள் அரசாங்கத்திடமும், முன்னாள் ஜனாதிபதியிடமும் தாங்கள் கோரிக்கை விடுத்திருந்த போதிலும் எதுவித பதிலும் இன்னும் கிடைக்கவில்லை என்று அவர்கள் கூறினர்.

அதேபோன்று ஐ.நா. மன்றம் உள்ளிட்ட சர்வதேச அமைப்புக்களிடமும் தாங்கள் தமது கோரிக்கையை முன்வைத்ததாகவும், ஆயினும் பயனேதும் ஏற்படாத நிலையில், இலங்கை வந்துள்ள பாப்பரசரிடம் தமது கோரிக்கையை முன்வைத்து மன்றாடுவதற்காகத் தாங்கள் செல்வதாக அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தனர்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## ஊவா மாகாணசபையும் கைமாறும் சாத்தியம்

ஊவா மாகாணசபையின் ஆட்சி ஐக்கிய தேசியக் கட்சி வசமாகவுள்ளது. முதலமைச்சராக எதிர்க்கட்சித் தலைவராக செயற்படும் ஹரீன் பெனாண்டோ நியமிக்கப்படவுள்ளார்.

ஹரீன் பெனாண்டோவை முதலமைச்சராக நியமிக்கும்படி கோரி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஊவா மாகாண சபை உறுப்பினர்கள் நால்வர் ஊவா ஆளுநருக்கு சத்தியக்கடிதம் அனுப்பியுளளனர்.

சத்தியக்கடிதம் அனுப்பிய நால்வரில் ஒருவர் ஊவா மாகாண விவசாய அமைச்சர் அநுர விதானகமகே என தெரியவந்துள்ளது.

மேலும் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவு தெரி

(19) ஆம் பக்கம் பார்க்க

## இந்தியா செல்கிறார் மங்கள

வெளிவிவகார அமைச்சராக சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட மங்கள சமரவீர நேற்று தமது உத்தியோகபூர்வ பணிகளை ஆரம்பித்துள்ளார்.

இந்தநிலையில், இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜின

(19) ஆம் பக்கம் பார்க்க



# டெங்கு நோய் பரம்பல் தீவிரம்; விசேட கட்டுப்பாட்டு நடவடிக்கை

யாழ்.மாவட்டத்தில் கடந்த நவம்பர், டிசம்பர் மாதங்களில் பெய்த பருவ மழைக்கு பின்னர் டெங்கு நோயின் பரம்பல் தீவிரமடைந்துள்ளது. கடந்த வருடத்தில் யாழ்.மாவட்டத்தில் ஆயிரத்து 378 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டது உறுதிப்படுத்தப்பட்டது. இதேவேளை கடந்த டிசம்பர் மாதத்தில் யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 14 வயதுடைய சிறுவன் ஒருவன் டெங்கு நோயினால் உயிரிழந்துள்ளார் என யாழ்.பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

டெங்கு நோயின் தாக்கமானது யாழ்.மாவட்டத்தில் இவ் வருடத்தின் தை மாதத்தில் இற்றைவரை 100 இற்கும் மேற்பட்ட நோயாளிகள் இனங்காணப்பட்டதுடன், நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 16 வயதுடைய மாணவனின் இறப்பிற்கும் காரணமாக அமைந்துள்ளது. குறிப்பாக யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலும், நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலுமே மிகவும் அதிகளவான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளார்கள்.

டெங்கு நோயின் அபாய நிலையைக் கருத்திற்கொண்டு குறித்த பகுதிகளில் பல்வேறு செயற்திட்டங்கள் முன்னெடுக்கப் படவுள்ளன. இவ் விசேட வேலைத திட்டத்தில் ஒரு அங்கமாக, 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த சகல சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளைச் சேர்ந்த வெளிக்கள உத்தியோகத்தர்கள் அனைவரும் நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட டெங்கு பரம்பல் தீவிரமாக உள்ள வண்ணார் பண்ணை, நாவாந்துறை, குருநகர் பகுதிகளிலும் விசேட டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கையில் ஈடுபட உள்ளனர். இவர்கள் குழுக்களாகப் பிரிந்து அனைத்து வீடுகளையும், இந் நிறுவனங்களையும் பார்வையிட்டு டெங்கு கட்டுப்பாட்டு ஆலோசனைகளை வழங்க உள்ளனர். எனவே பொதுமக்கள் அனைவரும் தமது வீடுகளையும், சுற்றாடல்களையும் டெங்கு நோயை பரப்பும் நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்களை அழித்து ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம். இதேபோல இப்பிரதேச நிறுவனங்களின் தலைவர்களும் தமது நிறுவனத்தையும், சுற்றாடலையும் துப்புரவாக பேணுமாறும் கேட்டுக் கொள்கிறோம்.

இதற்கு . ஒத்துழைப்பு வழங்காத குடியிருப்பாளர்களிற்கும், நிறுவன தலைவர்களிற்கும் எதிராக டெங்கு நோயின் அபாய நிலையைக் கருத்திற்கொண்டு சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்பதனை மனவருத்தத்துடன் தெரிவித்து கொள்கிறேன். இவ் விசேட வேலைத்திட்டத்தில் சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்களுடன் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சுகாதார தொண்டர்கள், உள்ளூராட்சிமன்ற உத்தியோகத்தர்கள், சுற்றாடல் பாதுகாப்பு பொலிஸார் ஆகியோர ஈடுபட உள்ளனர்.

டெங்கு நோயானது சுகாதார திணைக்களத்தால் மட்டும் கட்டுப்படுத்த கூடியதல்ல. இதற்கு சம்பந்தப்பட்ட சகல திணைக்களங்களினதும், நிறுவனங்களினதும், உள்ளூராட்சி மன்றங்களினதும், பொது அமைப்புக்களினதும், பொது மக்களினதும் ஒத்துழைப்பு மிக அவசியமானது. எனவே யாழ் மாவட்டத்தில் பொதுமக்களை இந் நோயிலிருந்து காக்கவும் வீணான உயிர் இழப்புகளை தவிர்க்கவும் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் தத்தமது பங்களிப்பை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## DDTV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | புதன்கிழமை |
|---|---|
| Am 05.00 | ஆலய தரிசனம் (பக்திப் பாடல்கள்) |
| Am 07.00 | காலைக் கதிர் |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | கொஞ்சம் கலாட்டா |
| Am 09.55 | காலை செய்திகள் |
| Am 10.00 | ஆரோகனம் |
| Am 10.30 | சிரிக்க சிரிக்க |
| Am 11.30 | அதிர்வுகள் |
| PM 12.30 | Hello DD |
| PM 01.00 | மதிய செய்திகள் |
| PM 01.30 | திரைப்படம் |
| PM 03.55 | மாலை செய்திகள் |
| PM 04.00 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | அதிர்வுகள் |
| PM 08.00 | பிரதான செய்திகள் |
| PM 08.30 | Hello DD |
| PM 09.00 | திரைப்படம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

## கூட்டுறவுச் சங்க நிர்வாகம் தெரிவு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சபை நேற்று தெரிவு செய்யப்பட்டுள்ளது. கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நேற்றுக் காலை 10.00 மணிக்கு நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சபை தவிசாளராக செ.குலசந்திர சேகரம், உப தலைவராக செ.துரை சிங்கம், செயலாளராக கு.தவ யோகநாதன், உப செயலாளராக கு.புவனேந்திரன், பொருளாளராக திருமதி கு. விஜிதராணி ஆகியோருடன் நான்கு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (81)

## பெயர் மாற்றம்



பட்டிக்குடியிருப்பு, நெடுங்கேணியைச் சேர்ந்த இதுவரை காலமும் கந்தையா குலசேகரம் என அழைக்கப்பட்டு வந்த நான் இன்றிலிருந்து எனது பெயரை கந்தையா குலசேகரக் குருக்கள் என மாற்றியுள்ளேன் என்பதனை யாவருக்கும் அறியத்தருகின்றேன்.

(C/3992) க.குலசேகரக் குருக்கள்.

## DDTV யின் பொங்கல் நல்வாழ்த்துக்கள்

### பொங்கல் நிகழ்ச்சிகள்

### 15.01.2015

| நேரம் | நிகழ்ச்சிகள் |
|---|---|
| காலை 05.00 - 07.00 | ஆலய தரிசனம் |
| காலை 07.00 - 08.00 | சிறப்பு காலைக்கதிர் |
| காலை 08.00 - 09.00 | நாளிதழ் நேரம் |
| காலை 09.00 - 10.00 | கொஞ்சம் கலாட்டா |
| காலை 10.00 - 01.00 | DDTV பொங்கலோ பொங்கல் |
| மதியம் 01.00 - 01.30 | மதிய நேர செய்தி |
| மதியம் 01.30 - 04.30 | பொங்கல் சிறப்புத் திரைப்படம் |
| மதியம் 04.30 - 08.00 | DDTV பொங்கலோ பொங்கல் |
| இரவு 08.00 - 08.30 | பிரதான செய்திகள் |
| இரவு 08.30 - 09.00 | DDTV பொங்கலோ பொங்கல் |
| இரவு 09.00 - 11.30 | ஆங்கிலத் திரைப்படம் தமிழாக்கம் |
| இரவு 11.30 - 12.00 | நீங்காத நினைவுகள் |

உங்கள் DDTV யில் பொங்கல் தின சிறப்பு நிகழ்ச்சிகளுடன் இணைந்திருங்கள்

அனுசரணை : சார்லஸ் சவுண் சேவை
மேர்க்கண்டேல் பாதுகாப்புச் சேவை
கிருபா சாரதி பயிற்சி பாடசாலை
தமிழ் அலுமினிய பிற்றிங்

## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் **1126** | திகதி **12.01.2015**

வெற்றி எண்கள்: **15 18 33 63** | ஆங்கில எழுத்து: **I**

**ஜக்பொட் பரிசு ரூ. 1,04,95,000/= வெல்லப்படவில்லை**

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 1,04,95,000/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 10 | 50,000/= | ரூ. 5,00,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 260 | 1,000/= | ரூ. 2,60,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 468 | 1,000/= | ரூ. 4,68,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11425 | 60/= | ரூ. 6,85,500/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 5871 | 40/= | ரூ. 2,34,840/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 149356 | 20/= | ரூ. 29,87,120/= |
| ஆங்கில எழுத்து | 21756 | 20/= | ரூ. 4,35,120/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 6,570,580/=


**எதிர்வரும் வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா. 10,787,260/=**

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2015.01.15 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3981)

# அரச உத்தியோகத்தரின் வீட்டுத்திட்டத்தில் அடிப்படை வசதிகள் எதுவும் இல்லை



(வவுனியா)

வவுனியா, ஓமந்தையில் அமைக்கப்பட்டுள்ள அரச உத்தியோகத்தர்களுக்கான வீட்டுத்திட்டத்தில் போதுமான அடிப்படை வசதிகள் எதுவும் செய்து கொடுக்கப்படவில்லை என அவர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

வவுனியா ஓமந்தை வேப்பங்குளத்தில் உள்ள காடுகளை அழித்து வவுனியாவில் கடமையாற்றும் 600 அரச உத்தியோகத்தர்களுக்கு 2011 ஆம் ஆண்டு காணிகள் வழங்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் காணிகளுக்கு செல்வதற்கான வீதிகள் அமைத்து கொடுக்கப்பட்ட நிலையில் அரச உத்தியோகத்தர்களை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் வீடுகளை அமைத்து அங்கு வசிக்குமாறு அதிகாரிகளால் பணிக்கப்பட்டிருந்தது.

அரச உத்தியோகத்தர்கள் பலர் ஆர்வமாக வீடுகளை பெரும் பணச்செலவில் அமைத்தபோதிலும் அங்கு வசிப்பதற்கு ஏதுவாக வீதிகள் அமைத்து கொடுக்கப்படாமலும் அயலில் உள்ள காடுகள் அகற்றப்படாமலும் காணப்பட்டமையினால் மக்கள் வாழ்வதற்கு அச்சமானதும் ஏதுவானதாகவும் அமையாமல் இருந்தது.

இந்த நிலையில் அப்பகுதியில் வசிக்கும் அரச உத்தியோகத்தர்கள் தமக்கான அமைப்பை உருவாக்கி பல்வேறு கோரிக்கைகளை அரச அதிபரிடம் விடுத்தபோதிலும் அவற்றில் பல நிறைவேற்றப்படாமையினால் வர்த்தக நிலையங்களுக்கு செல்லுதல், காட்டு விலங்குகளில் இருந்து பாதுகாப்பு, வீதி அமைப்புகள் என்பவற்றினால் நித்தமும் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான காரணங்களால் பல அரச உத்தியோகத்தர்கள் இன்றுவரை அங்கு குடியேற முடியாமல் உள்ளதாகவும் இவர்கள் குடியேறாமையினால் அங்கு குடியேறியுள்ள 48 குடும்பங்களும் அச்சமான சூழலில் வாழ்ந்து வருவதாகவும்விசனம்தெரிவித்துள்ளனர்.

# பிணையில் விடுதலை

கிளிநொச்சி டிப்போ சந்தியில் அமைந்துள்ள உணவகமொன்றை அடித்து நொருக்கிய சந்தேகநபரை 75 ஆயிரம் ரூபாய் பெறுமதியான சரீரப்பிணையில் செல்ல கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.ஐ.வகாப்தீன், திங்கட்கிழமை அனுமதியளித்தார்.

அத்துடன், வழக்குத் தவணையை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். சந்தேகநபர் கடந்த 9ஆம் திகதி உணவகத்தை அடித்து நொருக்கி 1 இலட்சத்து 300 ரூபாய் பெறுமதியான பொருட்கள் சேதமாக்கியதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எண்ணைக்கசிவால் பாதிப்பு விழிப்புணர்வுக் கருத்தரங்கு





(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை சுகாதார வைத்தியதிகாரி பிரிவிலுள்ள கிணறுகளில் எண்ணெய்க் கசிவால் ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து பொதுமக்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கு தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் வைத்திய அதிகாரி ப.நந்தகுமார் தலைமையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

அளவெட்டி, மல்லாகம், கட்டுவன், இளவாலை, மல்லாகம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட மக்கள் இதில் கலந்துகொண்டனர்.

தெல்லிப்பளை சுகாதார வைத்தியதிகாரி பணிமனையில் வைத்திய அதிகாரி ப.நந்தகுமார் உரையாற்றுகையில் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள 1200 இற்கும் மேற்பட்ட கிணறுகளில் எண்ணெய்க் கசிவு ஏற்பட்டுள்ளதாகவும், அந்நீரை குடிநீராகப் பயன்படுத்தினால் எதிர்காலத்தில் பிறக்கும் குழந்தைகள் மூளை பாதிப்படைந்த குழந்தைகளாக பிறப்பர் எனவும், புற்றுநோய், எலும்பு சம்பந்தமான நோய்கள் ஏற்படலாம் எனவும் கூறினார்.

தமக்கான குடிநீர் தேவையை நிவர்த்தி செய்யும் பொருட்டு பிரதேச சபையால் குடிநீர்த் தாங்கிகள் வைத்து குடிநீர் விநியோகம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கையை முன்வைத்தனர்.

# உதவிப்பணம் அதிகரிப்பு

(வரணி)

சமூக சேவைப் பிரிவினூடாக 70 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான உதவிப்பணம் 2015 தை மாதத்தில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டு 1000 ரூபா வீதம் பெற்ற வயோதிபர்களுக்கு தற்போது 2000 ரூபா வீதம் வழங்கப்படுகிறது.

இப்பண அதிகரிப்பு தமக்கு பெரிய ஆறுதலாக உள்ளதாக கூறிய வயோதிபர்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.. மேலும் 70 வயதுக்கு கீழ்ப்பட்ட உதவிப்பணம் ,பெறுவோருக்கு பழைய நடைமுறையின் அடிப்படையிலேயே வழங்கப்படுகிறது. (150)

# வருந்துகிறோம்

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் படுகாயமடைந்த திருஞானம் பிரகாஷ் (வயது 23) கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக நேற்று எமது பத்திரிகையில் வெளியான செய்திக்கு வருத்தம் தெரிவிக்கின்றோம்.

கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்ட சுன்னாகம் சிவன்கோவிலடியைச் சேர்ந்த குறித்த இளைஞர் தொடர்ந்தும் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவருதவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் எமது பத்திரிகையில் வெளியான செய்தியால் மன உளைச்சலுக்கு ஆளான அவரது குடும்பத்துக்கும் அவரைச் சார்ந்தவர்களுக்கும் எமது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

# அடங்கா(பழிவாங்கும்)ப் பசி!

மாற்றத்தை ஏற்படுத்திவிட்டோம் என்று மகிழும் இலங்கையின் புதிய அரசியல் போக்கில் பழிவாங்கல் உணர்வுகளுக்கு இடமில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் உறுதிபடத் தெரிவித்துள்ளனர்.

ஆனால், மகிந்த ராஜபக்ஷவை தோற்கடிக்க வேண்டும் என்ற பழிவாங்கல் உணர்வுடன் மட்டுமே இந்த மாற்றத்துக்காக வக்காலத்து வாங்கிய பல தமிழர்களும், தாம் எதிரிகள் அல்லது துரோகிகள் என்று கருதிய இன்னும் பலரையும் பழிவாங்குவதற்காகத் துடித்துக்கொண்டிருக்கின்றனர்.

இதில், ஒரு காலத்தில் தாம் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடிய விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆயுத பல ரீதியாக பலப்படுத்தி வந்தவர் என்று இலங்கை அரசாங்கத்தினால் குற்றஞ்சுமத்தப்பட்டு கைதுசெய்யப்பட்ட கே.பி.யை கைதுசெய்யவேண்டும் என்ற உணர்வும் முன்னிலைப்படுத்தப்படுகிறது.

கைதுசெய்யப்பட்ட பின்னர் அவர் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்துடன் இருந்தார் என்று இவர்கள் நம்புகின்ற ஒரு விடயமே அவரை புதிய அரசாங்கம் கைதுசெய்ய வேண்டும் என்கின்ற இவர்களது விருப்பாசைக்கு ஒரே காரணமாக இருக்கிறது.

அதனால்தான், தமது விருப்பத்துக்கு ஏற்றாற்போல் கே.பி. நாட்டைவிட்டு தப்பிச் சென்றுவிட்டார் என்ற கதையைப் பரப்பி. கருணாவும் தப்பினார், டக்ளசும் தப்பினார் என்றெல்லாம் தங்களுடைய விருப்பாசைக் கனவுகளை ஊ(ட)கச் செய்திகளாகப் பரப்பி இவர்கள் மனமகிழ்ந்திருந்தனர்.

புலிகளுக்கு ஆயுதங்களை வாங்கிக் குவித்தவர் என்பதற்காக ஒரு காலத்தில் இவர்களால் பெரும் தியாகியாகக் கருதப்பட்ட கே.பி., இப்போது இவர்களுடைய பார்வையில் துரோகி. கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் நூற்றுக்கணக்கான ஆதரவற்ற சிறுவர்களைப் பராமரிக்கும் செஞ்சோலை மற்றும் அன்பு இல்லம் ஆகியவற்றை நடாத்தி இன்றைய நிலையில் ஒரு முக்கியமான பணியை முன்னின்று செய்துவரும் அவரை போட்டுத்தள்ள வேண்டும் என்ற இவர்களது விருப்பாசையை என்னென்பது?

மத்தியில் மாற்றத்தை ஏற்படுத்தியதாகக் கூறும் ஆட்சியாளர்களில், ரணில் விக்கிரமசிங்கா போன்ற சிங்கள தலைவர்களாக இருந்தாலும் சரி, ஹக்கீம் போன்ற முஸ்லிம் தலைவர்களாக இருந்தாலும் சரி பழிவாங்கும் உணர்வுக்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது என்பதில் தெளிவாக இருக்கிறார்கள். இது, அவர்களது நிலை தளம்பாத ஆரோக்கியமான அரசியல் கலாசாரத்தின் சிறப்பையே சுட்டுகிறது.

ஆனால், தமிழ்க்குணம்..........?

மகிந்தாவைப் பழிவாங்கிவிட்டோம். இனி, கருணாவை, பிள்ளையானை, கே.பி.யை, டக்ளசை உள்ளே தள்ளுவோம் என்று ஆலாய்ப் பறந்துகொண்டிருக்கிறது.

இந்த அழிவுப்புத்தியிலிருந்து தமிழ்ச் சமூகத்துக்கு ஏதும் ஆக்கபூர்வமான காரியங்கள் நடந்தேறும் என்று யாரும் உண்மையாக நம்புகிறீர்களா...........?

இலங்கை அரசியலை எப்போதுமே உள்நாட்டு அரசியல் கட்சி, தலைவர்கள், சொந்த விருப்பு வெறுப்புக்கள், உரிமைக் கோஷங்கள், பழிவாங்கும் உணர்வு என்பவற்றின் அடிப்படையிலேயே பார்த்துப் பழக்கப்பட்டவர்கள், இந்துமா சமுத்திரத்தில் இலங்கைத் தீவின் பூகோள அமைவிடம் இலங்கை அரசியலில் தொடர்ச்சியாகவே செலுத்திக்கொண்டிருக்கும் செல்வாக்கைப் புரிந்துகொள்வதில்லை.

ஒரு வலைப்பதிவரின் கேள்வி இது:

"ஈழத்தமிழர்களைப் பயன்படுத்தி அமெரிக்கா இலங்கையில் சீனாவின் தலையீட்டை நீக்கியிருக்கிறது. இலங்கையில் ராஜபக்சவை நீக்கினால் சீனாவை வெளியில் துரத்தலாம், இதன்மூலம் இரத்தமின்றி, பொருட்செலவு, படைச்செலவு ஆகியன இன்றி அமெரிக்கா சீனாவை இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் இருந்து வெளியேற்றியிருக்கிறது, இதற்கு ஈழத்தமிழர்கள் சேவகம் செய்திருக்கிறார்கள். இதற்கு அமெரிக்கா என்ன கைமாறு செய்யப்போகிறது ஈழத்தமிழர்களுக்கு?..?..?"

சீனாவைப் புறந்தள்ளி அமெரிக்கா வென்றிருப்பது இருக்கட்டும். இதில் தமிழர்களுக்கு கிடைத்திருக்கும், அல்லது கிடைக்கப்போகும் வெற்றி என்ன? அதற்கான உத்தரவாதம் ஏதாவது உண்டா......?

தமிழ் வாக்குகளால் சாதித்துவிட்டோம் என்று மார் தட்டுபவர்கள் இதற்கு என்ன விளக்கம் தருவார்கள்?

– கோ . றுஷாங்கன் –

வாழ்க்கையில் எப்போதும், சமாதானத்தையும் சகிப்புத்தன்மையையும் நமது இலட்சியமாக கொள்ள வேண்டும். - பாரதியார்.

தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## பொறுப்பை தட்டிக்கழிக்கக் கூடாது!

புதிய அரசாங்கத்தின் வெற்றிக்கு உதவியவர்கள் என்ற வகையில், அரச தரப்பினருடனான முதல் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவர்களிடம் முன்வைத்த பிரதான கோரிக்கை டக்ளஸ் தேவானந்தா, விநாயகமூர்த்தி முரளிதரன், ரிஸாட் பதியுதீன் ஆகியோரை அரசாங்கத்தில் சேர்த்துக்கொள்ளக் கூடாது என்பதாகும்.

பழையபடி தங்களுக்குள் இழுத்து விழுத்திக் கொள்வதையே பெருங்குணமாய்க் கொண்ட 'தமிழ் நண்டு'க் கதைதான். இதை அரச தரப்பினரே சொல்லிச் சிரித்துக்கொள்கிறார்கள்.

எதிர் வேட்பாளராய்ப் போட்டியிட்டுத் தோல்வியுற்ற மகிந்த ராஜபக்ஷவே, புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை போனில் அழைத்து, "உங்கள் நூறு நாள் அரசியல் வேலைத் திட்டத்திற்கு ஒத்துழைப்பாக நடந்துகொள்வேன்" என்று வாழ்த்துச் சொல்லவும், பதிலுக்கு அவர் நன்றி சொல்லவுமாக அரசியல் நாகரிகம் பேணிக்கொள்கிறார்கள்.

தமிழ்க் கூட்டமைப்பினரோ தாங்கள் அரசாங்கத்தில் இணைந்து தமிழ் மக்களுக்கான தீர்வைக் கொண்டுவருவதிலோ அல்லது புதிய அரசுக்குத் தாங்கள் அளித்த ஆதரவுக்குப் பிரதியாக தீர்வுப்பேச்சுக்களை ஆரம்பிப்பதையும் மற்ற மற்ற தமிழ் மக்களின் உரிமைக் கோரிக்கைகளையும் வலியுறுத்திப் பெறுவதிலோ கூடுதல் முனைப்பைக் காட்டவில்லை.

அடுத்த முறைக்குமான தங்களது பாராளுமன்றக் கதிரைகளுக்கு இடைஞ்சலாக யார்யார் இருப்பார்களோ அவர்களைக் கழித்துக்கட்டும் வன்மத்திலேயே த.தே.கூ. வினர் குறியாயிருக்கிறார்கள்.

ரிஸாட் பதியுதீனுக்கு அமைச்சுப் பதவி கொடுத்ததற்கு மட்டும், தேர்தலுக்கு முந்தியே அவருக்கு அந்த வாக்குறுதி அளிக்கப்பட்டுவிட்டது என்பதைக் கூறி கூட்டமைப்பினருக்கான பதிலை முடித்துக்கொண்டு அடுத்த விஷயத்திற்குத் தாவியிருக்கிறார்கள் அரச தரப்பினர்.

இவர்களும் விடாமல், கடந்த அரசாங்கத்தோடு நெருக்கமாக நின்றவர்களுக்கெல்லாம் நீங்கள் அமைச்சுப் பதவிகளும் செயலாளர் பதவிகளும் கொடுக்கிறீர்கள், அதில் கவனமாக இருக்க வேண்டும் என்று வழக்கம்போல தங்களது அரசியல் எதிராளிகளுக்காக மூக்கறுக்கும் தமிழ்ப் புத்திமதியை அவர்களுக்கு வழங்கியிருக்கிறார்கள்.

அவர்கள் சிரித்துக்கொண்டே, "அப்பிடிப் பார்த்தால் நாங்கள் யாரையுமே எங்கள் கிட்டச் சேர்த்துக்கொள்ள முடியாது; அரசையும் நடத்த முடியாது" என்று இவர்களுக்கு அரசியல் யதார்த்தங்களைப் புரியவைத்து அனுப்பும்படி ஆகியிருக்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைப் பொறுத்தவரையில், அரச தரப்பினரிடம் போய் அவரைச் சேர்க்காதேங்கோ இவரை அண்டாதேங்கோ என்று இரகசியமாக கோள்கள் முடிந்துகொண்டிருப்பதை விட்டுவிட்டு அவர்கள் பகிரங்கமாக தமிழ் மக்களது உரிமைக் கோரிக்கைகளை அரசதரப்பினரிடம் வைக்க வேண்டும்.

பழைய அரசாங்கத்தை வீழ்த்தி புதிய அரசாங்கத்தைக் கொண்டுவந்ததன் பலாபலனை நமது மக்களுக்குக் கிடைக்கச்செய்ய வேண்டும். ஏறக்குறைய 70 வீத தமிழ் மக்களின் வாக்குகள் மைத்திரிபால சிறிசேனவிற்கே அளிக்கப்பட்டிருக்கின்றன. அதற்கு வகைசெய்த தமிழ்த் தலைவர்களின் அரசியலுரிமைக் கோரிக்கைகளை நிறைவேற்றும் கடப்பாடு புதிய அரசுக்கு உண்டு.

வாக்களித்த மக்கள் சார்பாக அவர்களது கோரிக்கைகளை தமிழ்க் கூட்டமைப்புத் தலைவர்கள் வெளிப்படையாக அரசிடம் முன்வைக்க வேண்டும். நூறு நாட்களில் அமையும் தேசிய அரசாங்கம் எத்தனை நாட்களில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முடிவை எட்டும் என்ற வாக்குறுதியைப் பெற்று மக்களுக்கு அறிவிக்க வேண்டும்.

அதைவிடுத்து, ஆறு மாதங் கழிந்தவுடன், "இந்த அரசாங்கமும் சரியில்லை; இதையும் மாத்திறதுக்கு எங்களுக்கு வாக்களியுங்கோ" என்று பழையபடி ஆரம்பிக்கக் கூடாது.

*- ஆசிரியர்*

## முன்னாள் ஜனாதிபதி மகிந்தாவுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் அமைச்சர்களான பசில் ராஜபக்ஷ, ரோஹித அபேகுணவர்தன, ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் ஆகியோருக்கு எதிராக இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியே இம்முறைப்பாட்டைச் செய்துள்ளதாக கட்சியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உட்பட்டவர்கள் அரச சொத்துக்களை வீணாக பயன்படுத்தியமை தொடர்பிலேயே முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக விஜித ஹேரத் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இதற்கிடையில் நாமல் ராஜபக்ஷவின் கார்ல்டன் சுப்பர் ஸ்போட்ஸ் நிறுவனம், சுற்றுலா சபையின் தலைவர் சேனங்க குணரத்ன, சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் ரூமி ஜெனிபர், தேசிய லொத்தர் சபையின் தலைவர் மற்றும் முன்னாள் சமுர்த்தி பணிப்பாளர் ஆகியோருக்கு எதிராகவும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி ஊழல்களில் ஈடுபட்டவர்களும் குடும்பத்தினரும் பெருமளவில் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

இந்நிலையில் ஏனையோரும வெளிநாடுகளுக்கு செல்லாமல் தடுக்கும் நோக்கிலேயே இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஹேரத் குறிப்பிட்டுள்ளதுடன் இதறகான அதிகாரம் ஆணைக்குழுவுக்கு இருப்பதாகவும் ஹேரத் தெரிவித்துள்ளார்.

## கால்நடை உற்பத்திவளத்தை மேம்படுத்த செயற்றிட்டம்

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த 2014ஆம் ஆண்டு 1472 மாடுகளும், 216 ஆடுகளும் செயற்கை முறையில் சினைப்படுத்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் என்.கௌரிதிலகன் நேற்று தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கால்நடை உற்பத்தி வளத்தை மேம்படுத்தும் வகையில் பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நல்லின ஆடு, மாடுகளை இனப்பெருக்கம் செய்யும் வகையில் செயற்கைமுறை சினைப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கரைச்சி பிரதேச செயலக பிரிவில் 918 மாடுகளுக்கும் 187 ஆடுகளுக்கும், கண்டாவளைப் பிரதேச செயலக பிரிவில் 333 மாடுகளுக்கும் 19 ஆடுகளுக்கும், பூநகரி பிரதேச செயலக பிரிவில் 154 மாடுகளுக்கும் 8 ஆடுகளுக்கும், பளைப் பிரதேச செயலகப் பிரிவில் 67 மாடுகளுக்கும் 2 ஆடுகளுக்கும் இவ்வாறு சினைப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## வடமாகாண சுற்றுலாத்துறை ஒன்றியத்தால் இளைஞர், யுவதிகளுக்கு இலவச பயிற்சிநெறி

(கொழும்பு)

வடமாகாண சுற்றுலாத்துறை ஒன்றியத்தால் இளைஞர், யுவதிகளுக்கான விருந்தினர் விடுதி இலவச பயிற்சி நெறிகள் காரை நகரில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வடமாகாண சுற்றுலாத்துறை ஒன்றியத்தின் நிர்வாக தலைவர் பி.யோ.சுந்தரேசன் தெரிவிததார்.

யாழிலுள்ள விருந்தினர் விடுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துக் கூறும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாட்டின் வளர்ச்சியானது சுற்றுலாத்துறையை நோக்கி தற்போது செல்கின்றது. 2014 ஆம் ஆண்டில் இருந்து 2016 ஆம் ஆண்டு வரை 2.5 மில்லியன் சுற்றுலா பயணிகள் நாட்டுக்குள் வருகை தருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அவர்கள் தமது தங்குமிடங்களை தேர்ந்தெடுப்பதற்கு இங்கு விடுதிகள் குறைவாக உள்ளது. குறிப்பாக வடமாகாணத்தில் விருந்தினர் விடுதிகள் அரிதாகவே காணப்படுகின்றன.

விருந்தினர் விடுதிப் பயிற்சி நெறியை ஆரம்பிப்பதன் மூலம் வடபகுதி இளைஞர், யுவதிகளுக்கு தொழில்வாய்ப்பு பெறுவதற்கு சிறந்த சந்தர்ப்பமாக அமையும். அது மட்டுமல்லாது வடபகுதியில் விடுதிகள் சிறப்புற செயற்பட வாய்ப்பும் உள்ளது.

6 மாத காலங்களைக் கொண்டதாக இந்த பயிற்சி நெறி அமைநதுள்ளது. இதில் முதற்கட்டமாக 160 பேர் உள்ளடக்கப்படவுள்ளனர். அனுமதி கட்டணமாக 1250 ரூபாய் அறவிடப்படும். இந்த 6 மாத காலப்பகுதியில் முதல் 3 மாதங்க்ள் தகைமை விருத்தி தொடர்பான கற்கைநெறிகள் வழங்கப்படும்.

கற்கைநெறியின் முடிவில் சர்வதேச தரம் வாய்ந்த (N.V.Q) வகைச்சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இதன் ஆரம்ப நிகழ்வு எதிர் வரும் 20 ஆம் திகதி காரை நகரில் அமைந்துள்ள தொழில் பயிற்சி அதிகார சபையில் இடம் பெறவுள்ளது. இந்தப் பயிற்சி நெறியில் இணைந்துகொள்ளவுள்ள மாணவர்களுக்கான நேர் முகத்தேர்வு 19 ஆம் திகதி யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெறும். இதற்கான விண்ணப்பங்களை யாழ் வீரசிங்கம் மண்டப கட்டடத்தில் அமைந்துள்ள இலங்கை தொழில் பயிற்சி சபையின் உதவிப்பணிமனைக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

அவ்வாறு அனுப்ப தவறுபவர்கள் 19 ஆம் திகதி இடம் பெறும் நேர்முகத்தேர்வில் சமர்ப்பிக்க முடியும். இந்தக் கற்கை நெறியில் 18 வயது தொடக்கம் 35 வயது வரையுள்ள இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும். கற்கைநெறி பயில இணைபவர்களுக்கு போக்குவரத்து வசதி செய்து கொடுக்கப்படும்.

தூர இடங்களில் இருந்து வருகைதரும் 25 மாணவர்களுக்கான தங்குமிட வசதி, உணவு, பகுதிநேர வேலை வாய்ப்பு என்பன வழங்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

## சஜின்வாஸ் குணவர்தனவை அரசுடன் இணைக்க வேண்டாம்

### பலப்பிட்டியவில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

கூட்டணியின் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தனவை அரசாங்கத்தோடு இணைக்க வேண்டாம் என்று பலப்பிட்டிய பிரதேச மக்கள் பஸ் தரிப்பிடத்தின் முன்னால் நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பலப்பிட்டிய ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதான உறுப்பினர் கமல் ஜயந்த டி சொய்சா, ருகுணு மக்கள் கட்சி தலைவர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அஜந்த சொய்சா மற்றும் பல வழக்கறிஞர்களும் இவ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சீர்கெட்டவர்களை அரசாங்கத்துடன் இணைக்க வேண்டாம், சஜின்வாஸ் குணவர்தன அரசாங்கத்தில் தற்போதே பாதுகாப்பை பெற்று வருவதாக அங்கு தெரிவிக்கப்பட்டது.

சஜின்வாஸ் குணவர்தனவை அரசாங்கத்துடன் இணைத்தால் தாங்கள் தீ வைத்து கொள்வதாக சிலர் பலப்பிட்டிய பஸ்தரிப்பிடத்தின் மேல் பெற்றோலுடன் அமர்ந்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

# மகிந்தவின் வீழ்ச்சி மற்றும் வரலாற்றின் முடிவு

**என்னுடைய எல்லா விமர்சனங்களையும் மீறி நான் மகிந்த ராஜபக்ஸவை அவரது மூன்று தேர்தல்களிலும் - 2005, 2010 மற்றும் 2015 - ஆதரித்தேன், ஏனென்றால் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் அவருடைய போட்டியாளர்களைக் காட்டிலும் அதிகமாக அந்த மதிப்புகளை நான் அவருடன் பகிர்ந்து கொண்டேன். இந்த முறை ஐந்து மில்லியன் மக்கள் அந்தக் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்கள். ஆனால் அது போதுமானதாக இருக்கவில்லை.**

**தயான் ஜயதிலக கட்டுரையிலிருந்து**

**“போர்களில் வெற்றி அல்லது தோல்வி ஏற்படலாம் - ஆனால் போராட்டம் நடந்துள்ளது;”**

**- சேகுவேரா**

ரி.என்.ஏ தலைமை, நீதியரசர் விக்னேஸ்வரனை முதலமைச்சராக அமர்த்துவதற்கு முன்பு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவை சந்தித்து வடக்கு மாகாணசபையை இயங்கு நிலைக்கு கொண்டு வந்தால் தங்களால் ஒரு மில்லியன் வாக்குகளைப் பங்களிப்புச் செய்ய முடியும் என்று சொன்னார்கள்.

அந்த நிகழ்ச்சி நிரலில் இருந்த முதலாவது விடயம் தற்பொழுது பதவியில் உள்ள ஆளுநர் ஜெனரல் சந்திரசிறிக்குப் பதிலாக ஒரு சிவிலியன் ஆளுனரை பதவியில் அமர்த்துவது என்பதாகும். அந்த கோரிக்கை நிராகரிக்கப் பட்டதுடன், ஜெனரல் சந்திர சிறியைத்தொடர்ந்து வைத்திருந்தது மட்டுமல்லாமல் அவருக்குப் பதவி நீட்டிப்பும் வழங்கப்பட்டது.

அந்த முடிவு கோட்டாபயவினால் முன் தள்ளப்பட்டது. அதன்படி ரி.என்.ஏயின் வாக்கு வங்கியின் ஒரு பகுதியை மகிந்த ராஜபக்ஸ பெற்றுக் கொள்ளவிருந்த கடைசி வாய்ப்பும் கை நழுவியது.

மகிந்த ராஜபக்ஸ வெளிநாட்டில் இருந்தபடியே அளுத்கம சம்பவத்தில் கலகம் ஏற்படுத்தும் பொது பல சேனா அணியினரை கைது செய்யும்படி உத்தரவிட்டுள்ளார் என கலாநிதி ராஜித சேனரத்ன தான் என்னிடம் சொன்னார். ஜனாதிபதி நாடு திரும்பியதும் அவரிடம் கையளிக்கப்பட்ட ஒரு புலனாய்வு அறிக்கை மூலம் அந்தக் கைது கைவிடப்பட்டது.

அப்படியான ஒரு கைது அநேகமாக நாடு தழுவிய ஒரு கலவரத்தை தூண்டிவிடும் என அந்த அறிக்கையில் எச்சரிக்கை செய்யப் பட்டிருந்தது. அந்த கைவிடல் கொள்கை பொது பல சேனாவின் உயர்மட்ட பிக்குகள் கோட்டாபயவை சந்தித்த நிகழ்வு ஒன்றின் பயனாக மேற்கொள்ளப்பட்டது.

அரச கருவிகள் பொது பல சேனாவுக்கு ஆதரவளித்திருக்காவிட்டால், சகிப்புத்தன்மை உணர்வுகளின் எல்லை மீறிய விளைவின் காரணமாக கிட்டத்தட்ட முழு முஸ்லிம்களின் வாக்குகளையுமே இழக்க வேண்டிய தாயிற்று.

மிகவும் மோசமாக நிர்வகிக்கப்பட்ட தவறான வெளிநாட்டுக் கொள்கைகளினால் திரும்பவும் கடும்போக்கு பாதுகாப்பு அதிகாரிகளினால் செய்யப்பட்ட இறுதி ஆய்வு காரணமாக இந்தியாவின் ஆதரவை நாங்கள் இழந்தோம், அதேவேளை பொது பல சேனா காரணியால் இஸ்லாமிய நாடுகளின் ஒன்றியமான ஓ.ஐ.சி யின் ஆதரவையும் இழக்க நேர்ந்தது.

**புதிய தலைமை விரைவு வழி முறையான மாற்றங்களை மீள் பரிசீலனை செய்வதுடன் அதற்குப் பதிலாக அரசியலமைப்பில் எந்தவித சாகஸப் பரிசோதனைகளையும் மேற்கொள்வதற்கு முன்பாக ஒரு பொது வாக்கெடுப்பு மூலம் மக்களை கலந்தாலோசிக்க வேண்டும்.**

இது பரந்த இந்தோ - அமெரிக்க - இஸ்லாமிய வெளியக கூட்டினை கணிசமானளவு உள்நாட்டு சொத்துக்களுடன் சேர்த்து உருவாக்கியது, மற்றும் அதில் ஆட்சி மாற்றத்துக்கான ஆர்வமும் இளையோடியிருந்தது. அது வேலை செய்தும் விட்டது.



ஜனாதிபதி சிறிசேன முகங் கொடுக்க வேண்டிய பிரதான சவால்களாக இரண்டு உள்ளன. ஒன்று உள்நாட்டு பூகோள அரசியல். பெரும்பான்மையினரில் பெரும்பான்மையாக உள்ளவர்கள் இன - மத சமூகத்தவர்களான, தீவின் மையப் பகுதியில் உள்ள மக்கள் முதன்மையாக அவருக்கு வாக்களிக்கவில்லை, மாறாக அவரது போட்டியாளரான ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவுக்கு வாக்களித்திருந்தார்கள்.

மற்றைய சவால் ஜனாதிபதி சிறிசேன ஈடுபடவுள்ள திட்டம் மற்றும் மேடை, அதாவது பரீட்சித்துப் பார்க்காத அமைப்பு முறையின் மாற்றம், அதன் விளைவாக ஸ்திரமற்ற பல்முனை ஏமாற்று முயற்சிகள் இடம்பெறலாம் மற்றும் வெளியக மற்றும் சிறுபான்மை குழுக்களின் அழுத்தம் காரணமாக அது பாதிப்பற்றது என்று நிரூபிக்க வேண்டிய நிலை உள்ளது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பதையும் மற்றும் அதற்கான விரைவான அணுகுமுறையையும் கைவிடும்படி நான் வேண்டுகோள் விடுக்கிறேன். மாறாக அவர் ஒரு சாதாரண ஜனாதிபதியாக இருந்து தனது தவணைக்காலத்தில் சேவை செய்யும் அதேவேளை நிறைவேற்று அதிகாரத்தை வைத்துக் கொண்டு, அளவுக்கு மீறிய நிறைவேற்று அதிகாரங்களை படிப்படியாகவும் மற்றும் ஒரு நியாயமான அணுகுமுறையுடன் குறைத்துக் கொள்ளலாம்.

நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட வேண்டுமா, தொடரவேண்டுமா, அல்லது மறுசீரமைக்கப்பட வேண்டுமா என்பதற்காக ஒரு பொது வாக்கெடுப்பு நடத்துவது நல்லதொரு யோசனை. ஒரு விரைவு வழி ஒழித்தலை அவர் தொடர்ந்தும் பின்பற்றுவாரானால் (மற்றும் அதேபோல நவ தாராண்மை வாத பொரு ளாதாரக் கொள்கைகளை அனுமதிப்பாரானால்), இலங்கை தேசம் அது இருக்கவேண்டிய நிலையிலிருந்து சுத்தமாக துடைக்கப்பட்டு விடுவது மட்டுமல்லாது ஒரு பலவீனமான மையவிலக்கு அழுத்தத்துக்கும் உட்படும் (விசேடமாக அதன் இனச் சுற்றாடலில்) அதன்படி பலவீனமடைந்து, வேலை இழப்புக்கள் இடம்பெற்று சுருங்கி விடும். அமெரிக்க அரசியல் விஞ்ஞானியான தேடா ஸ்கோப்பல் மிகவும் கடினமாக உழைத்து மேற் கொண்ட சமூக - வரலாற்று ஆராய்ச்சிப் படி நாட்டில் ஏற்படும் அத்தகைய வேலையிழப்பு தீவிர வன்முறை எழுச்சிக்கு காரணமாகிவிடலாம்.

எதிர்மறையான யுத்தத்துக்கு பின்னான போக்குகள் பற்றிய ஆரம்பகால விமர்சகன் என்கிற வகையில் அப்படியான ஒரு நிலை வருவதை என்னால் காண முடிகிறது. எப்படியாயினும் தடைகளை விலக்கி ஜனாதிபதி ராஜபக்ஸவுக்கு ஆதரவு அளிப்பதையே நான் தெரிவு செய்கிறேன் (ஜனாதிபதி பிரேமதாஸவுக்கு நான் செய்ததுபோல), ஏனென்றால் பாவம் செய்வதற்கு எதிராக அதிக பாவங்களை செய்தவர் என்று நான் அவரைக் கருதியிருந்தேன் இன்னமும் கருதுகிறேன், அவருடைய தகுதிகள் அவருடைய தகுதியின்மையை பெருமளவு நீக்கி விடுகின்றன.

இதை சாதாரண பாஷையில் சொல்வதானால் நான் ஒரு ஹீரோவை ஆதரிக்க விரும்புகிறேன் - அல்லது இந்த விடயத்தில் ஒரு வில்லனை - விசேடமாக அவர் ஒரு தோல்வியுற்ற நிலையில் இருக்கும்போது (புலிகளைப் போலவோ அல்லது 80 களில் இருந்த ஜேவிபி போலவோ வெறிபிடித்த நிலையில் இல்லை). இதில் எனக்கு எந்த வருத்தமும் இல்லை.

நடந்திருப்பது சாதாரணமாக ஒரு ஜனாதிபதியின் தோல்வி அல்ல. அது ஒரு சுழற்சியின் முடிவு. ஒரு வேளை ஒரு காலத்தின் முடிவு என்றும் சொல்லலாம். விடிந்திருப்பது புதிய ஒன்றாகவும் இருக்கலாம் அல்லது பழைய யுத்தத்துக்கு முந்திய காலத்துக்கு திரும்புவதாகவும் இருக்கலாம். அதை பொறுத்திருந்து காணவேண்டும்.

என்னுடைய எல்லா விமர்சனங்களையும் மீறி நான் மகிந்த ராஜபக்ஸவை அவரது மூன்று தேர்தல்களிலும் - 2005, 2010 மற்றும் 2015 - ஆதரித்தேன், ஏனென்றால் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் அவருடைய போட்டியாளர்களைக் காட்டிலும் அதிகமாக அந்த மதிப்புகளை நான் அவருடன் பகிர்ந்து கொண்டேன். இந்த முறை ஐந்து மில்லியன மக்கள் அந்தக் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்கள் ஆனால் அது போதுமானதாக இருக்கவில்லை.

நடந்தது ஒரு முன்னுதாரணத்தின் முடிவு மட்டுமல்ல ஆனால் மிகவும் அடிப்படையான சமூகவியல் நிகழ்வு. பிரான்சிஸ் பக்யுமா தனது “வரலாற்றின் முடிவும் மற்றும் கடைசி மனிதனும்” என்கிற நூலில் தாராண்மைவாத ஜனநாயகத்தின் நிச்சயமான வெற்றி ஆட்சியை அமைப்பதற்கு உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட யோசனை என்று புகழ்ந்து பாராட்டுகிறார். ஆனால் அவரது பாராட்டு ஆழமான வருத்தத்தை ஒலிக்கிறது. இந்த வெற்றி ஒரு கதாநாயகனின் பலம் மற்றும் மதிப்புகளுக்கு ஒரு முடிவை ஏற்படுத்துவதாக அவர் கருதுகிறார். அதை ஹோமரின் கிரீஸ் காவியத்தில் நீட்சேயும் புகழ்ந்து சொல்கிறார்.

மைத்திரிபால சிறிசேன ஒரு ஜனாதிபதி என்கிற வகையில் ரணில் விக்கிரமசிங்கவையோ அல்லது சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவையோ அந்தப் பாத்திரங்களில் எல்லையற்ற காலம்வரை வைத்திருப்பதை விரும்பக்கூடும். மக்கள் மாற்றத்துக்காக வாக்களித்துள்ளார்கள் மற்றும் ஒற்றைமுனை நிலைப்பாடு முடிவடைந்து விட்டது. புதிய தலைமை விரைவு வழி முறையான மாற்றங்களை மீள் பரிசீலனை செய்வதுடன் அதற்குப் பதிலாக அரசியலமைப்பில் எந்தவித சாகஸப் பரிசோதனைகளையும் மேற்கொள்வதற்கு முன்பாக ஒரு பொது வாக்கெடுப்பு மூலம் மக்கள் கலந்தாலோசிக்க வேண்டும்.

# போருக்குப் பின்னரான நிலைமை
# ஜனாதிபதியுடன்-பான்கீமூன் பேச்சு

(கொழும்பு)

இலங்கையின் போருக்குப் பிந்திய நிகழ்ச்சி நிரல் குறித்து, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன், ஐ.நா பொதுச் செயலர் பான் கீ மூன் பேச்சு நடாததியுள்ளார்.

இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள ஐ.நா பொதுச் செயலர் பான் கீ மூன் நேற்று, முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் தொலைபேசி மூலம் உரையாடினார்.



இதுகுறித்து ஐ.நா பொதுச் செயலர் பான் கீ மூனின் பிரதிப் பேச்சாளர் தகவல் வெளியிடுகையில்,

இலங்கை ஜனாதிபதி தேர்தல் வெற்றிகரமாக நடத்தப்பட்டமை மற்றும், அதில் மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்றமைக்கும், ஐ.நா பொதுச் செயலர் வாழ்த்துக் கூறினார்.

பான் கீ மூனும், மைத்திரிபால சிறிசேனவும், 100 நாள் செயற்திட்டம் மற்றும், இலங்கையில் போருக்குப் பிந்திய நிகழ்ச்சி நிரல் குறித்து கலந்துரையாடினர்.

இலங்கைக்கு தொடர்ந்தும் ஐ.நா உதவும் என்று பான் கீ மூன் மீண்டும் உறுதியளித்தார். என்று குறிப்பிட்டார்.

அதேவேளை, கடந்த 9ஆம் திகதி ஐ.நா பொதுச்செயலர் வெளியிட்ட ஒரு அறிக்கையில், இலங்கையில் சுமுகமான முறையில் அதிகார கைமாற்றம் இடம்பெற்றமை குறித்து வாழ்த்து தெரிவித்திருந்ததுடன், ஜனநாயக ரீதியில் தேர்தல் நடத்தப்பட்டதற்கும் வரவேற்புத் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வெளிவிவகார அமைச்சருக்கு இந்தியா அழைப்பு

புதிய வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவை புதுடில்லிக்கு வருகை தருமாறு இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ் அழைப்பு விடுத்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சராக நேற்று முன்தினம் மாலை பொறுப்பேற்ற மங்கள சமரவீரவுடன் தொலை பேசியில் தொடர்பு கொண்டு, இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ் வாழ்த்துக் கூறியுள்ளார்.

இதன்போதே அவர், புதுடெல்லிக்கு வருகை தருமாறு, இலங்கையின் புதிய வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு அழைப்பு விடுத்துள்ளார். இந்திய வெளிவிவகார அமைச்சின பேச்சாளர் சையட் அக்பருதீன் டுவிட்டரில் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

## குடும்பவாத அரசியலுக்கு தேர்தல் முடிவு சிறந்த பாடம்

### ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவிப்பு



(கொழும்பு)

குடும்பவாதத்தினால் தலை வீங்கியவர்களுக்கு தேர்தல் முடிவு நல்ல ஒரு பாடமாக அமைந்துள்ளதாக ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

ஒருவர் மக்கள் மத்தியில் எவ்வளவு பிரபல்யமாக இருந்த போதிலும்,; குடும்ப வாதத்தினால் தலை வீங்கி னால் ஏற்படக் கூடிய தலைவிதி இம்முறை ஜனாதிபதித் தேர்தலின் மூலம் புலனாகியுள்ளது

ஜனாதிபதித் தேர்தல் முடிவானது அனைத்து அரசியல் வாதிகளுக்கும் பாடம் கற்பிக்கும் வகையில் அமைந்துள்ளது.

அதிகாரம் இருக்கும் போது நடந்து கொள்ள வேண்டிய விதம், அதிகாரத்தைப் பயன்படுத்துவது எவ்வாறு? அனைத்து மக்களுக்கும் சேவையாற்றுவது எவ்வாறு போன்ற காரணிகள் உதாசீனம் செய்யப்பட்டு ஆட்சி நடத்தப்பட்டது.

உறவினர், நண்பர்களின் நலன்களைப் பற்றியே சிந்தித்து அவர்களின் நலனுக்காக பாடுபடும தலைவர்கள் இவ்வாறான நிலைமைகளை எதிர்நோக்க நேரிடும் என்பது கண்கூடாகியுள்ளது.

ஆதலால் தாமே தலைவர் என இந்த நாட்டு மக்களின் முன்னிலையில் எவராலும் கூற முடியாது.

தலைவர் ஒருவர் அதிகாரத்தில் இருக்கும் போது அவரைச் சுற்றி இருந்து கொண்டு நன்மைகளை அனுபவித்தவர்கள், அவர் அதிகாரத்தை இழந்ததும் கறிவேப்பிலையைப் போன்று தலைவரை தூக்கி எறியும் நிலைமையை அண்மைய நாட்களில் அவதானிக்க முடிந்தது என ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

## மகிந்தவுக்கு ஜோதிடம் பார்த்த சுமணதாச சிங்கப்பூர் பயணம்

முன்னாள் ஆட்சியாளர் மகிந்த ராஜபக்சவை முன்கூட்டியே தேர்தலை நடத்த வைத்து, அவரை தோல்வியுறச் செய்யக காரணமானவரான, அவரது சோதிடர் சுமணதாச அபே குணவர்த்தன சிங்கப்பூருக்குச் சென்றுவிட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே தேர்தலுக்கான அறிவிப்பை வெளியிட்டது, தேர்தல் நாளை நிர்ணயித்தது, மகிந்த ராஜபக்சவின் வேட்புமனுவுக்கான நேரத்தை தீர்மானித்தது, வாக்களிக்கச் செல்வதற்கான நேரத்தை தீர்மானித்தது என எல்லாவற்றையும் மகிந்த ராஜபக்சவின் சோதிடரான சுமணதாசவே மேற்கொண்டிருந்தார்.

மகிந்த ராஜபக்சவுக்கு கடந்த 8ஆம் திகதி மிகவும் நல்ல நேரம் என்றும், அது அவ்ருக்கு ராஜயோகத்தை அளிக்கும் என்றும் நம்பிக்கை ஊட்டிய அவரை, மேற்குலக ஊடகங்கள் பலவும்.



ராஜ்சோதிடர் என்றே குறிப்பிட்டன

இவரை மையப்படுத்தி, பிரபல ஊடகங்கள் தேர்தலுக்கு முன்னரும் செய்திகளை வெளியிட்டிருந்தன.

இவரது பேச்சை நம்பி, மகிந்த ராஜபக்ச முன்கூட்டியே தனது பதவியை இழந்துள்ளதை யடுத்து, சுமணதாச அபேகுணவர்த்தன சிங்கப்பூருக்குத் தப்பிச் சென்றுள்ளார்.

ஊடகங்களும், அரசியல்வாதிகளும், பொதுமக்களும் எழுப்பும் கேள்விகளில் இருந்து தப்பிக்கவே அவர் சிங்கப்பூர் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## தகவல் ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் கடமை பொறுப்பேற்பு



(கொழும்பு)

தகவல்,ஊடகத்துறை அமைச்சின் புதிய செயலாளராக நியமிக்கப்பட்ட கருணாரத்ன பரணவிதான நேற்று முன்தினம் தகவல், ஊடக அமைச்சில தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி அமரதுங்க, தகவல் பணிப்பாளர் வசந்த பிரிய ராமநாயக்க உட்பட அமைச்சின் அதிகாரிகள் தகவல் திணைக்கள அதிகாரிகள் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## அரச நிறுவனங்களில் பதவிவகித்த இராணுவ அதிகாரிகள் உடனடி நீக்கம்

அரச நிறுவனங்களில் உயர் பதவிகளை வகித்து வரும் இராணுவ அதிகாரிகள் அந்தப் பதவிகளிலிருந்து நீக்கப்படவுள்ளனர். புதிய அரசாங்கம் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது.

அரச நிறுவனங்களில் உயர் பதவிகளை வகித்து வந்த சகல இராணுவ அதிகாரிகளையும் அந்தப் பதவிகளிலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பதவி வெற்றிடங்கள் சிவிலியன்களைக் கொண்டு நிரப்பப்பட உள்ளன.

இந்தப் பதவிகளில் காணப்பட்ட இராணுவ தன்மையை நீக்குவதே இவ்வாறு சிவிலியன்கள் அந்தப் பதவி வெற்றிடங்களுக்காக நியமிக்கப்பட உள்ளமைக்கான பிரதான காரணமாகும்.

கடந்த அரசாங்கத்தின் கீழ், அரச சேவை இராணுவ மயப்படுத்தப்பட்டுள்ளதாக தொழிற்சங்கங்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் குற்றம் சுமத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அனர்த்த முகாமைத்துவம், நகர அபிவிருத்தி, புனர்வாழ்வு உள்ளிட்ட பல்வேறு முக்கிய அரச நிறுவனங்களில் உயர்பதவிகளை கடந்த காலங்களில் இராணுவ அதிகாரிகள் வகித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு இராணுவ அதிகாரிகள் வகித்து வந்த பதவிகள் சிவில் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளன.

## மூன்று இடதுசாரிக் கட்சிகள் புதிய அரசுக்கு ஆதரவு

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் இடதுசாரி கட்சிகளான இடதுசாரி முன்னணி லங்கா சமசமாஜக் கட்சிகம் யூனிஸ்ட்கட்சிஆகிய மூன்றும், புதிய அரசாங்கத்தின் ஜனநாயக முறைகளை பின்பற்றும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாகத் தெரிவித் துள்ளன. எனினும் அரசாங்கட்சியில் இணைவதாகத் தெரிவிக்கவில்லை.

இது குறித்து, இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார கூறுகையில்,

“தொடர்ந்தும் நாம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் இடதுசாரி கட்சியாக இருந்து கொண்டு புதிய அரசின் தேர்தல் வாக்குறுதிகளை செயற்படுத்த அழுத்தம் கொடுப்போம்“ எனக் கூறினார்.

முன்னாள் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சரான வாசுதேவ நாணயக்கார, நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்க வேண்டும் என பல தடைவைகள் கூறிவந்த நிலையிலேயே இவ்வாறானதொரு கருத்தை நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

“நாங்கள் நிறைவேற்று அதிகாரத்தை முற்றாக ஒழிக்க விரும்புகின்றோம். ஆனால், புதிய அரசாங்கம் நிறைவேற்று அதிகாரத்தைக் குறைக்க நடவடிக்கை எடுத்தால் அதனை நாம் ஏற்றுக்கொள்ளவும் தயார். அத்தோடு, ஜனாதிபதியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டிருந்த சம்பள உயர்வை வழங்குவதற்கும் நாம் அழுத்தம் கொடுப்போம்“ என அவர் தெரிவித்தார்.

## முப்படைகளின் தளபதிகளும் பிரதமரை சந்தித்து வாழ்த்து



முப்படைகளின் தளபதிகள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து வாழ்த்து கூறினர். எதிர்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்த சந்திப்பு இடம்பெற்றது.

இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் தயா ரத்நாயக்க ,கடற்படைத் தளபதி வைஸ் அடமிரல் ஜயந்த பெரேரா ,விமானப் படைத் தளபதி எயார் மாரஷல் கோலித குணதிலக ஆகியோரே இந்த சந்திப்பில் கலந்துக்கொண்டனர்.

ஜனாதிபதித் தேர்தலின் போது ஒத்துழைப்பு நல்கியமைக்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இந்த முப்படைத் தளபதிகளுக்கு இதன் போது நன்றி தெரிவித்தார்.

# கிளி.மாவட்டத்தில் கடந்தவருடம் 73 பேர் டெங்குத் தொற்றுக்கு இலக்கு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த 2014 ஆம் ஆண்டு 73 பேர் டெங்கு நோய் தாக்கத்துக்குள்ளாகியுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடமாகாணத்திலுள்ள ஏனைய மாவட்டங்களில் காணப்பட்ட டெங்கு நோய்த்தாக்கத்தை விட குறைந்தளவு டெங்கு நோய்த் தாக்கமே கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்பட்டது. கிளிநொச்சி மாவட்டத்தில் 2013 ஆம் ஆண்டு 72 பேருக்கும், 2012 ஆம் ஆண்டு 84 பேருக்கும், 2011 ஆம் ஆண்டு 56 பேருக்கும் டெங்கு நோய்த்தாக்கம் இருந்தமை அறியப்பட்டது. நோய்த்தாக்கத்துக்குள்ளானவர்கள் அனைவருக்கும் தகுந்த முறையில் சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது. இந்த வருடம் இதுவரையில் 3 பேர் டெங்கு நோய்த் தாக்கத்துக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் டெங்கு நோய்த்தாக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில் டெங்கு ஒழிப்பு மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மற்றும் சுகாதார வைத்தியதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# "சுகவாழ்க்கை" சஞ்சிகை அறிமுகவிழா இன்று

(யாழ்ப்பாணம்)

சுகவாழ்க்கைப் பேரவையின் காலாண்டு சஞ்சிகையான "சுக வாழ்க்கை" அறிமுகவிழா இன்று புதன்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு இணுவில் அறிவாலயத்தில் நடைபெறவுள்ளது.

தலைவர் அ.குகதாசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி சி.எஸ்.நச்சினார்க்கினியன் கலந்து கொள்ளவுள்ளார்.

வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன், கருத்துரைகளை பி.கனகசபாபதி, கவிஞர் சோ.பத்மநாதன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

# சத்துணவு வழங்கல்

(வரணி)

வரணி பிரதேசத்தில் நிறை குறைவடைந்த மற்றும் கர்ப்பவதிகள், இரண்டு வயதிற்கு உட்பட்டவர்களுக்கான சத்துணவு (திரிபோஷ) வரணிப்பிரதேச வைத்தியசாலையில் வைத்து வரணிப்பிரதேச குடும்ப நல உத்தியோக்கத்தினாரால் வழங்கப்படுகிறது.

உரியவர்கள் இச்சத்துணவைப் பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்படுகிறது. (150)

# தீ மிதிப்பு வைபவம்

(யாழ்.நிருபர்)

சித்தன்கேணி ஸ்ரீ நாக கன்னியாம்பாள் ஆலய வருடாந்த தைப்பொங்கல் பெருவிழாவும் தீ மிதிப்பு வைபவமும் நாளை தைப்பொங்கல் தினத்தன்று நடைபெறவுள்ளன.

அன்றையதினம் 'ஈழத்தில் நாகவழிபாடு' என்னும் பொருளில் சைவப்புலவர் செ.கந்தசத்தியதாசனும், 'இணையடி நிழல்' என்னும் பொருளில் சைவப்புலவர் க.நித்தியசசீதரனும், வாழ்க்கையில் சமயம் என்னும் பொருளில் இளம் சைவப்புலவர் கைலைநாதனும் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளனர்.

நண்பகல் 12 மணிக்கு தீ மிதிப்பு வைபவம் இடம்பெறும். (10)

# வழக்குத் தாக்கல்

(கரணவாய்)

நெல்லியடி நகரப்பகுதியில் பொது இடத்தில் மது அருந்திய இரு இளைஞர்கள் நெல்லியடி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த இருவரையும் விசாரணை செய்த பொலிஸார் இவர்களுக்கு எதிராக பருத்தித்துறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (18)

# சுன்னாகம் வாழ்வக நிறுவுனரின் உதயநாளும் பரிசுத்தினமும்

சுன்னாகம் வாழ்வக நிறுவுநர் அமரர் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பியின் உதயநாளும், பரிசுத்தினமும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வாழ்வக செல்லா மண்டபத்தில் வாழ்வகத் தலைவர் ஆ.ரவீந்திரன் தலைமையில் நடைபெற்றது.

காலை 8.45 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை இடம்பெற்ற இந்நிகழ்வு வாழ்வகத்தில் அமைந்துள்ள அன்னை அன்னலட்சுமி சின்னத்தம்பியின் உருவச் சிலைக்கு மாலை அணிவித்தலுடன் ஆரம்பமானது. அன்னையின் ஆசி பெற்று விருந்தினர்கள் அனைவரும் செல்லா மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர். வாழ்வக கொடியேற்றல், மங்கல விளக்கேற்றல், இறை வணக்கம், வரவேற்பு நடனம் என்பவற்றைத் தொடர்ந்து வரவேற்புரையை வாழ்வக பொருளாளர் த.வாமதேவன் நிகழ்த்தினார்.

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன் ஆசியுரை வங்கினார். பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா, சிறப்பு அதிதிகளாகக் கலந்து கொண்ட மக்கள் வங்கிப் பிராந்திய முகாமையாளர் க.சுசீந்திரன், சட்டத்தரணி ஆ.தியாகராஜா, வர்த்தகப் பிரமுகர் பா.ஜெயபாலன், சமூக சேவைத் திணைகள மாவட்ட அலுவலர் வ.செல்லம் ஆகியோர் உரைநிகழ்த்தினர்.

சேவையாளர் கௌரவிப்பும், பரிசில் வழங்கலும் இடம்பெற்றதோடு வாழ்வக மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. இணுவையூர் கோபிதாஸ் குழுவினரின் வயலின் இசை விருந்தும் நடைபெற்றது.

வாழ்வக செயலாளர் வை.க. ரவிகரன் நன்றியுரை கூறினார். (137)



## யாழ்ப்பாண மரதன் பதிவுக்கு விரையுங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக் கல்லூரியின் 125ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு முதன் முறையாக மாபெரும் "யாழ்ப்பாண மரதன்" போட்டி நடாத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 31ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ள இப்போட்டியில் ஆண், பெண் என இருபாலாரும் பங்குகொள்ள முடியும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்போட்டியில் பங்குகொள்ள விரும்புவோர் எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க அலுவலகத்தில் தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும், முதல் பத்து இடங்களைப் பிடிப்போருக்குப் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படுவதுடன் போட்டியை நிறைவு செய்யும் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும் எனவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## மல்லாவி மத்திய கல்லூரியில் முல்லை கிண்ண கூடைப்பந்து

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடாத்தும் முல்லைக் கிண்ண கூடைப்பந்தாட்டப் போட்டி எதிர்வரும் 23,24,25ஆம் திகதிகளில் மல்லாவி மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் நடைபெறவுள்ளது.




வடமாகாண ஆண்கள் அணிகளுக்கிடையில் நடாத்தப்படவுள்ள இப்போட்டித் தொடரில் பங்குபற்ற விரும்பும் அணிகளை எதிர்வரும் 18ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

போட்டியில் வெற்றியீட்டும் அணிக்குப் பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும் எனவும், இப்போட்டிக்கான அணிகளின் நிரல் ஒழுங்கு எதிர்வரும் 18ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு மல்லாவி மத்திய கல்லூரியில் நடைபெற ஏற்பாடாகியுள்ளதாகவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்போட்டி தொடர்பான மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் 0775193669 என்ற கைத்தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

## பிராவோ, பொலார்ட் நீக்கம் கிரிக்கெட் சபை விளக்கம்

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருக்கான மேற்கிந்தியத்தீவுகள் அணியின் நட்சத்திர வீரர்களான பிராவோ மற்றும் பொலார்ட் நீக்கப்பட்டதற்கான விளக்கத்தை மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் சபைத் தலைவர் கமரூன் வைவிட் விளக்கியுள்ளார்.

பிராவோ, பொலார்ட் ஆட்டம் சமீபகாலமாக மோசமாக இருந்தது. இதன் அடிப்படையில் அவர்கள் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருக்கான அணியில் தேர்வு செய்யப்படவில்லை. இது தொடர்பான வெளியாகும் காரணங்கள் அடிப்படையற்றது. அணிக்கு அறிவிக்கப்பட்ட 15 பேரும் தகுதி அடிப்படையிலேயே தேர்வு செய்யப்பட்டனர். எதிர்காலத்தை கருத்தில் கொண்டு இளம் வீரர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது என்றார்.

இதற்கிடையே மே.தீவுகளின் தேர்வுக் குழுத் தலைவர் கிளைவ் லொயிட்சை கிண்டல் செய்து பொலார்ட் தனது டுவிட்டரில் கார்ட்டூன் வெளியிட்டுள்ளார். மேலும் தங்களுக்கு ஆதரவாக கருத்தை தெரிவித்த கிறிஸ் கெய்லுக்கு அவர் நன்றியும் தெரிவித்துள்ளார்.

## ஆரம்பப் பிரிவு விளையாட்டை பெப்ரவரிக்கு முன் நடாத்துக

### அதிபர்களுக்கு சுற்றறிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட ஆரம்பப்பிரிவினை கொண்டுள்ள பாடசாலைகளில் இவ்வாண்டிற்கான ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டியினை மாசி மாத நடுப்பகுதிக்கு முன்னதாக நடாத்தி முடித்து கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பாடசாலை அதிபர்களுக்கு யாழ். கல்வி வலய ஆரம்பப் பிரிவு உதவிக்கல்விப் பணிப்பாளரினால் சுற்றறிக்கை மூலம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிகள் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு வயதின் அடிப்படையின் கீழ் நடாத்தப்படவேண்டியுள்ளதுடன் தரம் 01 மாணவர்களுக்கு அனைவரும் பங்குபற்றும் விதமாக பாடசாலைகள் தமக்கு விரும்பியவாறு மாணவர்களுக்கு மகிழ்ச்சிகரமானதும், மிகவும் இலகுவானதுமான விளையாட்டுக்களை நடாத்த வேண்டும்.

தரம் இரண்டு மாணவர்களுக்கு முதன்மை நிலை 01 செயற்பட்டு மகிழ்வோம் கைநூலில் உள்ள 15 விளையாட்டுக்களில் மாணவர்களுக்குப் பொருத்தமான விளையாட்டுக்களைப் பயிற்றுவித்து போட்டிகளை நடாத்த வேண்டும். தரம் 3,4,5 மாணவர்களுக்கு அவர்களது வயதுப் பிரிவிற்கு ஏற்றாற் போல் வேகமாக தடைகளை கடந்து ஓடுதல், கலப்பு ஓட்டம், சுழன்று வீசுதல், ஈட்டி எறிதல், இலக்கிற்கு எறிதல் ஏணி ஓட்டம், தவளைப்பாய்ச்சலுடனான விரைவு ஓட்டம், ஒற்றைச்சில்லு வண்டியுடனான விரைவு ஓட்டம், தாம்பு தாண்டுதல், குழுவாக நின்று நீளம் பாய்தல், குறுக்குப் பாய்ச்சல், முழங்கால் ஊன்றி முன்னோக்கி எறிதல் ஆகிய நிகழ்வுகளும், நடாத்தப்பட வேண்டும் எனவும் அச்சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (03)



## உயரப்புலம் சிறிமுருகன் சம்பியன்

(இளவாலை)

தைப் பொங்கலை முன்னிட்டு இளவாலை வருத்தப்படாத வாலிபர் கழகம் நடாத்திய தாச்சிப் போட்டியில் உயரப்புலம் ஸ்ரீமுருகன் அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இப்போட்டித் தொடர் கடந்த ஞாயிற்றுக்கிழமை வருத்தப்படாத வாலிபர் கழகத் திடலில் நடைபெற்றது. இதில் எட்டிற்கும் மேற்பட்ட அணிகள் பங்குகொண்டன.

பங்குபற்றிய ஒவ்வொரு அணியும் பலமான அணி என்பதால் இப்போட்டித் தொடர் பெரும் விறுவிறுப்பாக நடைபெற்றது.

இதில் உயரப்புலம் ஸ்ரீமுருகன் அணியும் வசந்தபுரம் அணியும் இறுதிப் போட்டியில் மோதின. இதில் சிறப்பான முறையில் ஆடியஉயரப்புலம் ஸ்ரீமுருகன் அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது. இதேவேளை, மூன்றாமிடத்தை சென். லூட்ஸ் அணி பிடித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (48)

## அரையிறுதியில் கொக்குவில் காமாட்சி, மல்லாகம் எஸ்.எம்.எஸ்.



(மானிப்பாய்)

தைகப் பொங்கலை முன்னிட்டு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் வருடா வருடம் நடாத்தும் மென்பந்து கிரிக்கெட் தொடரின் அரையிறுதி ஆட்டத்திற்கு மல்லாகம் எஸ்.எம்.எஸ். மற்றும் கொக்குவில் காமாட்சி அணிகள் முன்னேறியுள்ளன.

நான்காவது ஆண்டாக நடாத்தப்படும் இப்போட்டித் தொடர் மானிப்பாய் செல்ல முத்து விளையாட்டு அரங்கில் நடைபெற்று வருகின்றது. இப்போட்டித் தொடரில் காலிறுதி ஆட்டங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

முதலாவது காலிறுதிப் போட்டியில் மல்லாகம் எஸ்.எம்.எஸ். அணியும் இணுவில் கலையொளி அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய இணுவில் கலையொளி அணி நிர்ணயிக்கப்பட்ட ஐந்து ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 44 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு 45 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மல்லாகம் எஸ்.எம்.எஸ். அணி 3.2 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து வெற்றியிலக்கை அடைந்ததுடன் அரையிறுதிப் போட்டிக்கும் தகுதி பெற்றது. இப்போட்டியில் டிவோனன் 30 ஓட்டங்களைப் பெற்று அணியின் வெற்றிக்குத் துணை புரிந்தார்.

தொடர்ந்து நடைபெற்ற மற்றுமொரு காலிறுதிப் போட்டியில் கொக்குவில் பிரம்படி அணியும் கொக்குவில் காமாட்சி அணியும் மோதின. முதலில் ஆடிய கொக்குவில் காமாட்சி அணி ஐந்து ஓவர்கள் நிறைவில் இரு விக்கெட்டுக்களை இழந்து 110 ஓட்டங்களைப் பெற்றது. அதிரடியாக ஆடிய நிக்ஷன் 46 ஓட்டங்களைப் பெற்றார். பதிலுக்கு 111 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கொக்குவில் பிரம்படி அணி ஐந்து ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 74 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இவ்வெற்றியின் மூலம் கொக்குவில் காமாட்சி அணி அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இதேவேளை, இப்போட்டித் தொடரின் அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகள் நாளைய தினம் நடைபெறவுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (48)

## றொனால்டோவுக்கு விருது

கடந்த ஆண்டின் உலகின் சிறந்த கால்பந்து வீரராக போர்த்துக்கலைச் சேர்ந்த கிறிஸ்டியானோ றொனால்டோ தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

ரியல் மட்ரிட் அணியின் வீரரான அவர் சிறந்த வீரர் விருதை மீண்டும் தக்க வைத்துள்ளார். 3ஆவது முறையாக சிறந்த வீரராக தேர்வு பெற்றுள்ளார்.

ஆர்ஜென்ரீனாவின் மெஸ்சி 4 முறை உலகின் சிறந்த வீரராக தேர்வு பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஹரி பொறுப்பான ஆட்டம்

### ஹாட்லி பழைய மாணவர் அணி வெற்றி

(பருத்தித்துறை)

ஹரியின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியின் பழைய மாணவர் அணி நான்கு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

சாவகச்சேரி டிறிபேக் தாரகை மற்றும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவர் அணிகளுக்கிடையிலான சிநேகபூர்வ ஒரு நாள் கிரிக்கெட் போட்டி கடந்த வாரம் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய டிறிபேக் தாரகை அணி 46.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 230 ஓட்டங்களைப் பெற்றது. இதில் என். நிலான் 31, எஸ். பிரதாபன் 38, கே. ஹரிகரன் 30, எம். லக்ஸன் 32 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு 231 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் அணி ஹரியின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் மூன்று விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. இறுதியில் ஹாட்லிக் கல்லூரி அணி 44.5 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ஹரி 73 ஓட்டங்களைப் பெற்று அணியின் வெற்றிக்குப் பெரும் பங்காற்றினார்.

## ஹோலி, பெடரர் சந்திப்பு

(மெல்பேர்ன்)

அவுஸ்ரேலியாவில் விளையாடி வரும் ரென்னிஸ் சகாப்தம் ரோஜர் பெடரரை (சுவிட்சர்லாந்து) இந்திய டெஸ்ட் அணி கப்டன் ஹோலி சந்தித்துள்ளார். நட்சத்திர வீரர் டெண்டுல்கர் வழியில் அவர் பெடரரை சந்தித்து பேசியுள்ளார்.

இதுகுறித்து டுவிட்டரில் ஹோலி கூறும் போது, பெடரரை சந்தித்த இந்த நாளை என் வாழ்க்கையில் மறக்கமாட்டேன். ரென்னிஸ் ஆடுகளத்துக்கு வெளியேயும் அவர் ஒரு மகத்தான வீரர் என்று குறிப்பிட்டுள்ளார். பெடரருடன் சேர்ந்து இருக்கும் புகைப்படத்தையும் அவர் வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, ஹோலி மட்டுமல்ல எந்த ஒரு விளையாட்டையும் நேசிக்கும் அவுஸ்ரேலிய வீரர்களும் பெடரரை நன்கு அறிந்து வைத்துள்ளனர். கப்டன் ஸ்மித், வோர்னர் ஆகியோரும் அவரை சந்தித்து புகைப்படம் எடுத்துக்கொண்டனர். சமீபத்தில் பெடரர் பிரிஸ்பேன் ஓப்பனில் 1000ஆவது வெற்றியை பெற்று முத்திரை பதித்தார்.

# ஊழியர் சேமலாப நிதியத்தின் கீழ் 84 நிறுவனங்கள் 2014 இல் பதிவு

## யாழ்.மாவட்ட தொழில் திணைக்கள பிரதித் தொழில் ஆணையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஊழியர் சேமலாப நிதியத்தின் கீழ் யாழ் மாவட்டத்தில் 87 நிறுவனங்கள் கடந்த வருடம் (2014) பதிவு செய்யப்பட்டுள்ளதாக யாழ் மாவட்ட தொழில் திணைக்கள பிரதித் தொழில் ஆணையாளர் க.கனகேஸ்வரன் அண்மையில் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், எமது திணைக்கள அதிகாரிகள் கடந்த 2014ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலுள்ள ஒவ்வொரு நிறுவ



னங்களுக்கும் சென்று, சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டு ஊழியர் சேமலாபநிதி கட்டத்தவறிய நிறுவனங்களுக்கு எதிராக யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றில் 42 வழக்குகள் பதிவு செய்துள்ளனர்.

சேமலாப நிதி தவிர்ந்து, ஏனைய விடயங்கள் தொடர்பில் கடந்த ஆண்டு 62 முறைப்பாடுகள் எமது திணைக்களத்துக்கு கிடைக்கப்பெற்று, அது தொடர்பான நடவடிக்கைகள் எமது திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டு, 85 இலட்சத்து 63 ஆயிரத்து 217 ரூபாய் ஊழியர்களுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தில் 300 பேர் பணி நீக்கம்

மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் நிறுவனமான "ஹலோ ட்ரஸ்ட்" நிறுவனத்தில், கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் பணியாற்றும் 300 பணியாளர்களை இந்த மாதம் 31 ஆம் திகதி முதல் பணியில் இருந்து நீக்கப்போவதாக அந்நிறுவனம் அறிவித்துள்ளது.

தொண்டு நிறுவனங்கள் மற்றும் அரசாங்கத்திடம் இருந்து நிதி கிடைக்காமையால் 300 பணியாளர்களுக்கு சம்பளம் வழங்க முடியாதுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாட்டங்களில் தொழில் வாய்ப்பற்று மிகவும் பின்தங்கிய குடும்பங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட சுமர் 800 பேர் வரையில், கடந்த 2010ஆம ஆண்டு முதல் "ஹலோ ட்ரஸ்ட்" கண்ணி வெடி அகற்றும் நிறுவனத்துடன் இணைந்து பணியாற்றி வருகின்றனர்.

எதிர்வரும் 2017ஆம் ஆண்டு வரை இவர்கள் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபடுவார்கள் என ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது.

இதேவேளை இம்மாதம் 31ஆம் திகதி முதல் பணிநீக்கம் செய்வதற்கான ஒப்புதல் கடிதம் அவர்களிடம் இருந்து பெறப்பட்டதாக அந்நிறுவனம் அறிவித்துள்ளது

# மானிப்பாய் மேற்கில் சிரமதானப் பணி

மானிப்பாய் மேற்கு இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் சிரமாதானம் ஒன்று இடம் பெற்றது.

புனரமைக்கப்பட்டு வரும் இளைஞர் தொழிற் பயிற்சி மைய தொகுதியிலேயே இச் சிரமதானம் இடம்பெற்றது.

மானிப்பாய் பிப்பிலி வீதியில் அமைந்துள்ள இவ் மரவேலைப் பயிற்சி கட்டடத்தொகுதி நீண்டகாலமாக செயற்படாதிருந்த நிலையில் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் கேட்டுக் கொண்டதற்கிணங்க பிரதேச செயலரினால் அனுமதியளிக்கப்பட்ட நிலையில் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

குறித்த கட்டிடம் மானிப்பாய் மேற்கு இளைஞர் கழக எல்லைக்குள் அமைவதனால் மானிப்பாய் மேற்கு இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் சிரமாதானம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது.

இந் நிகழ்வில் பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் க.உஷாந்தன், மானிப்பாய் மேற்கு இளைஞர் கழகத்தின் தலைவர் பே.சாம்பவி, செயலாளர அ.கீர்த்தனா, பொருளாளர் ச.கம்சிகா, அமைப்பாளர் ப.கௌசிகன் சண்டிலிப்பாய் மேற்கு இளைஞர் கழகத்தின் தலைவர் நா.கஜீலன் உள்ளிட்ட உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# ஐய்யனார் கேணி மீள்புனரமைப்பு

(சங்கானை)

வலிகாமம் மேற்கு (சங்கானை) பிரதேச செயலத்துக்குட்பட்ட அராலி கிழக்கு கிராமஅலுவலர் (ஜே - 163) பிரிவுக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள ஐயனார் கேணி 7 இலட்சம் ரூபாய் செலவில் புனரமைப்புச் செய்யப்படுவதாக சங்கானைப் பிரதேச செயலக தகவல்கள் தெரிவிகின்றன.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சு வழங்கிய நிதி மூலம், இந்தக் கேணி புனரமைக்கும் பணிகள் கடந்த 2014ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த கேணி புனரமைக்கப்பட்டால், கால்நடைகளின் குடிநீர்த் தேவை, விவசாயிகளுக்கான நீர்த்தேவை மற்றும் அந்தியேட்டி கிரிகைகள் செய்யவதற்கு உதவும என அந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ஆரம்பப்பிரிவு மாணவர்கள் உள்வாங்கப்படும் நிகழ்வு

2015 ஆம் ஆண்டில் முதலாம் தரத்திற்கு மாணவர்களை அனுமதித்தல் தொடர்பாக மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்ட சுற்றறிக்கைக்கு அமைவாக அரச பாடசாலைகள், மற்றும் அரசால் அனுமதிக்கப்பட்ட அரச உதவிபெறும், அரச உதவிபெறாத தனியார் பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவு சிறார்களை உள்வாங்கும் நிகழ்வு எதிர்வரும் திங்கட்கிழமை நடாத்தப்பட வேண்டும் என யாழ்ப்பாண கல்விவலயத்தின் சகல ஆரம்பப்பிரிவு பாடசாலை அதிபர்களுக்கும் ஆரம்பப்பிரிவு உதவிக்கல்விப் பணிப்பாளரினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.


மேற்படி நிகழ்வினை பாடசாலை மட்டத்தில் நடாத்திய பின் அது பற்றிய அறிக்கையினை எதிர்வரும்23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்குமாறும, இந்நிகழ்வினை பிள்ளைகளுக்கு வசதியீனங்கள் ஏற்படாதவாறு குறுகிய நேரத்தில் நிறைவு செய்ய வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (03)

# வலைப்பாடு பொதுச் சந்தைக்கு மீண்டும் கூரை அமைக்க கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வலைப்பாடு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பொதுச் சந்தையின் கூரை 2014 ஆம் ஆண்டு காற்றால் தூக்கி வீசப்பட்ட பின்னர், அதற்கான கூரை மீண்டும் அமைக்கப்படாத நிலையில் தற்போதும் இயங்கி வருகின்றது.

கடந்த 2011ஆம் ஆண்டு நெல்சிப் திட்டத்தின் கீழ் 3.527 மில்லியன் ரூபாய் செலவில் இந்த சந்தைக் கட்டடங்கள் அமைக்கப்பட்டு, 2014ஆம் ஆண்டு ஜுலை மாதம் திறந்து வைக்கப்பட்டது. இச்சந்தையின் மூலம் வலைப்பாடு, வேரவில் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பயன்பெற்று வந்தனர்.



கடந்த 2014ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் வீசிய காற்றால் சந்தையின் கூரைகள் தூக்கி வீசப்பட்டன.

இவ்வாறு காற்றினால் தூக்கி வீசப்பட்ட கூரை முற்றாக சேதமடைந்திருப்பதால், அதனை மீளவும் பொருத்த முடியாத நிலை காணப்படுவதாகவும் இதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படுமாயின் கூரையை மீளவும் பொருத்த முடியும் என்று கரைச்சி பிரதேச செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# பொங்கல் விழாவும் தொழிற்பயிற்சி மையம் திறப்பும்

மானிப்பாய் மேற்கு இளைஞர் கழகத்தின் வருடாந்த பொங்கல் விழாவும் புனரமைக்கப்பட்ட இளைஞர் தொழிற்பயிற்சி மையத்தின் திறப்பு விழாவும் இடம்பெறவுள்ளன.

மானிப்பாய் பிப்பிலி வீதியிலுள்ள இளைஞர் தொழிற்பயிற்சி மைய கட்டடத்தில் இந் நிகழ்வுகள் நாளை வியாழக்கிழமை காலை 10 மணி முதல் இடம்பெறவுள்ளன.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கலந்து கொண்டு பொங்கல் நிகழ்வை ஆரம்பித்து வைப்பதோடு புனரமைக்கப்பட்ட இளைஞர் தொழிற பயிற்சி மையத்தினையும் திறந்து வைக்கவுள்ளார்.

இந் நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு மானிப்பாய் மேற்கு இளைஞர் கழகத்தினர் கேட்டுள்ளனர். (48)

# சுவாமி விவேகானந்தரின் 153 ஆவது பிறந்த தின விழா







வவுனியா நகர வரியிறுப்பாளர் சங்கமும், கலை, இலக்கிய நண்பர்கள் வட்டமும் இணைந்து ஏற்பாடு செய்த சுவாமி விவேகானந்தரின் 153ஆவது பிறந்ததின நிகழ்வு சுவாமி விவேகானந்தரின் சிலை அடியில் தமிழ்மணி அகளங்கன் தலைமையில் நேற்று முன்தினம் காலை 9 மணிக்கு நடைபெற்றது.

இந்துவாக இருந்தாலும் மற்ற மதங்களின் மேல் அவர் கொண்ட பற்றையும். இளைஞர்களின் விழிப்புணர்வுக்காக அவர் மேற்கொண்ட சேவைகளையும், அமெரிக்க, சிக்காக் கோவில் 1893.09.11இல் நடந்த உலக சர்வசமய மகாநாட்டில் சீமான்களே, சீமாட்டிகளே (லேடீஸ் ரூ ஜென்டில்மன் ) என்று உரை நிகழ்த்தாமல் சகோதர, சகோதரிகளே என உரை நிகழ்த்தி அனைவரையும் பரவசப்டுத்திய பெருமை அவரைச் சாரும் என சுவாமி விவேகானந்தரின் பெருமைகளை தமிழ் மணி அகளங்கன் நயம்பட உரைத்தார்,

பின்னர் உரை நிகழ்த்திய இன்தமிழ் இனியன் எஸ் எஸ் வாசன் மாணவர்கள் குறைந்தபட்சம் சுவாமி விவே கானந்தரை பற்றி 10 வசனமாவது தெரிந்து இருக்க வேண்டியே மாணவர்களை அழைத்து வந்ததாகவும், இந்த நிகழ்வுகளில் ஒவ்வொரு பாடசாலையிலும் இருந்து 10 மாணவர்களை அனுப்பி அவர்களுக்கு தமிழ் பெரியார்களின் அறிவை புகட்ட வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்டன் சோமராஜா ஆர்வமாக இருப்பதாகவும் இனி வரும் காலங்களில் இந்த பெரியார் நினைவு தினங்களில் மாணவர்களை பங்குபெற்ற தான் வழிசமைப்பதாகவும் தன்னிடம் தெரிவித்ததாக தெரிவித்தார்

இந்த நிகழ்வில் பிரதேச செயலாளர் திரு கா,உதயராசா, நகரசபையின் செயலாளர் திரு க.சத்தியசீலன் ,ஹட்டன் நஷனல் வங்கியின் முகாமையாளர் திரு அருணன், இலங்கை வங்கி நகர கிளை முகாமையாளர் ரோய் ஜெயக்குமார், வவுனியா நகர வரியிறுப்பாளர் சங்கத் தலைவர் சந்திரகுமார் (கண்ணன் ),மாவட்ட சமுக சேவை உத்தியோகத்தர் இன்தமிழ் இனியன் எஸ் எஸ் வாசன் ,இறைபணி செம்மல் வை, செ.தேவராசா, பிரதேச சபை உறுப்பினர் சிவம் ,சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத் தலைவர் நா.சேனாதிராசா, வடக்கின் வசந்தம் இலங்கை மின்சாரசபையின் பொறியியலாளர் திருமதி மைதிலி தயாபரன், சமூக ஆர்வலர்கள் விக்னா, பாலா, பிரதாபன், பபிந்தன், வரதன், வில்வராசா, உட்பட வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (70)

**90**களில் சோவியத் யூனியனின் வீழ்ச்சி உலகை அப்படியே தலைகீழாகப் புரட்டி போட்டது. பனிப்போர் முடிவுக்கு வந்து விட்டதன் காரணமாக அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிரி தேவைப்பட்டது. எதிரிகளை வைத்தே அரசியல் செய்வதன் மூலம் தன் இருப்பை நிலை நாட்டிக்கொள்வது ஏகாதிபத்திய வழக்கம்.

இதனடிப்படையில் இஸ்லாமிய நாடுகள் முன்பு தான் உருவாக்கிய அதே ஜிஹாதிகளைத் தனக்கு எதிராக அமெரிக்கா உருவாக்க தொடங்கியது. ஒசாமா பின்லேடன் தொடங்கி முல்லா உமர் வரை அதன் எதிரிகளாக மாறினார்கள்.

இங்கு கவனிக்க வேண்டிய விஷயம், செப்ரெம்பர் 11 அமெரிக்க இரட்டை கோபுரத் தாக்குதலுக்கு சற்று முன்பு வரை அமெரிக்கா ஆப்கானிய தலிபான் அரசிற்கு நிதி உதவி அளித்து வந்தது என்பதுதான். இதிலிருந்தே அதன் எதிரிகளை உற்பத்தி செய்யும் செயல்முறைகளை நாம் புரிந்து கொள்ளலாம்.

மேலும் ஏற்கனவே அரபு நாடுகளில் உருவாகிய பல்வேறு சீர்திருத்த, திருத்தல் வாத, அரசியல் இஸ்லாம் வகைப்பட்ட இயக்கங்கள், தலைவர்கள் உலக இஸ்லாம் என்பதைத் தங்கள் இலட்சியமாக வைத்தனர். மேலும் அநியாயக்கார ஆட்சியாளர்கள் மீது போர்தொடுத்தல், நம்பிக்கையற்றவர்கள் மீது போர் தொடுத்தல் போன்ற குர் ஆனிய வசனங்களை தங்கள் அரசியல் செயற்பாடுகளுக்கு ஏற்றவாறு பிரதியாக்கம் செய்து கொண்டனர்.

இதனடிப்படையில் எல்லா உலக மாற்றங்களுக்கு எதிரான போக்குகள், சிந்தனைகள், பெண்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகள், தேவையற்ற கட்டுப்பாடுகள், வரலாற்றை நிராகரித்தல், அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியை சந்தேகத்தோடு அணுகுதல் (இப்போதும் கூட செல்போனின் ரிங்டோன் குறித்த சர்ச்சை நடந்து வருகிறது), மதப்பிரதிகளைத் தங்களின் வறட்டு கோட்பாடுகளுக்கும், பிற்போக்கான சிந்தனைகளுக்கும் தகுந்தவாறு விளக்கம் செய்து "கூடாது" என்ற சொல்லோடு அன்றாட வாழ்வின் மனித செயல்பாடுகளை நீட்டுவது. உதாரணமாக, இருப்பது கூடாது, படுப்பது கூடாது, நிற்பது கூடாது, நடப்பது கூடாது, பாடல் கேட்கக் கூடாது, திரைப்படம் பார்க்கக் கூடாது, பெண்கள் சிரிக்கக் கூடாது போன்றவை.

மேலும் அறிவியல் வளர்ச்சியை இறைவனுக்கு சவால் விடும் ஒன்றாக தலிபான்கள் அணுகினர். இதனால் தங்கள் ஆட்சிக்காலத்தில் ஆப்கானில் வானிலை ஆராய்ச்சி மையத்தைக் குண்டுவைத்து தகர்த்தனர்.

இயல்பான இயக்கத்தை, அதன் வளர்சிதை மாற்றத்தை உள்வாங்க மறுத்து மதப்பிரதிகளில் அதற்கு விளக்கம் தேடும் முறை என்பதே தூய அடிப்படைவாதம்.

ஒரு மனிதன் இறைவன் மீது நம்பிக்கைகொண்டு, அதன்படி வழிபாடுகளை, சடங்குகளைத் தன் வாழ்வில் அமைத்துக்கொண்டால் அவனை நாம் அடிப்படைவாதியாகக் கருதி விட முடியாது. அவன் அதன் அடிப்படைகள் மீது தன்னைத் தகவமைத்துக்கொள்கிறான். அது அவனின் தனிமனித செயல்பாடு மற்றும் சுதந்திரம்.

ஆனால் சராசரி மனித வாழ்வின் எல்லா இயக்கத்திற்கும் மதப்பிரதிகளில் விளக்கம் தேடி அதன் மூலம் தங்களுக்கான வறட்டுக் கருத்தியல்களை உருவாக்கி, அதனை சமூகத்தின் பொதுப்புத்தியாக, அரசியல் கோட்பாடாகத் திணிக்க முயலும் நபர்களை, சக்திகளை, ஆதிக்கவாதிகளை நாம் அடிப்படைவாதிகள் என்கிறோம்.

அவர்கள் எல்லோரையும் அதற்குள் உள்ளடக்க முயற்சிப்பார்கள். தங்களை சாக்குமூட்டைகளாக பாவிப்பது. அவர்கள் ஆண்களைக் கண்டால் தலை தெறிக்க ஓடவேண்டும் என்று கட்டளை இடுவது. பெண்கள் மத விஷயங்களில் ஆண்கள் சொல்வதை மட்டுமே எவ்வித சந்தேகமுமின்றி கேட்டு நடக்க வேண்டும் என்பன போன்றவை இந்தியாவிலும், சில இஸ்லாமிய நாடுகளிலும் நடந்து கொண்டிருக்கின்றன.

பஸ்தூன் பழங்குடி மக்களிடையே பெண் குழந்தைகளின் கல்விக்காகப் போராடிய மலாலா என்ற சிறுமியை இரு ஆண்டுகளுக்கு முன்பு தக்ரீக் ஏ தலிபான் என்ற அமைப்பினர் சுட்டது போன்றவை இதற்கான உதாரணங்கள்.

மேலும் லௌகீக கோட்பாடுகளின் மீது ஒருவன் ஈர்ப்புகொள்வது, புரட்சியாளர்களின் கோட்பாடுகளைப் பின்பற்றுவது என்பதையும் மேற்கண்ட அடிப்படைவாதத்தையும் நாம் பிரித்துப் பார்க்க வேண்டும். இவர்கள் உலக இயக்கத்திற்கு அந்தப் புரட்சியாளர்களின் கோட்பாடுகளை முன்மாதிரியாக எடுத்துக்கொள்கிறார்கள். அதன் சாராம்சத்தை உள்வாங்குகிறார்கள். எல்லாவற்றிற்கும் அவர் என்ன சொல்கிறார் என்று தங்களைத் தாங்களே உரசிக்கொள்வதில்லை.

# அடிப்படைவாதம் என்றால் என்ன? 4

– எச்.பீர்முஹம்மது




அதற்கு முன்பிருந்த பல அறிவியல் அடையாளங்கள் அழிக்கப்பட்டன. இதற்கு அவர்கள் மதப்பிரதிகளையே மேற்கோள் காட்டினார்கள். இதில் நாம் கவனிக்க வேண்டியது லௌகீக உலகின் ஏற்றுக்கொள்ளாத மனிதர்களை ஒதுக்குவார்கள். தாங்கள் மட்டுமே உலகில் உங்களைக் காப்பாற்ற முடியும் என்பார்கள்.

மேலும் தங்களைப்பற்றிய எவ்வித சுயவிமர்சனமும் இல்லாமல் எல்லாவற்றையும் பிடிவாதமாக அணுகுவது, அதற்காகக் கொந்தளிப்பது போன்றவையும் அடிப்படைவாதத்தின் குணாம்சங்கள்.

இதன் தொடர்ச்சியில் இஸ்லாமிய அடிப்படைவாதத்தின் பெயரால் பெண்கள் மீது உளவியல் மற்றும் உடலியல் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்படுவது. அவர்களின் சகலவித உரிமைகளை மறுப்பது.

உதாரணமாக, செல்போன் மற்றும் பங்குச் சந்தை குறித்து பெரியார் என்ன சொல்லியிருக்கிறார். இது நமக்கு சரியான ஒன்றா? ஆகுமானதா? என்று ஒரு பெரியாரிஸ்ட் பார்ப்பதில்லை. அவரின் பிரதிகளில் இது குறித்து தேடி அலைவதில்லை. இதுதான் இரண்டிற்குமான வித்தியாசம்.

மேலும் மன்னர் ஆட்சி நடைபெறும் இஸ்லாமிய நாடுகளைப் பொறுத்தவரை ஒருவர் மன்னரையோ அல்லது அவரின் ஆட்சியையோ விமர்சித்தாலே அது இஸ்லாத்திற்கு விரோதமானதாகப் பார்க்கப்படும். ஈரானும், சவுதி அ[illegible] யாவும் சமீபத்திய உதாரணங்கள்.

(தொடரும்)

# சினிமா சினிமா

✸ கடந்த ஆண்டு வெளியான 200இற்கும் அதிகமான படங்களில் அதிக லாபத்தைத் தந்த படங்களில் முதலிடத்தை பிடித்திருக்கிறது "கோலி சோடா." தயாரிப்புச் செலவைக் கணக்கிட்டால் 14 மடங்கு லாபம் தந்திருக்கிறதாம். அந்தப் படத்தின் இயக்குநர் விஜய் மில்டன் அடுத்து, விக்ரம் நடிப்பில் "10 எண்றதுக்குள்ள" படத்தை இயக்கி வருகிறார்.

✸ கடந்த பத்து ஆண்டுகளைப் போலவே தொடர்ந்து 11 ஆவது ஆண்டாக கடந்த ஆண்டிலும் அதிகப் படங்கள், அதிகப் பாடல்கள் என முதலிடம் பிடித்திருக்கிறார் பாடலாசிரியர் நா.முத்துக்குமார். "தங்க மீன்கள்" படத்துக்கு எழுதிய "ஆனந்த யாழை மீட்டுகிறாய்..." பாடலுக்கு தேசிய விருது கிடைத்தது. கமல்ஹாசனின் "பாபநாசம்", விஷ்ணுவர்தனின் "யட்சன்", இளையராஜா இசையில் "டூரிங் டாக்கீஸ்" என இந்த வருடத்துக்கான பட்டியலில் 100இற்கும் அதிகமான படங்கள் இருப்பது தனி சிறப்பு.

✸ "சி 2 எச்" நிறுவனத்தின் முதல் வெளியீடாக தனது இயக்கத்தில் உருவாகியுள்ள "ஜே கே எனும் நண்பனின் வாழ்க்கை" படத்தை வெளியிடுகிறார் இயக்குநர் சேரன். பொழுதுபோக்கு சாதனங்கள் பெருகி வரும் இந்நாள்களில் திரையரங்கம் செல்வதற்கான நேரம் பலருக்கு இல்லை என்பதால், வீட்டிற்கே சினிமாவை கொண்டு செல்லும் விதத்தில் அவர் "சி2எச்" நிறுவனத்தைத் தொடங்கினார். பல ஆய்வுகள் முடிவுற்ற நிலையில், பொங்கல் அன்று "ஜே கே எனும் நண்பனின் வாழ்க்கை" படத்தை இந்தத் திட்டத்தின்படி டி.வி.டி மூலமாக வெளியிட உள்ளார்.



✸ கதை திரைக்கதை வசனம் இயக்கம், ஜிகர்தண்டா மற்றும் திருடன் பொலிஸ் உள்பட சில படங்களில், "கெஸ்ட்" ரோலில் நடித்திருந்தார் விஜயசேதுபதி. ஆனால், இதெல்லாமே நட்புக்காக அவர் செய்தது. விளைவு, அவருக்கு முன்பின் பழக்கமில்லாதவர்களும், இப்போது அவரை, "கெஸ்ட்" ரோலில் நடிக்குமாறு கேட்டு, படையெடுத்துக் கொண்டிருக்கின்றனர். இதனால், டென்ஷன் ஆன விஜயசேதுபதி, "கெஸ்ட்" ரோலில் நடிக்க கேட்டு யாராவது வந்தால், அலுவலகத்திற்குள்ளேயே விட வேண்டாம் என்று தன் உதவியாளர்களிடம் சொல்லியுள்ளார்.

✸ வழக்கு எண், ஆதலால் காதல் செய்வீர் மற்றும் ஜன்னல் ஓரம் உட்பட சில படங்களில் நடித்தவர் மனீஷா யாதவ். சில முன்னணி இயக்குனர்களிடம், அவர் சான்ஸ் கேட்டு சென்றபோது, "உன்னுடைய நடிப்பில் போதுமான திருப்தி இல்லை..." என்று கூறினர். விளைவு, கூத்துப்பட்டறையில் சேர்ந்து, சில மாதங்களாக நடிப்பு பயிற்சி பெற்று, மீண்டும் அதே இயக்குனர்களை முற்றுகையிட்டு வருகிறார் மனீஷா.



✸ தாரை தப்பட்டை படத்தில் சசிகுமார் மற்றும் வரலட்சுமி இருவருக்கும் சில மாதங்களாக கரகாட்ட பயிற்சி கொடுத்து, தஞ்சாவூரில் படமாக்கியிருக்கிறார் பாலா.

ஒன்றில் பேசியிருக்கிற[illegible]

✸ ஹன்சிகா, தற்[illegible] நடித்து வரும், மாரீசன்[illegible] ஸ்ருதிஹாசனுக்கு முக்[illegible] ஹன்சிகாவை, "டம்மி"[illegible] எனவே "இனிமேல், "[illegible] வேடத்தில் நடிக்கவே[illegible] முடிவெடுத்திருக்கிறார்.

✸ மான் கராத்தே[illegible]

**ஹொ**லிவுட் நடிகர் ரொம் குரூஸ் 1994-இல் அமெரிக்காவின் நாஷனல் பொரஸ்ட் என்கிற பகுதியில் ஒரு வீடு 10,000 சதுர அடியில் கட்டினார். இதில் 6 குளியல் அறை, 4 படுக்கை அறைகள் கொண்ட மாளிகையும், 1600 சதுர அடியில் ஒரு விருந்தினர் இல்லமும் உள்ளது. இது 3 படுக்கை அறைகளும் 3 குளியல் அறைகளும் கொண்டது.

தற்போது இந்த வீட்டை 1000 கோடி ரூபாய்க்கு விற்க முன்வந்துள்ளார் குரூஸ்.

மனைவி கேட்டி ஹோல்ம்ஸிடமிருந்து விவாகரத்து பெற்ற பின், பணத்தேவை அதிகமாகிவிட்டது. அதனால்தான் வீட்டை விற்கிறாராம்.


ரொம் குரூஸ் பற்றி மற்றொரு கிசுகிசு என்னவென்றால், அவருக்கு நீர்மூழ்கி தொட்டி ஒன்று உள்ளதாகவும் வெளிநபர்களிடமிருந்து தனக்கும் குடும்பத்திற்காகவும் பாதுகாப்புக்காக அதைக் கட்டியுள்ளதாகக் கூறப்படுகிறது. ஆக அதுவும் விரைவில் விற்பனைக்கு வரலாம்..!

# நடிகரின் வீடு!



# என்ன திறமை பாருங்கள்!

**ரோ**மில் நானூற்றைம்பது தேவாலயங்கள் உள்ளன. அவற்றில் "பாந்தியன்" என்ற ஆலயம் மிகவும் பழமையானது. கி.மு.27ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. வட்ட வடிவமாக அமைக்கப்பட்டுள்ள இக்கோயிலின் கதவுகள் பித்தளையால் உருவானவை. கோயிலில் உச்சிக் கூரை கிடையாது. ஆலயத்தில் நடுவட்டப் பகுதியைச் சுற்றி சுவரில் பன்னிரண்டு ஜன்னல்கள் உள்ளன. மேற்கூரையின் இடை வெளி ஒளி எந்த ஜன்னல் மீது விழுகிறதோ, அது அப்போதைய நேரத்தைக் குறிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. உதாரணமாக ஏழாம் எண் ஜன்னல் மீது ஒளி விழுந்தால் அப்போது மணி ஏழு. நம் முன்னோர்களுக்கு என்ன திறமை பாருங்கள்!



...சிகுமார் நாதஸ்வர பயிற்சியும் எடுத்து வருகிறார். தில்லானா மோகனாம்பாள் படத்தில் சிவாஜி கணேசன் நாதஸ்வரம் வாசித்தது போன்று பெரிய அளவில் காண்பிக்கவும் திட்டமிட்டிருக்கிறார் பாலா.

✸ "இதுவரை நான் ஜாலியான, ரொமான்டிக் கதைகளில்தான் அதிகமாக நடித்திருக்கிறேன் ஆனால், அமிதாப்பச்சனுடன் நடித்து வரும், ஷாமிதாப் படத்தில் சீரியசான ரோலில் நடிக்கிறேன். தொடர்ந்தும் இந்த மாதிரி வித்தியாசமான கதாபாத்திரங்களில் நடிக்கவே விரும்புகிறேன்... தெலுங்கிலும் இனி நடிப்பேன்..." என்று தெலுங்குப்பட விழா ...நக்கிறார் தனுஷ்.

... தற்போது விஜய்யுடன் ...மாரீசன் படத்தில், ...து முக்கியத்துவம் கொடுத்து. ...டம்மி"யாக்கி விட்டனராம். ...மல், "டபுள் ஹீரோயின்" ...கவே மாட்டேன்..." என்று ...கிறார்.

...த்தே மற்றும் கத்தி படங்களில் அனிருத்தின் இசையை கொண்டாடி வந்த இணையதள ரசிகர்கள், தற்போது, அவரது இசையில் வெளியாகியுள்ள காக்கி சட்டை படத்தின் பாடல்கள் அனைத்தும் ஒரு ஹொலிவுட் படத்தின் ஆல்பத்தில் இருந்து சுட்டவை என்று விமர்சனம் செய்து வருகின்றனர்.

✸ காத்தாடி படத்தின் படப்பிடிப்பில் இருந்தபோது, சில, "குடிமன்னர்"கள் அவரிடம் தகராறு செய்ததை அடுத்து, பலத்த செக்யூரிட்டியுடன் செல்கிறார் தன்ஷிகா.


✸ துல்கர் சல்மான் மற்றும் நித்யாமேனன் நடிக்கும், "ஓ.கே. கண்மணி" படத்தின் வசன காட்சிகளை இரண்டு மாதத்தில் முடித்து விட்டார் மணிரத்னம்.

✸ கௌதம் கார்த்திக் ப்ரியா ஆனந்த் இருவரையும் பற்றி கிசுகிசு வெளியானதையடுத்து, தந்தை கார்த்திக், தன் அடியாட்களை அனுப்பி ப்ரியா ஆனந்தை எச்சரித்துள்ளாராம்.

✸ 'ஐ' படத்திற்கு பின், தமிழில் தான் எதிர்பார்த்தபடி படங்கள் இல்லாததால், ஹிந்தியில் நடிப்பதற்கு கதை கேட்டு வருகிறார் எமிஜாக்சன்.

✸ மெல்லிசை என்ற படத்தில் இசையமைப்பாளர் வேடத்தில் நடிக்கிறார் விஜசேதுபதி.

# மைத்திரியைத் தூத்துறதை எந்த மட்டில ஆரம்பிப்பம்?



## வெளிவாயன் வேலாயுதன் சொல்லுவது....

**வ**ரலாறு திரும்பத் திரும்ப நிகழும். அது ஒருமுறை துன்பியல் நிகழ்வாகவும் மறுமுறை கேலிக்கூத்தாகவும் ஆகிவிடும் எண்டு சொல்லுவினம்.

ஒரு சில வருடங்களுக்கு முன்னர் புலியள் பெண் தற்கொலைக் குண்டுதாரியை ஏவிக் கொல்ல முயன்ற அதே மைத்திரிபால சிறிசேனவை அந்தப் புலியளின் விம்பமெண்டு சொல்லிச் சொல்லியே சனத்தை உசுப்பேற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதியாகப் பரிந்துரை செய்து தெரிவு செய்திருக்குது.

கூட்டமைப்பின் முக்கியஸ்தர் ஸ்ரீகாந்தா டான் தொலைக்காட்சி நிகழ்ச்சியிலை பேசிறபோது கூட்டமைப்பு ஆருக்கு வாக்களி எண்டு சொல்லாட்டிலும் தமிழ் மக்கள் மைத்திரிக்கே வாக்களிச்சிருப்பினை எண்டு சொல்லியிருக்கிறார். அதுதான் உண்மையெண்டாலும் அதைக் கூட்டமைப்பு ஏற்றுக் கொள்ளாது. இல்லையெண்டால் அனந்திக்கு நடந்ததுதான் இவருக்கும் நடக்குமோ தெரியேல்லை.

ஜனாதிபதித் தேர்தலிலை இரண்டு சமூகங்களின்ரை இருவேறு பார்வையள்தான் வெளித்தெரியுது. வழிமுறையிலை மாற்றம் வேணும், ஆளிலை இல்லை எண்டு பெரும்பாலான சிங்களச் சனங்கள் கருதியிருக்கினை. ஒரு புது ஆள் வாறது நல்லது எண்டு கண்டிய சிங்கள மக்களும் சிறுபான்மைச் சமூகங்களும் கருதியிருக்கினை.

தோல்வியைப் பெருந்தன்மையோடை ஏற்று மகிந்த ராஜபக்ச தமது வீட்டிற்குச் சென்றிருக்கிறார். வெற்றி பெற்ற மைத்திரிபால சிறிசேனவோ, ரணில் விக்கிரமசிங்கவோ மிகத் தெளிவாக அன்பின் ஆட்சியைத் தொடருவம் எண்டும், ஆரையும் பழிவாங்கப் போறதில்லையெண்டும் கூறியிருக்கினை. ஜனாதிபதி மகிந்தவைப் பாராட்டியுமிருக்கினை.

ஆனா எங்கடை தமிழ்க் கொம்புகள் உடனையே பழியுணர்ச்சியோடை புறப்பட்டிட்டுதுகள். தூக்கப்பட்டார் ஆளுநர், விரட்டப்பட்டார் கோதாபய எண்டு பழியுணர்வோடை குரோதம் கொப்பளிக்க ஒரு பத்திரிகை எழுதுது. அதன் பிரதானி விரட்டப்பட்டவரோண்ட எப்பிடியான உறவைக் கொண்டிருந்தார் எண்டது ஆண்டவனுக்கே வெளிச்சம்.

அதுமட்டுமில்லை ஈ.பி.டி.பி. முக்கியஸ்தரின்ரை வீட்டுக்குக் கல்லெறியுது. இது இனி உத்வேகத்தோடை ஏனைய இடங்களிலையும் தொடரப் போகுது.

ஒரு காலத்திலை போராட்டத்தின்ரை தூண்களாய் இருந்த கருணாவையும், கே.பியையும் தளபதியளாய் கண்டவர்களும், எழுதிய பத்திரிகைகளும் இப்ப என்னடாவெண்டால் பிடிச்சு நார்நாராய்க் கிழிப்பம் எண்டு கங்கணம் கட்டி நிக்குதுகள்.

திண்ட சட்டிக்குள்ளை மலங் கழிக்கிறவன்தான் ஈனத் தமிழன் எண்டு தேர்தல் முடிவைப் பார்த்து பழுத்த முதியவர் ஒருத்தர் சொன்னார். அவர் அதுக்கான காரணங்கள் ஞாயங்களையும் அடுக்கினார்.

அரசாங்கத்திலை இணைஞ்சு கொண்டு ஜீ.ஜீ.பொன்னம்பலம் மூண்டு தொழிற்சாலையளைத் தமிழர் பகுதியளிலை நிறுவினார். பல்லாயிரக் கணக்கானோருக்கு வேலைவாய்ப்புகளை வழங்கக் காலாய் இருந்தார். அவருக்கு இந்தச் சமூகம் ஒரு சிலை கூட வைக்க யோசிக்கேல்லை.

இண்டை வரைக்கும் நிலைச்சிருக்கிற யாழ்ப்பாண நகரத்தைக் கட்டியெழுப்பின அல்பிரட் துரையப்பாவை ஒரு துரோகி எண்டுதான் அதன் வசதியள் அனைத்தையும் அனுபவிக்கிற சனம் சொல்லுது. டக்ளஸுக்கும், மகிந்தவுக்கும் அதுதான் நடக்குது என்கிறார் அவர்.

அது மட்டுமில்லை. ஜே.ஆர். ஜெயவர்த்தன ஒபரேசன் லிபரேசன் சண்டையை ஆரம்பிச்சு யாழ்ப்பாணத்தை முழுமையாகப் பிடிக்கிற நேரம் கிருஸ்ண பரமாத்மா போலை ராஜீவ் காந்தி தெரிஞ்சார். பிறகு சண்டை நடந்தது. அதுக்குப் பிறகு பிரேமதாச நல்ல மனிசராய்த் தெரிஞ்சார். ஆயுதங்களும் வாங்கி, நட்சத்திர விடுதிகளில் தங்கிப் பேசிச்சினம். தேனிலவு கசந்து சண்டை தொடங்கி பொருளாதாரத் தடையெண்டு உக்கிரமானது வாழ்க்கை.

வலி.வடக்குச் சனம் அண்டைக்கு எழும்பினது மகிந்தவின்ரை காலத்திலைதான் ஓரளவுக்கு மீளக் குடியமர்ந்தது. இன்னும் கனசனம் ஊருக்குப் போகக் கிடக்குது.

அதுக்குப் பிறகு சமாதான தேவதையாய் சந்திரிகா அம்மையார் வந்தார். முன்னேற்றகரமான யாப்பினையும் கொண்டு வந்தார். பின்னர் சமாதானம் முறிஞ்சு சண்டை தொடங்கிச்சுது. தேவதை அரக்கியாகச் சித்திரிக்கப்பட்டார்.

யாழ்ப்பாணம் இடம்பெயர்ந்தது. வன்னியிலும் ஜயசிக்குரு சண்டையினால் மக்கள் நிலைகுலைந்தனர். அதன் தொடர்ச்சியாக சந்திரிகா தற்கொலைக் குண்டுத் தாக்குதலிலும் கண்ணில் காயமடைந்தார்.

அதன் பின்னர் புலியளின் தலைவரால் செயற்திறமை வாய்ந்த தலைவர் என்று புகழாரம் சூட்டப்பட்ட மகிந்த ராஜபக்சவை, இப்ப பிரதமராயிருக்கிற ரணிலை வரவிடாமல் தடுத்ததன் மூலம் தெரிவு செய்தினை. இப்ப மகிந்தவைத் தோற்கடிக்கச் செய்து மைத்திரியைத் தெரிவு செய்திருக்குது இந்தச் சனம் எண்டு சொல்லிப் பெரு மூச்சு விட்ட அவர் 'கொஞ்சக் காலந்தான் தம்பி. மைத்திரியையும் இவங்கள் வசை பாடத் தொடங்கிடு வங்கள் இருந்து பார்' எண்டு சொல்லுறார்.



அவர் சொன்னதெல்லாம் சரிதான். அப்ப தூற்றிற காலம் கொஞ்ச நாளாலை வரும் போலைதான் கிடக்குது. இப்பவே மனோ கணேசன் முதலாவது தூற்றலை ஆரம்பிச்சு அடியெடுத்துக் குடுத்திருக்கிறார்.

# தென்னிலங்கை வியாபாரிகளுக்கு எதிராக நெல்லியடி வர்த்தகர்கள் முறைப்பாடு

(நெல்லியடி)

நெல்லியடி புதிய சந்தைப் பகுதியின் வெளிப்பகுதியில் நடைப்பாதை வியாபாரத்தில் ஈடுபடும் தென்னிலங்கை வியாபாரிகளால் உள்ளூர் வியாபாரிகளின் வியாபாரம் பாதிக்கப்படுவதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு வெளிமாவட்ட வியாபாரிகள், குறித்த சந்தையின் வெளிப் பகுதியில் புடவை மற்றும் இதர பொருட்களை வியாபாரம் செய்வதில் மும்முரமாக ஈடுட்டுள்ளனர். மேலும் இங்கு குறைவான விலையில் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாகவும் இதனால் மக்கள் அவர்களிடமே பொருட்களை கொள்வனவு செய்வதாகவும் தெரிவிக்கும் உள்ளூர் வியாபாரிகள் இதனால் தமது வியாபாரம் பாதிக்கப்படுவதாகவும் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இத்தகைய வியாபார நடவடிக்கைகள் தொடர்பில் நெல்லியடி வர்த்தகர்கள் வர்த்தக சங்கத்தினூடாக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைத் தவிசாளருக்கு தெரியப்படுத்தியுள்ளதாக கூறியுள்ளனர்.

எனினும் சபைத் தவிசாளர் குறித்த நடைபாதை வியாபாரிகளிடம் தங்களுக்கு வேறு இடம ஒதுக்கி தருவதாக தெரிவித்துள்ளபோதிலும் இதற்கு நடைபாதை வியாபாரிகள் உடன்படவில்லை என உள்ளூர் வியாபாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தென்னிலங்கை வியாபாரிகளின வியாபாரத்தால் தமது வியாபாரம் பாதிக்கப்படுவதால் கடை வாடகைப் பணத்தை கட்டமுடியாதுள்ளதுடன் வேலையாட்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாமல் தாம் கஷ்டநிலையை எதிர்நோக்கியுள்ளதாகவும் கூறும் உள்ளூர் வர்த்தகர்கள் தென்னிலங்கை வியாபாரிகளுக்கு எதிராக நெல்லியடி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதாக தெரிவித்துள்ளனர். (18)

# அலங்கார உற்சவம்

(யாழ்.நிருபர்)

தெல்லிப்பளை பன்னாலை மயிலையம்பதி சாமுண்டிகாதேவி சமேத ஸ்ரீ ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொடங்கி பெப்ரவரி 1 ஆம் திகதி வரை பதினைந்து நாட்கள் நடைபெறவுள்ளது.

உற்சவ நாட்களில் தினமும் மாலை 7 மணிக்கு செஞ்சொல்லருவி சைவப்புலவர் நித்தியசசிதரன், "சிவலீலைகள்" என்னும் பொருளில் தொடர்சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார்.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 1 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மணவாளக் கோலத்திருவிழா இடம்பெறும். (10)


# வழிகாட்டல் வகுப்பு

(யாழ்.நிருபர்)

அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் நடாத்தும் இளம் சைவப்புலவர், சைவப்புலவர் தேர்வுகளுக்கான வழிகாட்டல் வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன. எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் இவ் வகுப்புகள் நடைபெறும்.

சைவப்புலவர், இளம் சைவப் புலவர் தேர்வுகளுக்கு விண்ணப்பித்தவர்கள் தவறாது இவ் வழிகாட்டல் வகுப்புகளில் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். மேலதிக விபரங்களை 077 6132176 இலக்க தொலைபேசி மூலம் சைவப்புலவர் சங்கச செயலாளர் செ.கந்த சத்தியதாசனுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும். (10)

# ஆடு திருடிய நபர் பொலிஸாரால் கைது



(கரணவாய்)

பருத்தித்துறை மாதனை பகுதியில் ஆடு திருட்டில் ஈடுபட்ட திருடனை பருத்தித்துறை பொலிஸார் ஆட்டுடன் பிடித்துள்ளனர்.

கடந்தவாரம் ஆடு திருட்டுப் போன நிலையில் பருத்தித்துறை பொலிஸார் திருடனை கைது செய்ததுடன் ஆடும் மீட்கப்பட்டு பொலிஸாரினால் பராமரிக்கப்பட்டு வந்த நிலையில் அவ் ஆடு 3 குட்டிகளை ஈன்றுள்ளதாகவும் குட்டிகளும் தாய் ஆடும் பராமரிக்கப்பட்டுவருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆட்டை வளர்த்த உரிமையாளர் தனது ஆடு என்பதற்கு சரியான அத்தாட்சி காட்டி பெற்றுக்கொள்ளுமாறு பருத்தித்துறை பொலிஸார் கேட்டுள்ளனர். (18)

# சத்திரத்து ஞானவைரவர் ஆலயத்தில் பட்டிப் பொங்கல் விழா

(யாழ்.நிருபர்)

யாழ்ப்பாணத்தில் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற பட்டிப் பொங்கல் விழா நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.சத்திரத்து ஞானவைரவர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

பசுக்கள், இடபங்கள் பாதுகாப்பு இணையத்தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் நல்லை ஆதீனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமச்சாரிய சுவாமிகள் யாழ்.சின்மியாமிஷன் யாக்கிரத சைதன்யாசுவாமிகள், சர்வதேச இந்து குருமார் ஒன்றியத் தலைவர் சபா.வாசுதேவக் குருக்கள், சைவக்குருமார் ஒன்றியத் தலைவர் மற்றும் நாகவிகாரை பிரதமகுரு ஆகியோர் கலந்து கொண்டு ஆசியுரை வழங்குவர்.


சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் சிறப்புரை நிகழ்துவார். கோமாதா பவனி கே.கே.எஸ். வீதியில் ஆரம்பித்து மின்சார நிலைய வீதி, பெரியகடை, யாழ்.பஸ்நிலைய மேற்கு வீதி, ஆஸ்பத்திரி வீதி ஊடாக ஆலயத்தை வந்தடையும்.

பங்கு பற்றும் பசுக்களுக்கு தவிடு இலவசமாகவும் அடியார்களுக்கு பசும்பாலும் பிரசாதமும் மாணவர்களுக்கு கல்வி உபகரணங்களும் வழங்கப்படும். (10)

# எம்.ஜி.ஆர்.பிறந்ததினம்

முன்னாள் தமிழக முதலமைச்சரும், புரட்சி நடிகருமான எம்.ஜி.ஆரின் பிறந்த தினம் கல்வியங்காடு சந்திக்கு அண்மையில் செங்குந்தா சந்தை வளாக முன்பகுதியில் அமைந்துள்ள எம்.ஜி.ஆரின் சிலைக்கு முன்பாகக் கொண்டாடப்படவுள்ளது.

எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணியளவில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வு யாழ்எம்ஜி.ஆர்.என அழைக்கப்படும் கோப்பாய் தெற்கைச் சேர்ந்த இ.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும். புரட்சி நடிகர் எம்.ஜி.ஆரின் பிறந்த நாளை முன்னிட்டு வறுமைக் கோட்டுக்குட்பட்ட 100 பேருக்கு உடுபுடவைகள் வழங்கப்படவுள்ளன. ஆண்களுக்கு சாரம், சேட் ஆகியவையும் பெணகளுக்கு சாறிகளும் யாழ்எம்.ஜி.ஆர் வழங்கவுள்ளார். மிக நீண்ட காலமாக புரட்சி நடிகர் எம்.ஜி.ஆரின் பரம ரசிகராகத் திகழும் யாழ்.எம்.ஜி. ஆர் இ.சுந்தரலிங்கம் தமது சொந்தச் செலவில் கல்வியங்காடு செங்குந்தா சந்தை வளாகத்தில் எம்ஜி ஆருக்கான சிலையொன்றை அமைத்து அதனைத திறந்து வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (137)



நவாலி சென்பீற்றேஸ் றோ.க.த.க.பாடசாலை ஒளிவிழாவில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். (10)

# வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு கொடுப்பனவு

கடந்த வருடம் ஏற்பட்ட வறட்சியால் அழிவுற்ற நெற்பயிர்களுக்கான இழப்பீடு தற்போது வழங்கப்பட்டுவருகின்றது.

கடந்த ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதான காலப்பகுதியில் இவ் இழப்பீட்டு கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதுடன் மேலும் வழங்கப்படாத விவசாயிகளுக்கு அவை தற்போது மீள வழங்கப்பட்டு வருகின்றது. தென்மராட்சிப் பகுதியில் பெரும்பாலான விவசாய சம்மேளனங்களுக்கு முன்னர் இக் கொடுப்பனவு வழங்கப்படாத நிலையில் தற்போது வங்கிக் கணக்கில் வைப்பீடு செய்யப்பட்டுவருவதாக விவசாய சம்மேளனங்களின் தலைவர்கள் அவ்வப் பகுதி விவசாயிகளுக்கு அறிவித்துள்ளனர். நேற்றுமுன்தினம் முதல் இக் கொடுப்பனவு ஒரு பரப்பு நெல் அழிவுக்கு 120 ரூபா வீதம் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (இ)

## முரசின் இன்றைய பலன்

(14.01.2015 புதன்கிழமை)

ஜய வருஷம் மார்கழி மாதம் 30 ஆம் திகதி.
நவமி / சித்தம்.
சுவாதி நட்சத்திரம் பின் இரவு 04.55 வரை. பின் விசாகம்.
இராகு காலம 12.34 - 02.04 வரை. சுபநேரம 05.04 - 06.34 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** — வேலைப்பளுவினால் தேக நலம் பாதிப்படைதல்.

**ரிஷபம்** — வாய்ச்சொல்லினால் கொடுத்த கடன் வந்தடைதல்.

**மிதுனம்** — வெளியூர் பயணம் பற்றிய சுப செய்தி நண்பரால் கிட்டிவிடல்.

**கடகம்** — முரண்பட்டிருந்த சகோதரர் உறவில் சுமுகநிலை ஏற்படவ்.

**சிம்மம்** — போலியானவை வந்தடையும் அபாய நிலை.

**கன்னி** — ஏழரைச்சனி நீங்கியதனால் பயணத்தைத்தொடர விரும்புதல்.

**துலாம்** — இடமாற்றம் தற்காலிகமாக இரத்துச் செய்யப்படல்.

**விருச்சிகம்** — சொத்துப்பங்கீடு சம்பந்தமாக சகோதரர் மத்தியில் பிரச்சினை எழுதல்.

**தனுசு** — அட்டமத்துக் குரு இருப்பதினால் நிலுவைகள் கைக்கெட்டாது இழுபடல்.

**மகரம்** — இழுபட்டிருந்த விவாகம் புரிந்துணர்வினால் வெற்றியடைதல்.

**கும்பம்** — ஈகோவைக் கைவிட்டதனால் கவின் நிலை ஏற்படல்.

**மீனம்** — கௌரவப்பதவிகள் கிடைக்க சிபார்சு ஏற்படல்.

# சிறுவர் துஷ்பிரயோகங்கள் வடமாகாணத்தில் அதிகரிப்பு

## சிறுவர் நன்னடத்தை ஆணையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் சிறுவர்களுக்கு எதிரான துன்புறுத்தல்கள் கடந்த 2014 ஆம் வருடத்தில் அதிகரித்துள்ளதாக வடமாகாண சிறுவர் நன்னடத்தை ஆணையாளர் ரீ.விஸ்பரூபன் நேற்று செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தத்துக்கு பின்னரான காலப்பகுதியில் இவ்வாறான சமூக, கலாசார சீரழிவுகள் இடம்பெற்று வருகின்றன. கடவுள் நம்பிக்கை இல்லாது இளைஞர்கள் தவறான வழியில் செல்வதனால் அவர்களுக்குரிய கட்டுப்பாடு இல்லாமல் இருக்கின்றது. இதனால் சிறுவர் துஷபிரயோகங்களைக் கட்டுப்படுத்த முடியாமல் போகின்றது.

வடமாகாணத்தில் கடந்த வருடம் சிறுவர்களுக்கு எதிரான பல்வேறு வகையான 958 குற்றச் செயல்கள் இடம்பெற்றுள்ளன. 150 சிறுவர்கள் பாலியல் துன்புறுத்தல்களுக்குள்ளாகியும், 57 சிறுவர் பாலியல் துன்புறுத்தல் முயற்சியில் பாதிக்கப்பட்டும், 118 சிறுவர்கள் பாலியல் சேட்டைகளுக்கு உட்படுத்தப்பட்டும், 56 சிறுவர்கள் உளவியல் ரீதியாக பாதிப்புக்குள்ளாகியும் உள்ளனர்.

இதனைவிட, 122 சிறுவர்கள் புறக்கணிக்கப்பட்டும், 14 சிறுவர்கள் கடத்தப்பட்டும், 6 சிறுவர்கள் நெருக்கடிகளுக்குள்ளாகியும், 40 சிறுவர்கள் அச்சுறுத்தல்களுக்குள்ளாகியும், 71 சிறுவர்கள் தனித்து வாழ்ந்தும், 66 சிறுவர்கள் இளவயதுத்திருமணம் செய்தும், 22 சிறுவர்கள் குடும்பங்களின் பாரங்களை சுமந்தவாறும், 198 சிறுவர்கள் வேறும் துன்புறுத்தல் நடவடிக்கைகளுக்கு உள்ளாகியும் உள்ளனர்.

26 சிறுவர்கள் தற்கொலைக்கு முயற்சித்தும், 12 பேர் தற்கொலை செய்தும் உள்ளனர். சிறுவர் பாலியல் சேஷ்டைகள், புறக்கணிக்கப்பட்ட சிறுவர்கள், தனித்திருக்கும் சிறுவர்கள், இளவயது திருமணம், குடும்பங்களில் பாரத்தை சுமத்தல் ஆகியவற்றில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சிறுவர்கள் அதிகளவாக காணப்படுகின்றனர்.

சிறுவர்கள் பாலியல் துன்புறுத்தல்கள் யாழ்.மாவட்டத்தில் அதிகளவில் காணப்படுகின்றன. இவர்களுக்குரிய மாற்று நடவடிக்கைகளை உரிய மாவட்ட, பிரதேச செயலகங்களின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளூடாக மேற்கொண்டு வருகின்றோம். அனைத்து தரப்பினரும் ஒன்று சேர்ந்து சிறுவர்களின் மற்றும் அவர்களின் பாதுகாப்பு தொடர்பில் அக்கறை செலுத்தி, சிறுவர்களுக்கான சமுதாய கட்டமைப்புக்களை ஒழுங்கு முறையில் சீர்செய்து சிறுவர்களின் எதிர்காலத்தை கட்டியெழுப்ப முடியும் என அவர் தெரிவித்தார்.

# பேறறிஞர் தாமோதரம்பிள்ளைக்கு சிலை அமைப்பதற்கு ஏற்பாடு



யாழ்ப்பாணம் சிறுப்பிட்டியில் பிறந்த தமிழ்ப் பேறறிஞர் சி.வை.தாமோதரம்பிள்யையின் சைவ,தமிழ் பணியினைகௌரவிக்கும் முகமாகவும், பேறறிஞரை அடுத்த தலைமுறையினருக்கு அறிமுகப்படுத்தவும். அவரின் நினைவுகளினூடாக இந்து தமிழ் வாழ்க்கை நெறிக்கு மக்களை இட்டுச்செல்லவும் பேறறிஞரின் சிலையினை அமைப்பதற்கும் பேறறிஞர் சி.வை.தாமோதரம்பிள்ளை ஒன்றியத்தால் தீர்மானிக்கப்பட்டது.

கடந்த 1 ஆம் திகதி சிறுப்பிட்டி சி.வை.தாமோதரம்பிள்ளை ஒன்றிய பெரியவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. எதிர்வரும் புரட்டாதிமாதம் பேறறிஞரின் பிறந்ததினத்தில் சிலையை திறந்துவைக்க தீர்மானிக்கப்பட்டது.

இந்நிகழ்வு ஒன்றியத்தலைவர் ஸ்ரீஸ்கந்தராஜா தலைமையில் நடைபெற்றதுடன், அங்கு ஒன்றியத்தின் செயலாளர், உறுப்பினர்களுடன் இந்துசமயசெயற்பாட்டாளர் துஷ்யந்தன் கலந்துகொண்டார். இச்சிலையினை "சிவசிற்பவாருதி" உ.கஜேந்திரன் வடிவமைக்க உள்ளார். இவர் மாதகலில் 21 அடிசிவனின் சிற்பத்தினை செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வலம்புரிச்சங்குகள் ஆலயத்திற்கு அன்பளிப்பு

இந்தியாவிலிருந்து கொண்டுவந்த 108 வலம்புரிச்சங்குகளை பக்த அடியார் ஒருவர் பருத்தித்துறை பசுபதீஸ்வரர் (சிவன் ஆலயம்) ஆலயத்திற்கு அன்பளிப்புச் செய்துள்ளார்.

இவ் வலம்புரிச்சங்குகள் தைப்பொங்கல் தினத்தன்று பசுபதீஸ்வரர் ஆலயத்தில் மக்கள் பார்வைக்கு வைக்கப்படவுள்ளன.

தைப்பொங்கலன்றும் மறுதினமும் இந்த 108 வலம்புரிச்சங்குகளால் சிவபெருமானுக்கு சங்காபிஷேகம் நடைபெறவுள்ளதாகவும் பக்த அடியாரான ஏ.அச்சகுமார் தெரிவித்துள்ளார். (01)

## பாம்புக்கடிக்கு இலக்கான மாணவன் வைத்தியசாலையில்

வட வரணிப்பிரதேசத்தில் தற்போது பாம்புக் கடிக்கு உள்ளாவோர் அதிகரித்துள்ளனர்.

காடுகளில் மழைநீர் தேங்கி வழிவதால் மேட்டு நிலங்களில் பாம்புகள் அதிகமாக காணப்படுகின்றன.

கடந்த சனிக்கிழமை சிமிழ் கண்ணகை புரத்தைச் சேர்ந்த யாழ. வரணி மத்திய கல்லூரி மாணவன் ரா.விநோதன் (வயது -14) விறகெடுக்கச் சென்றவேளை பாம்புக்கடிக்கு உள்ளாகி மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (150)

# துரிதகதியில் புனரமைக்கப்படும் யாழ். மாநகரசபைக்குட்பட்ட வீதிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபைக்குட்பட்ட நல்லூர் ஜே. 100 கிராம சேவகர் பிரிவின் கீழ்வரும் சுமார் 150 மீற்றர் நீளமான கலட்டி இராமநாதன் வீதி மற்றும் ஜே/102 கிராமசேவகர் பிரிவின் கீழ் வரும் யாழ் பல்கலைக்கழக விடுதிக்கு முன்பாக செல்லும் 100 மீற்றர் நீளமான வீதியும் புனரமைக்கப்பட்டுள்ளன.

இந்த வீதியை அவசியம் புனரமைத்து தருமாறு இப்பகுதி பொது மக்கள் ஈபிடிபியின் நல்லூர் பிரதேச அமைப்பாளர் அம்பலம் இரவீதிரதாசன் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவிடம் விடுத்த வேண்டுகோளை அடுத்து இரு வீதிகளுக்குமாக மொத்தம் 2.75 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அவ்வாறே மின் விளக்குகள் இன்மையால் இருளில் மூழ்கியுள்ள நல்லூர் ஜே126 கிராம சேவகர் பிரிவின் கீழ் வரும் கொக்குவில் கிழக்கு பொற்பதிவீதி, கோணாவளை வீதி, நாமகள் வீதி, குளக்கரை வீதி ஆகிய வீதிகளுக்கு மின் குமிழ்கள் பொருத்தவென வடமாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் சி. தவராசா ஒரு இலட்சம் ரூபாவினை ஒதுக்கியுள்ளார்.

இடம்பெற்ற அனைத்து திருத்த வேலைகளையும் பிரதேச அமைப்பாளர் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

# ஆயுர்வேதம்

## சாப்பிட்டுவிட்டு பகலில் தூங்கக் கூடாது!



எனக்கு இரவில்தான் அலுவலக வேலை. தூக்கம் கெடுகிறது. இரவில் படுத்துத்தூங்கியே பழக்கமுள்ள எனக்கு இந்த புதிய அலுவல் காரணமாக தூக்கம் கெடுவதால் ஊடலில் கடுப்பு வலி. தலையில் பாரம், இமைகள் கனத்தல் போன்ற உபாதைகள் என்னைப பாடாய்ப்படுத்துகின்றன. இதற்கு ஏதேனும் சிகிச்சைமுறை உள்ளதா?

**எம்.கல்பனா, மாதவரம் சென்னை.**

தூக்கம் என்பது ஓர் இயற்கை வரம். அதைத் தடுப்பதால் நோய்கள் வருகின்றன. பல நோய்நிலைகளில் வேதனை காரண மாக தூக்கம் தானே வருவதில்லை. இது ஒரு வகை. இங்கு தூக்கம் வருவதை நாம் தடுக்கவில்லை. தூக்கம் வரும்போது நாம் வேறு காரியங்களில் ஈடுபடுவதன் காரணமாக அதைத் தவிர்க்கிறோம். அதனால் தலைச்சுற்றுதல், தலையில் பாரம், இமைகள் கனத்தல், கொட்டாவி, உடலெங்கும் கடுப்புவலி போன்ற உபாதைகள் ஏற்படும்.

இரவில் விழித்திருக்க வேண்டிய கட்டாயம் உள்ளவர்கள் பகலில் அரைகுறையாகத் தூங்கக் கூடாது. பகலில் வீடு வந்து சேர்ந்ததும் உடனே உணவைச் சாப்பிடாமல் ஒரு குறிப்பிட்ட நேரத்தில தினம் தூங்க எத்தனித்தால் அதுவே பழக்கமாகி தூக்கம் நன்றாக வரும்.

பொதுவாகவே பகல் தூக்கத்தை ஆயுர்வேதம் வலியுறுத்தவில்லை. பகலில் உணவைச் சாப்பிட்ட பிறகு தூங்குவதால் உடலில் கொழுப்பு அடைப்பு, நீரிழிவு உபாதை, உடல் பருமன், கல்லீரல் வீக்கம போன்ற உபாதைகள் அதிகம் ஏற்பட வாய்ப்புள்ளது.

அதனால் வேலை முடிந்து வீடு வந்து சேர்ந்ததும் கை, கால் முகம் கழுவி சுகம் தரும் ஒரு படுக்கையில் சுமார் ஐந்து முதல் ஏழு மணிநேரம் வரை உறங்கலாம். இரவு தூக்கத்தைத் தொலைத்த வர்கள் பகலில் உறங்குவதால் தவறேதுமில்லை.

இருந்தாலும் உணவைச் சாப்பிட்டு பகலில் உறங்கினால் அதனுடைய தாமதமான செரிமானம் மப்பு நிலையை ஏற்படுத்தி உடலின் உட்புறக்குழாய்களில் ஒருவிதமான பிசுபிசுப்பையும் தழப்பையும் ஏற்படுத்தக்கூடும். இந்த உட்புறக் குழாய்களில் ஏற்படும் இந்த பிசுபிசுப்புத் தன்மை பல நோய்களுக்கும் வித்தாக அமையக் கூடும்.

அதனால் வெறும் வயிற்றில் படுத்துறங்குபவர்களுக்கு நல்ல நித்திரை ஏற்படுவதால் உடல் லேசாகிறது. இமை கனத்தல், உடல் வலி, கடுப்புவலி போன்ற தொல்லைகளிலிருந்து விடுபடலாம்.

பகல் தூக்கம் முடிந்து எழுந்ததும் பல் துலக்கி. நாக்கை வழித்து வாயை வெந்நீர் விட்டுக் கொப்பளிப்பதும், சிறிது வெந்நீரை உள்ளுக்குச் சாப்பிடுவதும், குடல் உட்புற சுத்தத்தை ஏற்படுத்தித் தரும்.

பகல் தூக்கத்திற்குப் பிறகு பொதுவாக உடல்பளுவைக் கூட்டும் மாப் பண்டங்களாகிய இட்லி, தோசை போன்றவற்றைத் தவிர்த்து அவற்றிற்கு மாற்றாக சூடான புழுங்கலரிசி சோற்றுடன் மிளகு, சீரகம், பூண்டு ஆகியவற்றைச் சேர்த்து சூடான ரசம் சாதம் சாப்பிடுவதும், கறிவேப்பிலை, கொத்துமல்லி, புதினா போன்றவற்றைத் துவையலாக செய்த சாப்பிடுவதும் உசிதமாகும்.


அதற்குக் காரணம் பகல் தூக்கத்தின் வாயிலாக நாம் பட்டினியாகக் கிடந்து உறங்கினாலும் உட்புறப் பிசுபிசுப்பு அணுக்களில் ஏற்படத்தான் செய்யும். அதை மாப்பண்டங்கள் மேலும் வளர்த்து விடக்கூடிய அபாயம் இருப்பதால் இதுபோன்ற சூட்டைத் தரும் மிளகு, சீரகம், பூண்டு போன்ற உணவுப்பதார்த்தங்கள் அந்த பிசுபிசுப்பை அகற்றுவதோடு மட்டுமல்லாமல் உட்புறக்குழாய்களிலும் தாதுக்களிலும் ஒரே சீரான சூட்டை பரப்பிவிட்டு அவற்றின் செயற்பாடுகளைத் துரிதப்படுத்துவதால் அதுவே உடல் போஷணைக்கு ஏதுவாகிறது.

பகல் தூக்கத்தை பொதுவாக ஆயுர்வேதம் வரவேற்பதில்லை என்பதால் அலுவல் நிர்ப்பந்தம் காரணமாக இரவில் வேலை செய்ய வேண்டியுள்ளவர்கள் அவ் வேலைகளை பகலுக்கு மாற்றிக் கொள்ள ஏதேனும் வழி உள்ளதா என்று மாற்று ஏற்பாடுகளைச் செய்ய முயற்சிக்க வேண்டும்.

ஆயுர்வேத மருந்துகளாகிய ச்யவனப்ராசம், ப்ரம்ம ரஸாயனம், அஸ்வகந்தாதி லேஹ்யம், அஸ்வகந்தாரிஷ்டம், பலாரிஷ்டம், தசமூலாரிஷ்டம், மஹாமாஷதைலம், பலா அஸ்வகந்தாதி தைலம் போன்றவை உடலுக்கு வலுவூட்டக்கூடியவை. தூக்கத்தின இழப்பினால் துன்பப்படுபவர்களுக்கு இவை நல்ல ரசாயன மருந்துகளாக உள்ளும் புறமும் பயன்படும்.

இவற்றில் எது மிகுந்த பயனைத் தரும் என்பதை ஆயுர்வேத மருத்துவர் மட்டுமே அறிவர் என்பதால் அவர்களின் ஆலோசனையின்படி நீங்கள் சாப்பிட்டு வரலாம்.


# பாப்பரசரின் இலங்கை விஜய பதிவுகள்...














# மனித உரிமை விவகாரம் குறித்து புதிய அரசு பேச்சு நடத்த வேண்டும்

## அமெரிக்க ராஜாங்க செயலாளர் வலியுறுத்து

(கொழும்பு)

**மனித உரிமைகள் விவகாரங்கள் உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்து, புதிய அரசாங்கம் விரைவில் பேச்சுக்களில் ஈடுபட வேண்டும் என்று அமெரிக்க இராஜாங்க செயலர் ஜோன் கெரி தெரி வித்துள்ளார்.**

இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள அவர், குஜராத் மாநிலம் காந்திநகரில் செய்தியாளர்களிடம் பேசும் போதே இதனைத் தெரிவித் துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசிய வாழ்த்து தெரிவித் திருந்தார் ஜோன் கெரி.


இந்த நிலையில் நேற்று முன்தினம் இலங்கை விவகாரம் குறித்து அவர் மேலும் கருத்து வெளியி டுகையில்,

இலங்கையின் புதிய அரசாங்கம், மனித உரிமை விவகாரங்கள் உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்து உடனடியாக பேச்சுக்களில் ஈடுபட வேண்டும்.

இலங்கையின் புதிய ஜனாதிபதியுடன் நடத்திய தொலைபேசி உரையாடலின் போது இலங்கையுடனான அமெரிக்காவின் உறவு தற்போது வலுப்படுத்தப்படும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளேன்.

தேர்தலுக்கு முன்னர், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுடன் தொலைபேசியில் பேசிய போது, என்ன நடந்தாலும், அமைதியான செயற்முறைகள் முக்கியமானவை என்று எடுத்துக் கூறியிருந்தேன்.

இலங்கையில் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் தேர்தல் நடத்தப்பட்டு, அமைதியான முறையில் அதிகார மாற்றம் இடம்பெற்றது நல்லது.



எனினும், இலங்கையில் இன்னமும் உண்மையான சவால்கள் உள்ளன.

மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் விவகாரங்கள் உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்து உடனடியாக பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு மைத்திரிபால சிறிசேனவுடனான உரையாடலின் போது கேட்டுக் கொண்டேன்.

இலங்கையில் நாம் இப்போது வேறொரு விளைவை ஏற்படுத்த முடியும் என்று நம்புகிறோம். என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# சிவபூமி ஆச்சிரமத்தில் நாவலர் குருபூசை



யாழ்.குப்பிளான் சிவபூமி ஞான ஆசிரமத்தில் அண்மையில் நாவலர் குருபூசை விழா சிறப்பாக இடம்பெற்றது.

சிவபூமி அறக்கட்டளையின் செயலாளர் ஸ்ரீவிக்கினேஸ்வரன் தலைமையில். இடம்பெற்ற நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழகச் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

கூட்டுப் பிரார்த்தனை,விசேட பூஜை வழிபாடு என்பவற்றைத் தொடர்ந்துதலைமையுரை, பிரதம விருந்தினர் உரை என்பன இடம்பெற்றன.

இதன் போது கிராமத்தைச் சேர்ந்த சிறுவர்களின் நாவலர் தொடர்பான பேச்சு நிகழ்வும் நடைபெற்றது.

பேச்சு நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்கள் அனைவருக்கும் ஆசிரமம் சார்பாக ஊக்குவிப்புப் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து கலந்து கொண்ட அடியவர்கள் அனைவருக்கும் அன்னதானம் பரிமாறப்பட்டது.

44. பாட்டும் கதையும் கேட்க விருப்பமானவர் யார்? ..........................................

45. முழுநிலா பவனிவரும் நாள் எப்பெயர் கொண்டு அழைக்கப்படும்? ..........................................


46. வீதி எனும் சொல்லுக்குரிய ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக? ..........................................


47. வானம் எனும் சொல்லுக்குரிய எதிர்கருத்துச் சொல்லை எழுதுக? ..........................................

பின்வரும் சொற்களுக்கான ஆங்கிலச் சொற்களை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக


48. நிலா ........................ 49. வீதி ........................ 50. நீலம் ........................


ஒரு உருவத்தினை அமைப்பதற்கு

 ஒரு முறையும்,  இரண்டு முறையும்

 மூன்று முறையும்,  நான்கு முறையும் பயன்படுத்தலாம்.

இந்த அடிப்படையில் அமையப் பெற்றுள்ள சரியான உருவத்தைத் தேர்ந்தெடுத்து அதன் கீழ்க் கோடிடுக

51. 

52. 

பின்வரும் கட்டங்களில் சில விலங்குகளின் பெயர்கள் உள்ளன. அவற்றைக் கொண்டு வினா இல 53 - 55 வரையிலான வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

| | | |
|---|---|---|
| A<br>அன்னம் | B<br>வெளவால் | C<br>மீன் |
| D<br>திமிங்கலம் | E<br>தவளை | F<br>கடல் ஆமை |
| G<br>முதலை | H<br>வாத்து | F<br>கொக்கு |

53. நீரோடு மாத்திரம் தொடர்புடைய அங்கிகள் உள்ள கட்டங்களாவன
1) A,C 2) D,F 3) C,D

54. நீரோடும், நிலத்தோடும் தொடர்புடைய அங்கிகள் உள்ள கட்டங்களாவன
1) A,D,G,H 2) D,G,H,F 3) E,G,H,F

55. பாலூட்டி விலங்குகள் உள்ள கட்டங்களாவன
1) B,D 2) B,G 3) B.E

நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

(1).230 (2).470 (3).II (4).II (5).I (6).III (7).II (8).II (9).I (10).I
(11).II (12).III (13).II (14).I (15).III (16).I (17).I (18).III (19).I (20).I
(21).1,3 (22).3,5 (23.IV

பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்



## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015


பகுதி - I
1 மணி 15 நிமிடம்



# கல்வி முரசு

1 தொடக்கம் 13 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய சரியான விடையைத் தெரிவு செய்க

கீழ்வரும் படங்களை அவதானித்து கேட்கப்பட்ட வினாக்களுக்குச் சரியான விடையின் கீழ் கோடிடுக




01. ஓர் இசைக்கருவியைக் குறிக்கும் எழுத்து
1) H 2) T 3) S

02. மிகப் பெரிய உருவத்தைக் கொண்ட மிருகம்
1) G 2) C 3) B

03. R உருவில் உள்ள தொழிலாளி அழைக்கப்படுவது
1) தச்சன் 2) கொத்தன் 3) கொல்லன்

04. இதில் குயவனைக் குறிக்கும் எழுத்து
1) F 2) N 3) M

05. எரிபொருளினால் இயங்குபவற்றை மாத்திரம் குறிக்கும் தொகுதி
1) IB 2) JL 3) QI

06. தளபாடங்களை மாத்திரம் குறிக்கும் தொகுதி
1) KS 2) KH 3) NO

07. இதில் வேகமாக ஓடக்கூடிய மிருகத்தைக் குறிக்கும் எழுத்து
1) B 2) C 3) F

08. இதில் சுறுசுறுப்புக்கு உதாரணப் படுத்தக்கூடிய பிராணியைக் குறிக்கும் எழுத்து
1) A 2) D 3) G

09. பின்வருவனவற்றுள் தொழிலாளிகளை மாத்திரம் குறிக்கும் தொகுதி
1) FQR 2) MPQ 3) MNP


10. F எழுத்தால் குறித்துக் காட்டப்பட்டுள்ள தொழிலாளியின் கைத்தொழிலுக்கு தேவைப்படும் மூலப் பொருட்களை குறிக்கும் தொகுதி
1) களிமண்ணும்,நீரும் 2) களிமண்ணும்,மணலும் 3) மணலும்,நீரும்


11. Q எழுத்தால் குறித்துக் காட்டப்பட்டுள்ள தொழிலாளியின் கைத்தொழிலுக்கு தேவைப்படும் பிரதான மூலப்பொருள்
1) மூங்கில் 2) பிரம்பு 3) கயிறு

12. R உருவால் குறித்துக் காட்டப்பட்டுள்ள தொழிலாளியினால் தயாரிக்கப்பட்ட முடிவுப் பொருட்களை குறிக்கும் தொகுதி
1) KE 2) NO 3) KS

13. T எழுத்தால் குறித்துக் காட்டப்பட்டுள்ள இசைக்கருவியானது ஒரு
 1) நரம்புக்கருவி  2) காற்றுக் கருவி  3) கஞ்சக்கருவி


கீழேயுள்ள உருக்களில் ஒரு உரு வித்தியாசமானது. அவ்வுருவைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக

14.



15.


16.


17.


18.


19 - 21 வரையிலான வினாக்களில் முதலில் தரப்பட்டுள்ள உருச்சோடிகளை அவதானித்து அதற்கு ஏற்றபடி மூன்றாவதாகத் தரப்பட்டுள்ள உருவுக்குப் பொருந்தக்கூடிய உருவைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக



கட்டமிட்டுக் காட்டப்பட்டுள்ள எழுத்துக்களையும், எண்களையும் நன்கு அவதானித்து 22 - 26 வரையிலான வினாக்களில் தரப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய செயலாற்றுக

| 13 | 27 | 12 | 41 | 35 | 18 | 16 | 10 | 7 |
|---|---|---|---|---|---|---|---|---|
| P | M | A | Z | Y | N | C | F | J |

22. ஆங்கில நெடுங்கணக்கு வரிசையின் முதலாவது எழுத்தைச் சுற்றி வட்டமிடுக
23. மிகப்பெரிய இரட்டை எண்ணைச் சுற்றி ஒரு சதுரம் வரைக
24. மனிதன் எனும் கருத்தைத் தரும் ஆங்கில எழுத்துக்களைச் சுற்றி முக்கோணங்கள் வரைக
25. 4ஆம், 7ஆம், 9ஆம் இலக்கங்களின் கூட்டுத்தொகை யாது?
........................................................................................................................
26. மேலுள்ள எண்களை ஏறுவரிசைப்படுத்தும் போது 5ஆவதாக வரும் எண்ணை எழுதுக
........................................................................................................................



பின்வரும் பந்தியை வாசித்தபின் இல 27 - 30 வரையிலான வினாக்களுக்காக தரப்பட்டுள்ள கூற்றுகள் சரியாயின் (சரி) எனவும், பிழையாயின் (பிழை) எனவும் சரியாக கூறமுடியாது எனின் (Q) எனவும் அடைப்புக்குள் எழுதுக

27. கடற்கரையோரமாக உலாவுவதற்கு நாங்கள் குடும்ப சகிதம் சென்றிருந்தோம் ( )
28. அம்மா அண்ணாவுக்குப் பட்டம் வாங்கிக் கொடுத்தார் ( )
29. சிறுவர்கள் கடலோரமாக விளையாட்டுக்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர் ( )
30. நான் அம்மாவின் கையைப் பிடித்தபடி நடந்தேன் ( )

வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ் கோடிடுக

31. விமலா இரவு பகலாக கற்றலில் ஈடுபட்டதனால் பரீட்சையில் உயர் புள்ளிகளைப் பெற்றாள். இந்நிகழ்வுக்குப் பொருத்தமான பழமொழி
 1) நடந்த கால்சீதேவி  2) இளமையிற் கல்வி சிலையில் எழுத்து  3) முயற்சி திருவினையாக்கும்

32. தான் பரீட்சையில் சித்தியடைந்த செய்தியைத் தெரிவிக்க, வீட்டுக்கு ஓடிய துசானுக்கு, வெளிநாட்டிலிருந்து அவனது அப்பா வந்திருந்தது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. துசானின் இச் சம்பவத்துக்குப் பொருத்தமான மரபுச்சொற்றொடர்
 1) பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல
 2) கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போல
 3) கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது போல

33. சீலன் பாடங்களைக் கற்பதில் மிக்க ஆர்வமுள்ளவன். ஆனால், தான் கற்றவற்றை மற்றவர்களுக்குச் சொல்லிக்கொடுப்பதில் விருப்புக் குறைந்தவன். சீலனைப் பற்றிக் கூறுவதாயின் அவன் ஒரு
 1) கெட்டிக்கார மாணவன்  2) முயற்சியுள்ளவன்  3) சுயநலம் கொண்டவன்

34. இலங்கையின் தேசிய மரம் எது?
 1) ஆலமரம்  2) நாகமரம்  3) அரசமரம்

35. நகரம் ஒன்றில் இருக்கக்கூடிய பொதுமக்கள் பாவனைக்குக்கான அரசாங்கக் கட்டிடம் ஒன்று பின்வருவன வற்றுள் எது?
 1) பாடசாலை  2) பள்ளிவாசல்  3) புகையிரத நிலையம்

36. பூச்சி இனங்களில் அடங்காத பிராணி எது?
 1) சிலந்தி  2) கரப்பான்  3) பொன்வண்டு

37. மதி எனும் கருத்தைப் புலப்படுத்தாத ஒரு சொல் எது?
 1) சந்திரன்  2) அறிவு  3) கடமை

38. சிவப்பு நிறத்தையும், நீல நிறத்தையும் கலந்தால் பெறப்படும் நிறம் எது?
 1) செம்மஞ்சள்  2) கருநீலம்  3) ஊதா

39. சாதாரண தபால் ஒன்றை அனுப்புவதற்குத் தேவையான முத்திரையின் பெறுமதி யாது?
 1) ரூ.4.50  2) ரூ.5.00  3) ரூ.3.50

40. பதிவுத் தபால் ஒன்றை அனுப்புவதற்குத் தேவையான முத்திரையின் பெறுமதி யாது?
 1) ரூ.20.00  2) ரூ.30.00  3) ரூ.50.00

பின்வரும்பாடலை வாசித்த பின் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக

> நீலவான வீதியில் அழகுப் புதுநிலா
> பாலொளியைப் பரப்பியே பவனி வரும் திருவிழா
> பாலர் பாடியாடிட பாட்டும் கதையும் கேட்டிட
> பாரிலுள்ளோர் மகிழ்ந்திட பவனிவரும் முழுநிலா!

41. பாடலில் கூறப்படுகின்ற காட்சி எந்த நேரத்துக்குரியது? ........................................
42. பாடலில் பாலுக்கு ஒப்பிடப்பட்டுள்ளது எது? ........................................
43. பாடலிலுள்ள எழுவாய் அடைமொழிச் சொல் ஒன்று எழுதுக? ........................................

# தேசிய நிறைவேற்று சபையில் இணைந்து கொள்ளும் ஜே.வி.பி

## அமைச்சரவையில் அல்ல என்கிறார் அநுர

(கொழும்பு)

**புதிதாக அமைந்த தேசிய அரசில் ஜே.வி.பி. அங்கம் வகிக்காது ஆனால் அமைச்சரவைக்கும் மேலான தேசிய நிறைவேற்று சபை அமைக்கப்பட வேண்டும் என்ற எமது யோசனையை ஏற்றால் அதில் எமது கட்சி இணையும்' இவ்வாறு அக்கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அதன் தலைவர் அனுரகுமர திஸநாயக்க தெரிவித்தார்.**



தேசிய அரசில் இணையுமாறு ஜே.வி.பிக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.எனினும் நாம் அதில் இணையமாட்டோம் அமைச்சுப் பதவிகளையும் ஏற்கமாட்டோம்.

100 நாட்களுக்குள் மக்கள் எதிர்பார்ப்பதை செய்யமுடியாது என விளக்கி அதற்கான விளக்கத்தையும் அநுரகுமார திஸாநாயக்க வழங்கினார். மேலும் வீடு அமைப்பதற்கு அடிக்கல் நாட்டுவதற்குள் வீடமைப்பு அமைச்சின் பதவிக் காலம் முடிவடைந்து விடும். பாடசாலையில் ஓர் தவணை ஆரம்பமாகி அது முடிந்து அடுத்த தவணை ஆரம்பமாவதற்குள் 100 நாட்கள் முடிவடைந்து விடும். எனவே, இது குறுகிய காலப்பகுதியாகும். இதே வேளை, ஜனநாயகத்தை உறுதிப்படுத்தில், நல்லாட்சியை ஏற்படுத்தல், ஊழல் மோசடிகளை தடுத்தல் ஆகியவற்றை முதலில செய்துமுடிக்க வேண்டும். இதனையே மக்கள் முதற்கட்டமாக எதிர்பார்க்கின்றனர். அதை நிறைவேற்றுவதற்கான கடப்பாடு எமக்கு இருக்கின்றது.

குறிப்பாக, இந்த 100 நாட்கள் வேலைத் திட்டத்துக்குள், வெற்றிபெறக்கூடிய திட்டங்களை மக்கள் கட்டாயம் பெற்றுக் கொள்ளவேண்டும்.

எனினும், பெரிதாக எதிர்பார்புகளை வைக்க வேண்டாம். மக்களுக்கு தேவையானவற்றை பெற்றுக்கொடுப்பதற்கு தேவையான தலையீடுகளை, அழுத்தங்களை ஜே.வி.பி. நிச்சயம் பிரயோகிக்கும் என்ற உறுதி மொழியையும் இதன்போது அவர் வழங்கினார். 100 நாட்கள் வேலைத்திட்டம் மீது, பெரிதாக நம்பிக்கை இல்லாததால், அமைச்சரவைக்கும் மேலான வகையில் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் உள்ளடங்கலாக தேசிய நிறைவேற்று அதிகார சபையொன்றை அமைக்க வேண்டும் என்ற யோசனையை ஜே.வி.பி. முன்வைக்கின்றது. இவ்வாறு இடம்பெறுமானால், ஜே.வி.பி. அதில் பங்கேற்கும். அமையவுள்ள தேசிய நிறைவேற்று அதிகார சபைக்கு முக்கிய விடயங்களை பகிர வேண்டும்.

அமைச்சுகளால் விரைந்து செய்ய முடியாதவற்றை இதற்குள் உள்வாங்க வேண்டும். குறிப்பாக அரசமைப்பின் 18 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கி 17 ஆவது திருத்தச்சட்டத்தை அமுலாக்குதல், ஜனாதிபதி பதவியில நிறைவேற்று முறையில் மாற்றம் கொண்டுவருதல், அரசமைப்பு மறுசீரமைப்பு ஆகியவற்றை இதனூடாக செய்யமுடியும்.

தகவல் அறியும் சட்ட வரைவை நிறைவேற்றிக்கொள்ளுதல், இலஞ்ச, ஊழல் விசாரணை குழுவின் அதிகாரத்தை பலப்படுத்தல் ஆகியவற்றையும் செய்து முடிக்கலாம் என்றும் அநுரகுமார திஸநாயக்க மேலும் தெரிவித்தார்.

# கல்விக் கண்காட்சியை நடாத்த வலயக்கல்வி அலுவலகம் ஏற்பாடு

யுனிசெவ் நிறுவனத்தின் நிதியுதவி அனுசரனையுடன் யாழ்ப்பாண கல்வி வலயப் பாடசாலைகளை ஒருங்கிணைத்து கல்விக்கண்காட்சி ஒன்றினை விரைவில் ஒழுங்கமைத்து நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக வலயக் கல்வி அலுவலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இக்கண்காட்சியின் முதற்கட்ட நடவடிக்கையாக யாழ்ப்பாண வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் பாடசாலை மட்டத்தில ஜனவரிமாத நடுப் பகுதிக்குள் கண்காட்சி ஒன்றினை நடாத்தி அதிலிருநந்து தெரிவு செய்யப்படும் தரமான ஆக்கங்கள் மற்றும் புத்தாக்கங்கள் வலய மட்டத்தில் நடாத்தப்படவுள்ள கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் வலயமட்டப் போட்டிகளைத் தொடர்ந்து வலய மட்டத்தில் தெரிவு செய்யப்படும் ஆக்கங்கள் மாகாணமட்ட கல்விக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே பாடசாலை அதிபர்கள இது தொடர்பாக ஆசிரியர்கள், மாணவர்களுக்கு தகவல்களை வழங்கி அதற்கான முன்னாயத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (03)

# மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒருவரால் கட்சியை கட்டியெழுப்ப முடியாது

## ஜனகபண்டார தென்னக்கோன் தெரிவிப்பு

(கொழும்பு)



மக்களால் நிராகரிக்கப்பட்ட தேர்தலில் தோல்வியடைந்த ஒருவரினால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மீளக் கட்டியெழுப்ப முடியாது என முன்னாள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சியின் கீழ் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மீளக்கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

கட்சியின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் கூடி என்னை கட்சியின் தேசிய அமைப்பாளராக நியமித்தனர்.

இதற்கு முன்னர் பல ஆண்டுகளாக கட்சியின் சிரேஷ்ட உப தலைவராக நான் கடமையாற்றியிருக்கின்றேன்.

இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திரக் கட்சியின் தலைவரும், செயலாளரும் தனித்தனியாக போட்டியிட்டனர்.


நான் தலைவரின் வெற்றிக்காக உழைத்தேன். எனினும், தேர்தலில் கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன வெற்றியீட்டினார்.

கட்சியையும், கட்சியின் உறுப்பினர்களையும் பாதுகாத்துக் கொள்ள சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவின் பெரும்பான்மையினர் மைத்திரிபால சிறிசேனவை தலைவராக நியமித்துள்ளனர்.

இந்த தீர்மானத்திற்கு சவால் விடுக்க எவராலும் முடியாது.

மக்களினால் நிராகரிக்கப்பட்ட வேட்பாளர் ஒருவரினால் கட்சியை மீளக்கட்டியெழுப்ப முடியாது என ஜனக பண்டார தென்னக்கோன் சிங்கள ஊடக மொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

# மீன்பிடிக்கச் சென்ற சிறுவன் கடலில் மூழ்கி மரணம்



மன்னார் சௌத்பார் கிராமத்தைச் சேர்ந்த சிறுவன் ஒருவன் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை கடற்றொழிலுக்குச் சென்ற நிலையில் குறித்த சிறுவன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை கடலில் மூழ்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

-மன்னார் சௌத்பார் கிராமத்தைச் சேர்ந்த யோகராசா கிஸாந்தன் (வயது-17) என்ற சிறுவன் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 2.30 மணியளவில் தனது வீட்டில் இருந்து சௌத்பார் கடற்புரப்பில சிறிய ரக படகு (வள்ளம்) ஒன்றில் தனியாக மீன் பிடிக்கச் சென்றுள்ளார்.

மீன் பிடிக்கச் சென்ற சிறுவன் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணியாகிய நிலையிலும் வீடு திரும்பாமை குறித்து சிறுவனின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் கடற்கரை பகுதிக்குச் சென்று தேடுதல்களை மேற்கொண்டுள்ளனர்.


எனினும் குறித்த சிறுவன் தொடர்பில் எவ்வித தகவல்களும கிடைக்கவில்லை.

இந்த நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை முதல் அப்பகுதி மீனவர்கள் கடலில் கடுமையான தேடுதல் களை மேற்கொண்ட நிலையில் கடற்கரையில் இருந்து சுமார் 200 மீற்றர் தொலைவில் குறித்த சிறுவன் தொழிலுக்கு கொண்டு சென்ற சிறிய ரக படகு (வள்ளம்) மற்றும் ,வலைத் தொகுதிகள் என்பன கடலில் மூழ்கிய நிலையில் மீட்கப்பட்டன.

அதனைத தொடர்ந்து கடற்படை யினரின் உதவியுடன் தொடர்ச்சியாக மீனவர்கள் கடலில் தேடுதல்களை மேற்கொண்ட போது நேற்று முன்தினம் மாலை 3 மணியளவில் குறித்த சிறுவன் கடலில் மூழ்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

சடலம் தற்போது மன்னார் பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# துணிச்சலாக வாக்களித்த மக்களுக்கு கனேடிய அரசு பாராட்டு தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் தமது வாக்குப்பலத்தைப் பிரயோகிப்பதற்காக எந்தவித தயக்கமுமின்றி செயற்பட்ட லட்சக்கணக்கணக்கான வாக்காளர்களை கனடா பாராட்டுவதாக தெரிவித்துள்ளது.

இலங்கையின் புதிய ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டுள்ள மைத்திரிபால சிறிசேனவையும் கனடா வரவேற்றுள்ளது.

புதிய ஜனாதிபதி மற்றும் புதிய அரசாங்கம் தெரிவுசெய்யபபட்டுள்ளமை தொடர்பில் கனேடிய அரசாங்கத்தின் சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்தியிலே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பயாட் இந்த விடயங்களைத் தெரிவித்துள்ளார்.

நடந்து முடிந்த தேர்தலின் போது பிரதான பங்கினை வகித்த இலங்கையின் குடியியல் சமூகம் சார்ந்த தேர்தல் கண் காணிப்பாளர்களின் செயற்பாடு களை கனடா மதிப்பதாகவும், அவர் குறிப்பிட்டுள்ளார்.

வாக்காளர்கள் தங்களின் விருப்பங்களை சுதந்திரமாக வெளியிடுவதற்கு காத்திரமான பங்கினை வகித்த தேர்தல்கள் ஆணையாளரின் செயற்பாடுகள் பாராட்டத்தக்கவை என்றும் கனடாவின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பயாட் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனர்திபதி மைத்திரிபால சிறிசேன இலங்கையில் பன்முக ஆட்சி இடம்பெறுவதற்கும் நேர்மையான அதிகாரப் பகிர்விற்கும் இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்திற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவார் என கனடா நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இதுதவிர, இலங்கையுடான வரலாற்று உறவில் ஒரு புதிய சகாப்தத்தை கனடா எதிர்பார்ப்பதாகவும் கனேடிய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார்.

# முறையற்ற விதத்தில் பயன்படும் ஜனாதிபதி செயலக வாகனங்கள்

(கொழும்பு)

ஜனாதிபதி செயலகத்திற்கு சொந்தமான பெரும் எண்ணிக்கையிலான வாகனங்கள் தற்போது நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்படுவதாக தகவல் கிடைத்துள்ளதென ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

மேலும் பல வாகனங்கள் பல்வேறு இடங்களில் பாகங்களாக பிரிக்கப்படுவதாகவும் அறியக்கிடைத்துள்ளதாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆகையால் இதுவரை ஒப்படைக்கப்படாத வாகனங்கள் இருந்தால் அவற்றை உடனடியாக ஒப்படைக்குமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பிலான விசாரணையை ஜனாதிபதி குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் கையளித்துள்ளதாக ஜனாதிபதி செயலகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

வாழ்க வளமுடன்

பெயர் : சா.சுபகீதன்
முகவரி: 43, யமுனா வீதி, நல்லூர்.



அகவை 3 இல்
பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

# அமெரிக்க இராணுவ ட்விட்டரை அதிரடியாக முடக்கியது ஐ.எஸ்.ஐ.



(புளோரிடா)
அமெரிக்க இராணுவத்தின் மத்திய கட்டளைப் பிரிவின் ட்விட்டர் மற்றும் யூடியூப் கணக்குகளை ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் ஆதரவாளர்கள் முடக்கினர்.

அமெரிக்க இராணுவத்தின் மத்திய கட்டளைப் பிரிவு புளோரிடா மாநிலத்தில் உள்ள டம்பாவில் அமைந்துள்ளது. இந்த பிரிவு ஈராக், சிரியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் தீவிரவாதத்துக்கு எதிராக அமெரிக்கா நடாத்தி வரும் போரை கண்காணித்து வருகிறது.

இந்நிலையில் ஐஎஸ் ஐ.எஸ் அமைப்பின் ஆதரவாளர்கள் மத்திய கட்டளைப் பிரிவின் ட்விட்டர் மற்றும் யூடியூப் கணக்குகளை முடக்கினர். இதை அமெரிக்க இராணுவமும் உறுதி செய்தது.

அல்லாஹ் பெயரால் சைபர் கலிபாத் ஜிஹாதை தொடரும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இதையடுத்து மத்திய கட்டளைப் பிரிவின் ட்விட்டர் கணக்கு சிறிது நேரம் வேலை செய்யா மல் இருந்தது. அதன் பிறகு ட்விட்டர் கணக்கு மீண்டும் இராணு வத்தின் கட்டுபாட்டில் வந்து விட்டது. சைபர் பாதுகாப்பு பற்றி அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா உரை நிகழ்த்திய கையோடு இராணுவத்தின் ட்விட்டர் கணக்கு முடக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

உலகச் செய்திகள்

# உயிரினம் வாழக்கூடிய 8 கிரகங்கள் கண்டுபிடிப்பு



அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா, விண்வெளிக்கு அனுப்பியுள்ள கெப்லர் எனும் விண்கலம் ஆயிரத்துக்கும் அதிகமான புதிய கிரகங்களைக் கண்டு பிடித்துள்ளது.

அந்த கிரகங்களில் 8 கிரகங்கள் பூமியை விட 2 மடங்கு சிறியவை என்றும் அங்கு உயிரினங்கள் வாழும் சாத்திய கூறுகள் உள்ளதாகவும் நாசா தெரிவித்துள்ளது.

மேலும் சூரியகுடும்பத்திலிருந்து வெகு தொலைவில் உள்ள 1 இலட்சத்து 50 ஆயிரம் நட்சத்திரங்களும் கண்டறியப்பட்டு அவை குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

புதிதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள 1000 கிரகங்களின் 554 கிரகங்களை மாத்திரம் நாசா ஆய்வுக்காக தேர்ந்தெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

# 7 தீவிரவாதிகளுக்கு பாக். இல் தூக்கு நிறைவேற்றப்பட்டுள்ளது

பாகிஸ்தானில் தீவிரவாத தாக்குதல்களில் மரண தண்டனை பெற்ற 7 தீவிரவாதிகள் தூக்கிலிடப்பட்டனர். முன்னாள் இராணுவ ஆட்சியாளர் பர்வேஸ் முஷாரப்பை கொலை செய்ய நடாத்தப்பட்ட தாக்குதலில் தொடர்புடையை பாகிஸ்தான் விமானப்படை தொழில் நுட்ப பணியாளருக்கும் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

பாகிஸ்தானில் கடந்த மாதம் 16 ஆம் திகதி பெஷாவர் பள்ளியில் தலிபான் தீவிரவாதிகள் கொலைவெறித் தாக்குதல் நடாத்தினர். இந்த தாக்குதலில் 145 குழந்தைகள் உட்பட 150 பேர் பலியாகினர். இந்த கோர சம்பவத்தை அடுத்து பாகிஸ்தானில் மரண தண்டனையை நிறைவேற்ற விதிக்கப்பட்ட தடையை பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரீப் நீக்கினார். இதனையடுத்து தீவிரவாதிகள் தொடர்ந்து தூக்கிலிடப்பட்டு வருகின்றனர். இதுவரையில் 15 பேர் தூக்கிலிடப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தானில் தீவிரவாதிகளுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதை அடுத்து, பாகிஸ்தானில் ஆளும் கட்சியின் தலைவர்களைக் குறிவைத்து தாக்குதல் நடாத்துவோம் என்று தலிபான் தீவிரவாத இயக்கம் மிரட்டல் விடுதுள்ளமை குறிப்பிட்டத்தக்கது.

# ஏயர் ஏசியா விமானத்தின் கறுப்புபெட்டியின் பாகம் மீட்பு



ஏயர் ஏசியா விமானத்தின் கறுப்பு பெட்டியின் மற்றொரு பாகமும் மீட்கப்பட்டுள்ளதாக இந்தோனேஷிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த டிசம்பர் 28 ஆம் திகதி இந்தோனேஷியாவிலிருந்து சிங்கப்பூருக்கு 162 பயணிகளுடன் சென்ற QZ8501 விமானம் ஜாவா கடலில் விழுந்து விபத்துக்குள்ளானதில் அனைவரும் பலியாகியுள்ளனர்.

இந்நிலையில் விமான போக்குவரத்து கட்டுப்பாட்டு அறையை தொடர்பு கொண்டு பேசியவற்றை பதிவு செய்த கருவியான காக்பிட் வொய்ஸ் ரெக்கார்டர்(Cockpit Voice Recorder) கிடைக்கவில்லை என கூறப்பட்டு வந்தது. அந்த கருவி தற்போது இந்தோனேஷிய அதிகாரிகளால் மீட்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த விமானம் விபத்துக்குள்ளானது எப்படி? என்பது தொடர்பாக புதிய தகவல் தற்போது வெளியாகியுள்ளது.

இதுவரை மீட்கப்பட்ட விமானத்தின் பாகங்களில் ஏற்பட்டுள்ள சிதைவை ஆய்வு செய்து பார்த்த வகையில், கடறபகுதியை நோக்கி வேகமாக கீழே இறங்கியபடி பறந்த போது, எதிர்பாராத விதமாக ஏற்பட்ட புவி ஈர்ப்பு விசையின் மாற்றத்தால் விமானத்தின் கேபின் பகுதியில் அழுத்தம் அதிகமாகி இருக்கலாம். அந்த அழுத்தத்தை சமப்படுத்துவதற்குள் தரையை நோக்கி பாய்ந்த விமானம் கடலின் மீது மோதி விழுந்ததில் அது வெடித்து சிதறியிருக்கலாம் என விபத்துக்குள்ளான ஏர் ஏசியா விமானத்தை தேடும் மற்றும் மீட்புப் படையின் ஒருங்கிணைப்பாளரான எஸ்.பி.சுப்ரியாடி கூறியுள்ளார்.

# இந்தியா மறுப்பு

(புதுடில்லி)

ஆப்கான் மூலமாக பாகிஸ்தான் மீது இந்தியா தாக்குதலை நடாத்துவதாக கூறிய பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீபின் ஆலோசகர் சர்தாஜ் அஜீஸ் குற்றச்சாட்டுக்கு இந்தியா கடுமையான பதிலடி கொடுத்துள்ளது.

இதுதொடர்பில் வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் சையது அக்பருதீன். கூறுகையில்,

தீவிரவாதத்தை யார் ஊக்குவிக்கிறார்கள், யார் ஒடுக்க நினைக்கிறார்கள் என்று நாம் அனைவரும் அறிவோம். மேலும், தீவிரவாதிகளின் பாதுகாப்பான உறைவிடமாக விளங்கும் பாகிஸ்தானின் சவால்களை மூடி மறைக்கும் முயற்சி இது என்றும் தெரிவித்தார்.

# டில்லி சட்டசபைத் தேர்தல் பா.ஜ.க. தீவிர ஆலோசனை

டில்லி சட்டசபைத் தேர்தல் எதிர்வரும் பெப்ரவரி 7ஆம் ஆம் திகதி நடைபெறும் என்று இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் வி.எஸ்.சம்பந் நேற்று முன்தினம் மாலை அறிவிப்பு வெளியிட்டார். இதனைத் தொடர்ந்து அங்கு நடத்தை விதிமுறைகள் உடனடியாக அமுலுக்கு வந்துள்ளன.




இதனைத் தொடர்ந்து பா.ஜ.க. தேசிய தலைவர் அமித்ஷா தலைமையில் பா.ஜ.க. தலைவர்கள், டில்லி சட்டசபை தேர்தல் குறித்து நேற்று முன்தினம் மாலை ஆலோசனைக் கூட்டம் நடாத்தினர்.

அந்த கூட்டத்தில் அமித்ஷா பேசியது குறித்து பா.ஜ.க வட்டாரங்கள் கூறுகையில், வாக்குசாவடிகள் மற்றும் வாக்காளர்களைச் சென்றடைவது உள்ளிட்டவற்றில் அதிக கவனம் செலுத்த வேண்டும் எனவும் ஒவ்வொரு தொகுதியிலும் வேட்பாளர் களை கண்டறிய வேண்டும் என்றும் கூறியதாக தெரிவித்தனர்.

மேலும் இன்னும் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குள் பாஜக தேர்வுக்குழு, டில்லி சட்டசபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் பட்டியலை இறுதி செய்யும் என்று தெரிவித்தனர்.

வேட்பு மனு தாக்கல் இன்று புதன்கிழமை தொடங்குகிறது. நாட்டின் தலைநகரான டில்லியில் வெற்றி பெற்று புதிய அரசை அமைக்க வேண்டும் என்ற முனைப்பில் பா.ஜ.க. தீவிரம் காட்டி வருகிறது.

# விஷமாக மாறியது மதுபானம் மொசாம்பிக்கில் 56 பேர் பலி



(மாபுட்டோ)

மொசாம்பிக் நாட்டில் விழாக் காலத்தின்போது பாரம்பரியமாக தயாரிக்கப்படும் போம்பே எனும் மது வகை விஷமாக மாறியது. இந்த மதுவை அருந்திய ஒரு குழந்தை உட்பட 56 பேர் பரிதாபமாக பலியாகினர். மேலும் 39 பேர் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

ஆபிரிக்க கண்டத்தில் தென் கிழக்கு கடற்பகுதியில் மொசாம்பிக நாடு அமைந்துள்ளது. இங்கு பிறப்பு, இறப்பு மற்றும் திருவிழாக்காலங்களில் அரிசி குருணை, தவிடு மற்றும் விலங்குகளின் கொழுப்புகளை ஊற வைத்து பாரம்பரியமாக போம்பே எனும் மதுவை தயாரித்து மக்கள் அருந்துவார்கள்.

இந்நிலையில் மொசாம்பிக் நாட்டின் தலைநகர் மாபுட்டோ அருகே காட்டுப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை ஒருவர் மரணமடைந்தார்.

அவரது துக்க நிகழ்ச்சியில் ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். அன்றிரவு இறுதி காரியங்கள் முடிந்ததும் அவர்களுக்கு கறி விருந்துடன் போம்பே மதுவும் வழங்கப்பட்டது. பாரம்பரியமாக தயாரிக்கப்பட்ட போம்பே மதுவை 2 வயது குழந்தை உட்பட ஏராளமான மக்கள் குடித்தனர்.

சில மணி நேரத்தில் மதுவை குடித்த சுமார் 100 பேருக்கு வாந்தி மயக்கம் ஏற்பட்டது. இதில் 56 பேர் பரிதாபமாக பலியானார்கள். மேலும் 39 பேர் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களுக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. துக்க வீட்டில் மது அருந்திய 56 பேர் உயிரிழந்த சம்பவம் அந்தப் பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# வெளிவிவகார அமைச்சுக்கு செயலாளராக சித்ராங்கனி

வெளிவிவகார அமைச்சின் செயலாளராக சித்ராங்கனி வாகீஸ்வரா நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜீ.எல்.பீரிஸ் வெளிவிவகார அமைச்சராக கடமையாற்றிய காலத்தில் செனுகா செனவிரட்ன வெளிவிவகார அமைச்சுசெயலாளராக கடமையாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

புதிய அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சராக மங்கள சமரவீர ஏற்கனவே பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

நேற்று வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பதவியிலும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

சித்ராங்கனி கனடாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகராக ஏற்கனவே கடமையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னாள் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் செனுகா செனவிரட்ன பல்வேறு முறைகேடுகளில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

முன்னாள் இராஜதந்திரிகளான தமரா குணநாயகம், தயான் ஜயதிலக்க போன்றவர்கள் செனுகா செனவிரட்ன, வெளிவிவகார அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தன ஆகியோர் மீது குற்றம் சுமத்தியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# காணாமற் போனோரை மீட்டுத்தாருங்கள்

## வவுனியாவில் நேற்று கவனயீர்ப்பு



காணாமல் ஆக்கப்பட்டோரை மீட்டுத்தர வலியுறுத்தி நேற்று செவ்வாய்க்கிழமை வவுனியா நகரசபை விளையாட்டு மைதானத்தில் கூடிய காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அங்கு கவனயீர்ப்பு ஒன்றுகூடலை நடத்தினர்.

தொடர்ந்து பாப்பரசரைத் தரிசித்து தமது நிலைமையை எடுத்து விளக்குவதற்காக உறவுகள் மடு நோக்கிப் பயணமாகினர். காணாமற்போன உறவுகளுக்கு என்ன நடந்தது என்று எந்தப் பதிலும் இல்லாது, அவர்கள் உயிருடன் இருக்கின்றனரா இல்லை என்பது கூடத் தெரியாது நாம் அல்லல்படுகிறோம்.

எமது இந்த அவலத்தை தீர்த்து வைக்க பாப்பரசர் முன்வர வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்தனர். அத்துடன் "திருத்தந்தையே இறுதிப் போரில் சரணடைந்த கணவர், பிள்ளைகள் குறித்து கவனம் செலுத்துங்கள், கேள்வி எழுப்புங்கள், கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட எங்கள் பிள்ளைகள், உறவுகளைத் தேடி அலைகிறோம். எங்களுக்கு ஆறுதல் தாருங்கள்", "தந்தையே உங்கள் பாதம் பதியும் இடம் புனிதமாக இருக்க வேண்டும். இங்கு இனப்படுகொலை மனித உரிமை மீறல்கள் நடைபெற்றுள்ளன.", "உங்கள் பாதம் பதிந்த ஈழமண் விடிவுகாண வேண்டும் பொதுசன வாக்கெடுபபுக்கு பரிந்துரை செய்யுங்கள்" "திருத்தந்தையே அடிமைப்பட்டுள்ள தமிழ் மக்கள்மீது கருணை காட்டுங்கள் "எங்கள் இன விடுதலைக்கு ஆசீர்வதியுங்கள்" "தடுப்புக்காவலில் உள்ள எங்கள் பிள்ளைகளை மீட்டுத்தாருங்கள்", "திருத்தந்தையே உங்கள் பாதம் பதியும் மண், எங்கள் உறவுகளின் குருதியில் குளித்த மண் இனப் படுகொலை நடந்த மண்" உள்ளிட்ட பதாதைகளை ஏந்தியவாறு உறவுகள் கவனயீர்ப்பில் ஈடுபட்டனர். தொடர்ந்து மடுத்திருத்தலம் நோக்கி தமது பயணத்தை ஆரம்பித்தனர். (70)

# நூறுநாள் வேலைத்திட்டத்தில் மக்களின் நலன்கள் நிறைவேறவேண்டும்

## இதுவே எமது எதிர்பார்ப்பு

எங்கள் கோரிக்கைகள் 100 நாள் வேலைத்திட்டத்தில் நிறைவேற வேண்டும் என்பதே எமது நோக்கம் என வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியா வைரவபுளியங்குளத்தில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு கருத்து தெரிவித்த அவர்,

100 நாட்கள் வேலைத்திட்டத்தில் இடம்பெற்றுள்ள இந்த அமைச்சரவை மூன்று மாதங்கள் இருக்கும். இந் நிலையில் கடந்த அரசில் எங்களுடைய அரச உத்தியோகத்தர்கள், திணைக்களத் தலைவர்கள், கிராம மாதர் சங்கம், கிராம அபிவிருத்திச் சங்கம் இவை அத்தனையையும் தன்னுடைய அமைச்சர்களால் அவர்கள் சொல்லும் வேலையை செய்கின்றவர்களாக கடந்து சென்ற அரசாங்கம் பயன்படுத்தி இருந்தது.

அதன் அடிப்படையில் ஊழல் நிறைந்து போய் இருந்தது. எங்களுடைய பிரதேசம் மற்றும் மக்கள் கவனிப்பாரற்று இருந்தார்கள். அந்த வகையில் அந்த ஆட்சி முடிவுக்கு வந்திருக்கின்றது.

எங்களுடைய அதிகாரிகள் மக்களுக்கு சேவையாற்றும் திறமையுடையவர்கள் அவர்களை அவர்களுடைய பணியை செய்ய விட்டால் மக்களுக்கு நன்மை கிட்டும்.

புதிய அரசாங்கத்திற்கு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு ஆதரவு தெரிவிக்கின்ற காரணத்தால் எங்களுடைய பிரதேசங்கள் முன்னேறுவதற்கான பங்களிப்பு செயற்பாட்டை செய்ய இருக்கின்றோம். அத்துடன் கண்காணிப்பிலும் ஈடுபடுவோம்.

இந் நிலையில் அமைச்சருக்கு பின்னால் போவதும் குறிப்பிட்ட அமைச்சருக்கு தலைசாய்ப்பதுமான நிகழ்வுகள் நிறுத்தப்பட வேண்டும். அதிகாரிகள் தமது திறமையின் அடிப்படையில் செயலாற்ற வேண்டும் என்பதை கேட்டுக்கொள்கின்றேன்.

அமைச்சர்களுக்கு அதிகாரிகள் சலாம் போடுவதை நிறுத்த வேண்டும். நாம் கண்காணித்து அவ்வாறானவர்கள், அவ்வாறான அமைச்சர்கள் தொடர்பில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் உடன் தெரியப்படுத்தி தட்டிக்கேட்கும் வகையில் எமது செயற்பாடு இருக்கும். என்றும் தெரிவித்தார்.

# சுற்றுலாத்துறை அமைச்சின் ஆவணங்கள் தொடர்பில் விசாரணை

(கொழும்பு)

சுற்றுலாத்துறை அமைச்சின் சில ஆவணங்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் நவீன் திசாநாயக்க தெரிவித்தார்.

சுற்றுலாத்துறை அமைச்சில் நேற்று மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பின் பின்னரே அமைச்சர் இதனைக் கூறினார்.

இலங்கை சுற்றுலா மற்றும் அபிவிருத்தி ஊக்குவிப்புப் பணியகத்தின் சில ஆவணங்களை அமைச்சர் நவீன் திசாநாயக்க நேற்று பரிசீலித்தார்.

இதன்போது, சுற்றுலாத் துறைக்குள் சில கோப்புகளை அழிப்பதற்கு முயற்சிகள் நடப்பதாகத் தமக்கு தகவல் கிடைத்துள்ளதென அவர் கூறினார்.

இதனைத் தொடர்ந்து தாம் உடனடியாக சுற்றுலாத்துறை அமைச்சிற்கு சென்று அங்கிருந்த கோப்புக்களுக்கு சீல் வைத்ததாகக் குறிப்பிட்டார்.

### ஊவா..

வித்து கட்சி மாறிய ஐ.தே.க உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சியும் மீண்டும் ஐ.தே.க.வில் இணைந்துள்ளார்.

ஊவா மாகாண எதிர்க்கட்சியான ஐ.தே.க.வில் 13 உறுப்பினர்கள் இருக்கும் நிலையில் அநுர விதானகமகே, வடிவேல் சுரேஷ் உள்ளிட்ட 17 பேர் ஹரீன் பெனாண்டோவை முதலமைச்சராக நியமிக்கக் கோரி சத்தியக்கடிதம் சமர்ப்பித்துள்ளனர்.

### காணாமற்...

இன்று பிற்பகல் 2.30 மணியளவில் மடுத்திருப்பதிக்கு விசேட உலங்கு வானூர்தி மூலமாக வருகை தரவுள்ள பாப்பரசர் பிரான்சிஸ் அங்கு நடைபெறும் விசேட பூஜையில் கலந்து கொள்வார்.

மடுத்திருப்பதியில் ஒரு மணித்தியாலம் தங்கியிருக்கும் பாப்பரசர் அங்கு வருகை தரும் நோயாளர்கள் மற்றும் யுத்தத்தினால் அவயவங்களை இழந்தவர்கள், குடும்பத் தலைவர்களை இழந்த குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் போன்றோரையும் சந்திப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

### நல்லிணக்கம்...

னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க, கிறிஸ்தவ விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் வரவேற்றனர்.

பாப்பரசருக்கு இராணுவ மரியாதை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து அளிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் பாப்பரசருக்கான தேசிய கீதமும் இலங்கையின் தேசிய கீதமும் இசைக்கப்பட்டன.

இலங்கையின் புனிதர் அருளாளர் ஜோசப் வாஸ் அடிகளாரை புனிதராகத் திருநிலைப்படுத்தும் சிறப்புத் திருப்பலியை நிறைவேற்றும் பரிசுத்த பாப்பரசர் வடக்கிற்கு விஜயம் செய்து மடுத் திருப்பதியில் விசேட வழிபாடொன்றை நடத்துவதுடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை உத்தியோகபூர்வமாகச் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று மாலை சர்வமதத் தலைவர்களைச் சந்தித்த பரிசுத்த பாப்பரசர் அங்கு விசேட உரையொன்றையும் நிகழ்த்தினார்.

கொழும்பிலுள்ள வத்திக்கான் அப்போஸ்தலிக்கத் தூதரகத்தில் நடைபெறும் விசேட நிகழ்வில் கலந்துகொள்ளும் பரிசுத்த பாப்பரசர் பேராயரில்லத்தில் கத்தோலிக்க ஆயர் பேரவையினரைச் சந்தித்தார்.

இச் சந்திப்பில் கொழும்பு மறை மாவட்ட பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் வடக்கு, கிழக்கு உட்பட அனைத்து மறை மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஆயர்கள் கலந்து கொண்டனர்.

இதனைத் தவிர, பரிசுத்த பாப்பரசர் இலங்கையில் பங்கேற்கும் முக்கிய நிகழ்வுகளில் இந்தியா, பிலிப்பைன்ஸ் உட்பட சர்வதேச நாடுகளின் கர்தினால்கள், ஆயர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

விமான நிலையத்தில் பரிசுத்த பாப்பரசருக்கு மகத்தான அரச வரவேற்பளிக்கப்படுவதுடன் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் ஆயர்கள், அமைச்சர்கள், அரசியல் பிரமுகர்கள் இந்த வரவேற்பு நிகழ்வில் கலந்து கொண்டனர்.

பரிசுத்த பாப்பரசர் கட்டுநாயக்காவிலிருந்து விசேட ஊர்தி மூலம் கொழும்பு வத்திக்கான் அப்போஸ்தலிக்கத் தூதரகம் வரை அழைத்து வரப்பட்டார். கட்டுநாயக்காவிலிருந்து கொழும்பு வரையிலான பிரதான பாதையின் இருமருங்கிலும் மக்கள் பரிசுத்த பாப்பரசரை வரவேற்றனர்.

தேசியக் கொடிகள் பரிசுத்த பாப்பரசரின் கொடிகள், கொழும்பு உயர் மறை மாவட்டத்தின் கொடிகள் என மக்கள் கொடிகளை அசைத்து ஆரவாரத்துடன் பரிசுத்த பாப்பரசருக்குத் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

இன்று 14 ஆம் திகதி இலங்கையின் வரலாற்றில் முக்கியமானதொரு தினமாகும். இலங்கைத் திருநாட்டிற்கான முதலாவது புனிதரை உத்தியோகபூர்வமாக உலக திருச்சபையின் தலைவரான பரிசுத்த பாப்பரசர் அறிவிக்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

கொழும்பு காலி முகத்திடலில் பிரமாண்டமான முறையில் அமைக்கப்பட்டுள்ள அரங்கில் இலட்சோப இலட்சம் மக்கள் மத்தியில் அருளாளர் ஜோசப் வாஸ் அடிகளார் புனிதராக திருநிலைப்படுத்தப்படுவார். இது இலங்கை வாழ் கத்தோலிக்க மக்கள் வாழ்நாளில் கண்டிராத அரிய நிகழ்வாகும்.

இலங்கை மற்றும் சர்வதேச ஆயர்களுடன் இணைந்து பரிசுத்த பாப்பரசர் நிறைவேற்றும் மாபெரும் கூட்டுத் திருப்பலியின் போது இந்த புனிதத்துவ திருநிலை இடம்பெறும். திருப்பலியில் கலந்து கொள்வதற்கு இலங்கையின் அனைத்துப் பங்கு மட்டங்களிலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால் நாடளாவிய சகல பங்குகளிலிருந்தும் மக்கள் கலந்து கொண்டு இறையாசீரைப் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

அதனையடுத்து பரிசுத்த பாப்பரசர் இன்றையதினமே மடுத்திருப்பதிக்கு விஜயம் செய்யவுள்ளார். அங்கு வடக்கு, கிழக்கு மறை மாவட்டங்களின் ஏற்பாட்டில் மாபெரும் மத வழிபாடு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுமார் பத்து இலட்சம் மக்கள் இந்த வழிபாடுகளில் கலந்து கொள்ளவுள்ளதாக மன்னார் மறை மாவட்டம் அறிவித்துள்ளது. இந்த வழிபாட்டு நிகழ்வையடுத்து கொழும்பு திரும்பும் பரிசுத்த பாப்பரசர் கொழும்பிலுள்ள வத்திக்கான் அப்போஸ்தலிக்க தூதரகத்தில் தங்கி மறுநாள் காலை தமது அடுத்த திருயாத்திரையான பிலிப்பைன்ஸ் விஜயத்தை மேற்கொள்வார்.

### இந்தியா...

அழைப்பினை ஏற்று, எதிர்வரும் 18 ஆம் திகதி அவர் இந்தியாவிற்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர், வெளிநாடொன்றுடன் இடம்பெறும் முக்கிய அதியுயர் சந்திப்பு இதுவாகும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே தொலைபேசியின் ஊடாக மங்கள சமரவீரவுடன் தொடர்பினை ஏற்படுத்திய சுஷ்மா சுவராஜ், இந்த அழைப்பினை விடுத்திருந்தார்.

இவரின் அழைப்பு புதிய வெளிவிவகார அமைச்சரினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ஜனாதிபதி தேர்தல் விவகாரம்; பிரி.நாடாளுமன்றில் விவாதம்

(கொழும்பு)

இலங்கையின் ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் பிரித்தானிய நாடாளுமன்றில் விவாதம் நடத்தப்பட உள்ளது.

இலங்யைில் அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல தொடர்பில் விவாதம் நடத்தப்பட வேண்டுமென பிரபுக்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைய இவ்வாறு விவாதம் நடத்தப்பட உள்ளது.

இலங்கைக்கும் பிரித்தானியாவிற்கும் இடையிலான வர்த்தக உறவுகள் மற்றும் ஜனாதிபதி தேர்தல் குறித்து கடந்த மாதமும் விவாதம் நடத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சர்வதேச கண்காணிப்பாளர்களை தேர்தலின் போது ஈடுபடுத்தப்பட வேண்டுமென பிரித்தானிய நாடாளுமன்றில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

## தனிப்பட்ட அலுவலர்கள் நியமித்தார் பிரதமர்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட காரியாலயத்தின் உத்தியோகத்தர் பிரிவு நேற்று முன்தினம் நியமிக்கப்பட்டுள்ளது.

இதன்படி. பிரதமரின் தனிப்பட்ட செயலாளராக சுகத் சந்திரசேகர நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதமரின் இணைப்புச் செயலாளராக கே.ஜி.தயாராட்ன தெரிவு செய்யப்பட்டதுடன், ஊடக இணைப்புச் செயலாளராக சமன் அதாவுத ஹெட்டி நியமிக்கப்பட்டுள்ளார்.

## விமலின் மைத்துனர் கைது வதந்தி பரப்பியதால் விபரீதம்

வடக்கு பிரதேசத்தில் பல சம்பவங்கள் இடம்பெறுவதாக பொய் பிரசாரங்களை முன்னெடுத்த குற்றச்சாட்டில் முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்சவின் மைத்துனர் என கருதப்படும் ரணசிங்க ரந்துவ முதியன்ச லாகே அஜித்குமார என்பவர் கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நத்தரன்பொத்த, குண்டசாலையில் வசிக்கும் 55 வயதான குறித்த நபர் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

அரசாங்கத்தை அசௌகரியத்திற்கு உட்படுத்தும் வகையில் பிரச்சாரங்களை முன்னெடுத்த குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.



## கடமைகளை பொறுப்பேற்றார் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க

புதிய அரசாங்கத்தின் நிதி அமைச்சராக ரவி கருணாநாயக்க நேற்று முற்பகல் நிதி அமைச்சில் தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார். ரவி கருணாநாயக்க நிதி அமைச்சராக நேற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் சத்தியபிரமாணம் வெய்துக்கொண்டமை தெரிந்ததே.

## ஜனாதிபதி மைத்திரிக்கு இந்து சம்மேளனம் வாழ்த்து

(கொழும்பு)

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் இலங்கையின் 7 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக மேன்மை தங்கிய மைத்திரிபால சிறிசேன தெரிவு செய்யப்பட்டுள்ளமைக்கு இந்து சம்மேளம் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சம்மேளனம் விடுத்துள்ள செய்தியில்,

இந்து கலாசார அமைச்சராகத் தெரிவு செய்யப்ப்பட்டிருக்கும் டி.எம்.சுவாமிநாதனுக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்துக்களுடைய பல பிரச்சினைகள் தீர்க்கப்டாமை தொடர்கதையாக உள்ளது. குறிப்பாக தம்புள்ள ஆலயம், கீரிமலை ஆலயம், கிண்ணியா புனித பூமிபோன்ற விடயங்களில் இவ்வரசாங்கம் கூடிய அக்கறை செலுத்துவதுடன் அரசியல் கைதிகள் விடுதலை, அரசியல் தீர்வு, விதவைகள் மறுவாழ்வு மற்றும் வடகிழக்கிற்கும், மலையகத்திற்கும் விசேட தொழில் வாய்ப்பை வழங்கக்கூடிய வேலைத்திட்டங்கள் போன்ற விடயங்களிலும் செயற்பாட்டு ரீதியிலான தீர்வுகளை பெற்றுக் கொடுப்பார்கள் என நம்புவதோடு இது தொடர்பாக அரசாங்கத்திற்கு எமது பூரண ஒத்துழைப்பை வழங்கத் தயாராக உள்ளோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சதி எதுவும் நடக்கவில்லை மகிந்த மறுப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் முடிவுகளை மாற்றுவதற்கதக பாதுகாப்பு தரப்பினரைப் பயன்படுத்த முயற்சித்ததாக வெளியான தகவல்களை நிராகரிப்பதாக தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அந்த செய்தியில் உண்மையில்லை என்றும் கூறினார்.

## வங்கிக் கணக்கு மீது கணக்காய்வு செய்யக் கோரிக்கை

(கொழும்பு)

'திவிநெகும' வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் வங்கிக் கணக்கில் இருந்து 2015.01.06 ஆம் திகதி 1,456,980,000 ரூபா பணம் பெறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பணத்தை மீளப் பெறுவது குறித்து உரிய விசாரணை நடத்துமாறு கணக்காய்வாளர் நாயகத்திடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கத்தின் பிரதான செயலாளர் சாமர மத்துமகலுகே வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

திவிநெகும என்ற வாழ்வின் எழுச்சித் திட்டம் முன்னாள் பொருளாதார அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் கீழ் இயங்கி வந்தது. பசில் ராஜபக்ஷ இரண்டு நாட்களுக்கு முன்னர் ஐக்கிய அமெரிக்காவிற்கு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சிறிய ரக விமானம் மீட்பு

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் புதல்வர்கள் பயன்படுத்திய சிறியரக விமானம் ஒன்று பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

நாரஹேன்பிட்டி பொருளாதார மத்திய நிலைய களஞ்சிய சாலையில் இருந்து இந்த விமானம் மீட்கப்பட்டுள்ளது.

முழுமையாக அன்றி உதிரிப் பாகங்களாக பிரிக்கப்பட்ட நிலையில் இந்த விமானம் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விமானத்தில் இரண்டு பேர் பயணம் செய்ய முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கொள்கலன் ஒன்றில் இந்த விமானத்தின் பாகங்களும், பாரிய திரையொன்றும், தொலைக்காட்சி ஒளிபரப்பு சாதனங்களும் மறைத்து வைக்கப்பட்டிருந்தன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதியின் புதல்வர் ஒருவரினால் இந்த பொருட்கள் இலங்கைக்கு தருவிக்கப்பட்டுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைளின் மூலம் தெரிய வந்துள்ளதாக உறுதிப் படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன.

## 'விதைத்ததில் விளைந்தது' நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

ஊடகவியலாளர் அச்சுவேலியூர் மா.ஞானலிங்கம் எழுதிய 'விதைத்ததில் விளைந்தது' என்ற நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 18 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு புத்தூர் ஸ்ரீ சோமாஸ கந்தக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பிரதி அதிபர் ச.லலீசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் சி.நிதர்ஷன் தமிழ்த்தெய்வ வணக்கம் இசைப்பார். யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் நா.மகேந்திரராசா வரவேற்புரையை ஆற்றுவார்.

நிகழ்வில் ஆசியுரைகளை வலிகாமம் கிழக்கு பண்பாட்டுப் பேரவையின் உபதலைவர் நீர்வைமணி கு.தியாகராஜக் குருக்களும், அச்சுவேலி பங்குத் தந்தை அருட்பணி கு.யே.அன்ரனி பாலா ஆகியோர் ஆசியுரைகளை வழங்குவர். வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் ம.பிரதீபன் தொடக்கவுரையையும் உதயன் பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன் வெளியீட்டுரையையும் ஆற்றுவர். சர்வதேச லயன்ஸ் கழகத்தின் மாவட்ட உப ஆளுநர் லயன் டாக்டர் வை.தியாகராசா நூலின் முதற்பிரதியைப் பெற்றுக் கொள்வார். நூலின் மதிப்பீட்டுரையை யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடப் பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பியும் அறிமுகவுரையை மூத்த ஊடகவியலாளர் ந.வித்தியாதரனும் வழங்குவர்.

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி ச.அமிர்தலிங்கம், வடக்கு மாகாண சுதேச வைத்தியத் திணைக்கள ஆணையாளர் டாக்டர் சியாமா துரைரத்தினம், கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ்.சற்குணராசா, புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி அதிபர் இ.இராஜமகேந்திரன் ஆகியோர் வாழ்த்துரைகளை ஆற்றவுள்ளனர்.

நூலாசிரியரின் புதல்வரும் முல்லைத்தீவுக் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளருமாகிய ஞான.ஆதவன் நன்றியுரையை ஆற்றுவார்.

இந்நூல் வலிகாமம் கிழக்குப் பிரதேசத்தில் உள்ள பல்வேறு சிறப்புக்கள் குறித்து உதயன் பத்திரிகையில் தொடர்ச்சியாக எழுதப்பட்ட வலி.கிழக்கு வலம் பகுதியின் தொகுப்பு நூலாகும். (63)


## பத்திரிகை மடிப்பவர்கள் தேவை

யாழ்.நகரில் உள்ள பிரபல பத்திரிகை நிறுவனத்திற்கு பத்திரிகை மடிப்பவர்கள் தேவை. முன் அனுபவம் உள்ளவர்களும், பழக விரும்புபவர்களும் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி : 07775224573


## இந்திய மீன் பிடிப்படகுகள் நீதிமன்றத்தால் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

சேதமடைந்த நிலையில் நெடுந்தீவுக் கடற்பகுதியில் மீட்கப்பட்ட இந்திய மீனவர்களின் இரண்டு படகுகளையும் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதவான் செல்வநாயகம் லெனின்குமார் நேற்று விடுவித்தார்.

படகுகள் பழுதடைந்த நிலையில் கச்சதீவுக் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த போது இலங்கை கடற்படையினரால் கடந்த 2014ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 28ஆம் திகதி காப்பாற்றப்பட்ட 8 இந்திய மீனவர்களின் படகுகளே இவ்வாறு விடுவிக்கப் பட்டன.

இந்திய மீனவர்கள் 8பேரும் டிசம்பர் மாதம் 29ஆம் திகதி விடுவிக்கப்பட்டு இலங்கை கடற்படையினர் ஊடாக இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்ட நிலையில் அவர்களின் படகுகள் தற்போது விடுவிக்கப் பட்டுள்ளன.

## தைப்பொங்கல் விழா

அளவெட்டி, நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் நாளை தைப்பொங்கல வைபவம் பக்திபூர்வமாக நிகழவுள்ளது.

ஆலயமுன்றலில் அதிகாலை 5.00 மணிக்கு பொங்கல் நடைபெற்று அடியார்களுக்கு பிரசாதம் வழங்கப்படும்.

அதனை அடுத்து வழமையாக நடைபெறும் விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பூசைகள் தொடங்கும். 9.00 மணிக்கு பொங்கல் சார்பான சமய நிகழ்வுகள் இடம்பெறும்.

முற்பகல் 10.00 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று ஸ்ரீமத் நாகவரதநாராயண சுவாமி ஸ்ரீதேவி பூமாதேவி சமேதராக அலங்காரத் தண்டிகையில் வீதியுலா எழுந்தருள்வார். (68)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 ஜனவரி 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.